வெளியீடு 17-3-2004 Issued 17-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 7, 2003 – தொகுதி 54

**Friday the 7th November, 2003 – Volume 54**

V211, 31'P04
P04.54.
185086.

...டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...islative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

...00] [Price Rs. 3.00

**7-11-2003**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | ix-xiii |
| Governor and Council of Ministers | xv-xviii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxiii-xxxiii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஏழாவது பட்டியல்) | 37-73 |
| **2. விதி 111-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருத்த அறிக்கை—** | |
| வேலைநிறுத்தம் செய்ததற்காக விசாரணைக்குட் படுத்தப்படும் அரசு ஊழியர்கள் எண்ணிக்கையில் திருத்தம் | 74 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல் | 75-77 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 77-78 |

| | பக்கங்கள் |
| --- | --- |
| **4. அறிவிப்புகள்—** | |
| (அ) மதுரை காமராஜ் பல்கலைக் கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக் கழக கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு | 78-79 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) | 82 |
| (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) | 83 |
| (ஈ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2003 (ஆ.இ.) | 187 |
| (உ) ஒரு முக்கிய பிரச்சினையை எடுத்துக் கொள்வது குறித்து | 198 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| (அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சி, பழைய சர்க்கார்பதி பகுதியில் பாலப் பணிகள் முடிவடையாதது | 79-81 |
| (ஆ) விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (1 முதல் 3 வரை) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன) | 232-237 |
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 82-83 |


180806




| | பக்கங்கள் |
| --- | --- |
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி | |
| (ஆ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 83-84 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003 | 84-134 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 84, 95, 102, 105-112, 114, 131-134 |
| திரு. சி. ஞானசேகரன் | 85-93 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 96-103 |
| திரு. ஜி.கே. மணி | 104-120 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 121-127 |
| (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 134-186 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 135, 149-165 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 135, 137-138, 140-143, 162-163, 183, 186 |
| திரு. ஆற்காடு நா. வீராசாமி | 136-140, 142-144 |
| திரு. சி. சிவசாமி | 144-149 |
| திரு. ஜி.கே. மணி | 165-169 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 172-180 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 180-183 |

பக்கங்கள்

9. **அரசினர் தீர்மானங்கள்**—தொடர்ச்சி

(அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 204-205

(ஆ) இந்து மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை 206

(i) இந்து நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 1-ஐ ஏற்று ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை அளித்தலும் முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று அதனை இரத்து செய்தலும் 206-208

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 207

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 207-208

(ii) இந்து நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 2-ஐ ஏற்று 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல் 208-210

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 209-210

(iii) முரசொலி நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 3-ஐ ஏற்று 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல் 210-211

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 210-211, 212

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 228





பக்கங்கள்

10. **தனி நபர் தீர்மானமும் வாக்கெடுப்பும்**— 227

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரையின் (©) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளித்தல்

திரு. லா. சந்தானம் 227

11. **பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்**— 229-231

*பக்கங்கள்*

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 187-189

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 187,189

(ஈ) தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2003. — 189-198

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 190

திரு. சி. ஞானசேகரன் — 190

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 190,195-196,198

திரு. ஜி.கே. மணி — 190-191

திரு. வை. சிவபுண்ணியம் — 191-192

திரு. போளூர் வரதன் — 192-194

(உ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 212-214

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 212,214

(ஊ) தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 214-216

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 215,216

(எ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 — 216-218

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 217,218

(ஏ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன் வடிவு, 2003 — 219-220





*பக்கங்கள்*

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 219,220

(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 221-222

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 221-222

(ஒ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 223-225

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 223,225

(ஓ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 225-226

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 225,226

**8. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவைஉரிமை மீறல் குறித்த அறிக்கை — 199

(ஆ) இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் குறித்த அறிக்கை — 199

திரு. துரைமுருகன் — 200

திரு. சி. ஞானசேகரன் — 200

திரு. ஜி.கே. மணி — 200-201

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 201

திரு. சோ. இராசேந்திரன் — 201

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 202, 203

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் — 202,203

**9. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல் — 204-206

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**
*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.*

6. கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
*கல்வி தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**
*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.*

8. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.*

9. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.*

10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**
*ஆதிதிராவிடர் நலன்,பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.*



11. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், தொழிலாளர்கள, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.*

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
*தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.*

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**
*குடிசைத் தொழிலகள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத தொழில் வாரியம்.*

14. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ... **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**
*வணிச வரிகள் மற்றும் கூட்டுறவு.*

15. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
*உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.*

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:**
*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள, ஊரகக் கடன்கள, நகாப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர்*

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்-திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியாகள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. நிதி அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபு சாரா எரிசக்தி மேம்பாடு. |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P. S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways. Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue, Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance. Planning. Elections and Legislature, Legislation. Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-Conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Education** | .. | **The Hon. Thiru S. Semmalai:** Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 7. **Minister for Health** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare. |
| 8. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 9. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 10. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 11. **Minister for Transport and Labour** | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports, Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 12. **Minister for Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru K. Pandurangan:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 14. **Minister for Commercial Taxes and Co-operation** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes and Co-operation. |
| 15. **Minister for Food** | .. | **The Hon. Thiru P. Mohan:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 16. **Minister for Local Administration** | .. | **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P.V. Damodhiran:** Animal Husbandry. |
| 18. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 19. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 20. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |

| | | |
|---|---|---|
| **21. Minister for Handlooms and Textiles** | - | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **22. Minister for Fisheries** | - | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **23. Minister for Tourism** | - | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| **24. Minister for Backward Classes** | - | **The Hon. Thiru P. Annavi:** Backward Classes. Most Backward Classes and Denotified Communities. |
| **25. Minister for Information and Publicity** | - | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| **26. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ. கு. தமிழரசன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

---

* 3-11-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: கால்நடை பராமரிப்பு.

18. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

21. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: கைத்தறி மற்றும் துணித் தொழில்.

22. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மீன்வளம்.

23. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்: சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

24. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.



25. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல, திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

26. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

| | | |
|---|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பதராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ. | - | குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - | செங்கல்பட்டு |

65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்



88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி.

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செவ)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி. ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே. என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி



132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

| | |
|---|---|
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 155. பாப்பாசுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 157. பாரிமோகன், திரு. கி. | - தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | - ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி க. | - திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | - லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | - சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | - கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. பெருமாள், திரு. என்.கே. | - விளாத்திகுளம் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 170. பொன்னம்பலம், திரு. ப. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 171. பொன்னையன், திரு. சி. | - திருச்செங்கோடு |
| 172. போஸ்நர் வாதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 173. மகாலிங்கம், திரு. எஸ். | - அவினாசி (செ.வ.) |
| 174. மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 175. மகேஸ்வரி, திருமதி எஸ். | - கோயம்புத்தூர் மேற்கு |



| | |
|---|---|
| 176. மணி, திரு கோ.சி. | - கும்பகோணம் |
| 177. மணி, திரு. டி. | - விளவங்கோடு |
| 178. மணி, திரு. ஜி.கே. | - பெண்ணாகரம் |
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | - கபிலர்மலை |
| 180. மல்லிகா சின்னசாமி, திருமதி | - முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | - நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | - கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | - தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | - வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆ.கு. | - ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பூ. | - காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | - சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | - புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | - கோபிசெட்டிப்பாளையம |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | - திருமயம் |
| 194. ராதாரவி, திரு. | - சைதாப்பேட்டை |
| 195. ராமசாமி, திரு. பி.சி. | - மொடக்குறிச்சி |
| 196. ராமராஜ், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 197. ராம்குமார், திரு. எம். | - பாபநாசம் |
| 198. ராஜகோபால், திரு. ஆ. | - சிவகாசி |

| | | |
|---|---|---|
| 199. ராஜம்மாள், திருமதி எஸ். | - | தூத்துக்குடி |
| 200. ராஜா, திரு. எச். | - | காரைக்குடி |
| 201. ராஜாங்கம், திரு. வி.ஆர். | - | சோழவந்தான் |
| 202. ராஜு, திரு. எச்.எம். | - | உதகமண்டலம் |
| 203. ரெங்கநாதன், திரு. என். | - | பூம்புகார் |
| 204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | - | பேரூர் |
| 205. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - | அரவக்குறிச்சி |
| 207. வடிவேல், திரு. ஆர். | - | வாணியம்பாடி |
| 208. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 209. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 211. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 212. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 213. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்கா நகர் |
| 215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 217. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 219. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்-I |



| | | |
|---|---|---|
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | | பல்லடம் |
| 222. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 223. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - | ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | - | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | - | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | - | பொள்ளாச்சி |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | - | ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 233. ஹக்கீம், திரு. எம்.ஏ. | - | மதுரை மத்தி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஐப்பசி 21, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 நவம்பர் 7, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"*

ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து அவற்றைப் பண்பார்ந்த முறையில் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் நல்ல கடமைகள் என்றே கொள்ளப்படும்.

### 1. வினாக்கள் - விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 81, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்.*

**81—**

**அரசு கலைக் கல்லூரி**

***20611—திரு. வி.கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு கலைக் கல்லூரிகளில் இட நெருக்கடியைத் தவிர்க்க முறைமாற்றம் (shift) முறையை அரசு எப்போது அமல்படுத்தும்?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

[2003 நவம்பர் 7

அரசு கலைக் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கபட்டுள்ள நிலையில் அரசு கலைக் கல்லூரிகள் புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கும்பொழுது அக்கல்லூரியில் முறைமாற்றம் கொண்டு வருவது குறித்து, இணைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற்று அந்தந்தக் கல்லூரிகளிலேயே, அப்படிப்பட்ட வகுப்புகளை நடத்திக் கொள்ளலாம். அந்த முறை இப்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வி.கே லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகாலமாக, நான் சட்டமன்றத்திற்கு உள்ளே காலடி எடுத்து வைத்ததிலிருந்து எங்கள் தொகுதியிலே ஓர் அரசு கலைக் கல்லூரியோ அல்லது உதவி பெறும் கலைக் கல்லூரியோ வேண்டுமென்று கேட்காத உறுப்பினர்களே கிடையாது. ஆனால், அதற்கெல்லாம் இல்லையென்ற பதில்தான் வந்திருக்கிறது. பெரும்பாலும், அப்படிச் சொல்வதற்குக் காரணம், அரசுக்கு ஏற்படுகிற தொடரும், மற்றும் தொடராச் செலவுகள்தான் என்பதை நன்கு உணர்வேன். இருந்தாலும் கூட மிகுந்த பொருட் செலவில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற அந்தக் கட்டடங்கள் வீணாகப் போகின்றன. மிகுந்த பொருட் செலவில் வாங்கப்படுகிற கருவிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை கருத்திலே கொண்டுதான் அரசு கலைக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகளிலும் இதுபோல் shift முறையை முன்மாதிரியாக நாம் கொண்டு வந்தோம் என்று சொன்னால் நிறைய மாணவர்களைச் சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இப்போது சாதாரணமாக அரசு கலைக் கல்லூரிகளிலே ஏழையெளிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள்தான் அதிகமாக படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே shift முறை வருமென்று சொன்னால் அதிகமான தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் நம்புகிறேன். மேலும் முதுகலை படிப்பைப் படிப்பதற்கு இப்போது 10 இடம், 11 இடம் என்றுதான் ஒதுக்கப்படுகிறது. இப்போது shift முறை வருமென்று சொன்னால் முதுகலைப் படிப்பு கூட ஒரு கல்லூரியிலே 20 இடங்கள் அல்லது 30 இடங்கள் என ஒதுக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே அரசு கலைக் கல்லூரிகளிலும், அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகளிலும் shift முறையை அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசு அடுத்த ஆண்டிலிருந்தாவது முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, இந்தக் கல்லூரிகளிலே ஒருவேளை சில கல்லூரிகளில்—



2003 நவம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன், இந்தக் கேள்வியோடு முடியுங்கள். இன்னொரு வாய்ப்பு தருகிறேன், முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்களே அரசு உதவி பெறுகிற கல்லூரியினுடைய நிருவாகி என்பதை நான் அறிவேன். எனவே இப்போது அரசு கலைக் கல்லூரிகளில் எப்படி shift முறை அமலாக்கப்படுகிறதோ, அதுபோல் அரசு உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் ஆகியவற்றில் இதுபோன்ற shift முறையை வைத்துக் கொள்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இதற்குக் காரணமே, சுயநிதிக் கல்லூரிகள் அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இதுபோன்ற shift முறையின் மூலம் அதிக மாணவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், regular course-ஐ விட job-oriented, self-financing courses ஆரம்பிப்பதற்கு அதிலே வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைபபோல் shift முறையில் self-financing course-ஐயோ அல்லது job-oriented course-ஐயோ ஆரம்பிக்கிறபோது அதற்கென்று கட்டணங்கள் வசூல் செய்தாலும், மற்ற ஏழையெளிய மாணவர்கள் பாதிக்காத அளவுக்கு, regular course-க்கு இப்போது எப்படி கல்விக் கட்டணம் இல்லாமல், அதிக செலவு இல்லாமல் படிக்க வைக்கிற முறை இருக்கிறதோ, அந்த முறைக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் படிக்க அரசும் பார்த்துக்கொள்கிறது; சுயநிதிக் கல்லூரிகள் நடத்துகிற நிர்வாகிகளும் பார்த்துக்கொள்ள வேண்டும். இட நெருக்கடி அரசுக் கல்லூரிகளில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிற, அந்த வகுப்புகளில் 30 சதவிகித இடம் அதிகமாக ஒதுக்கீடு செய்து மாணவர்களை நாம் சேர்த்து வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏழையெளிய மாணவர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பற்றி இங்கே கருத்தைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இப்போது பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-05

நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டிலிருந்து முதுகலை பட்டப் படிப்பிற்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு இலவசமாக கல்வி அளிப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். எனவே முதுகலை பட்டப் படிப்பு வரைக்கும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு இலவசக் கல்வி

அளிக்கப்படுகிறது. அந்த வகையிலே என்னுடைய வேண்டுகோளெல்லாம் சுயநிதிக் கல்லூரியாக இருந்தாலும் சரி, அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளாக இருந்தாலும் சரி, இதுபோன்ற shift முறைகளில் self-financing course அல்லது job-oriented course ஆரம்பிக்கும்போது, ஏழை எளிய மாணவர்களும் படிக்கக்கூடிய வகையில், அதிக நிதிச் சுமை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் அல்லது சுயநிதிக் கல்லூரிகளை மட்டும் நான் சொல்லவில்லை. அரசு கலைக் கல்லூரிகள் முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கேள்வியே கேட்டேன். குறிப்பாக, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திலே இதுபோன்ற shift முறை அமலில் இல்லை என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, இந்த shift முறையிலே, இரண்டாவது shift-லே vocational course-ஐக் கொண்டுவந்தாலும்கூட அது படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். எனவே அரசு இதை கவனத்தில் கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளிலும் இதுபோன்ற shift முறைகளை அமல்படுத்துவதற்கு நாங்கள் அனுமதி அளித்து இருக்கிறோம். இப்பொழுது பல்கலைக்கழகங்களோடு, அரசு கலைக் கல்லூரிகள் உறுப்புக் கல்லூரிகளாக இணைக்கப்பட்ட பிறகு இதுபோன்ற வாய்ப்புகளுக்கு, இதுபோன்ற, shift system-களிலே நடத்துவதற்கு, மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்குக் கூட அனுமதி அளித்திருக்கிறோம். அதிலே எந்தக் குறைபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக shift முறையிலே வகுப்புகள் தொடங்கப்பட்டிருப்பது பற்றி நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக அரசுக் கல்லூரிகளிலே போதிய எண்ணிக்கையிலே சேர்க்கின்ற நடைமுறை என்பது பல ஆண்டுகளாக இல்லாமல் இருக்கிறது. அது குறிப்பிட்ட எண்ணிக்கையிலே



இருக்கின்ற காரணத்தினாலே, கிராமப்புறங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மிகப் பெரும் இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். இந்த shift முறையிலே அவர்கள் சேர்ந்து படிக்கவேண்டுமானால் கட்டணம் செலுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தக் கட்டணம்கூட செலுத்த முடியாத கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்களுக்கு வசதியாக அரசுக் கல்லூரிகளிலே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை என்றிருப்பதை மாற்றி அதிக எண்ணிக்கையிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் அதிகமாக மாணவ-மாணவிகள் சேருவதற்கு விரும்புகிறார்கள் என்ற நிலை இருப்பதால்தான் தற்பொழுது ஒவ்வொரு பாடப் பிரிவிலும் 30 சதவிகிதம் அதிகமாக மாணவ மாணவிகளைச் சேர்ப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த வகையிலே, கல்விக் கட்டணம் இப்பொழுது என்ன அளவிற்கு வசூல் செய்யப்படுகிறதோ, அதே கல்விக் கட்டணம்தான் இப்பொழுதும் அரசுக் கல்லூரிகளில் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே அதே கட்டணத்தில் படிப்பதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அது அரசுக் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, சுயநிதிக் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளாக இருந்தாலும் சரி, இதுபோன்ற சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய, 'course-கள்' அதேபோல, self-financing course-கள் எந்தக் கல்லூரிகளிலே ஆரம்பித்தாலும், அந்த வகுப்புகளுக்கு அதிகக் கட்டணம் இல்லாமல் அரசு பார்த்துக்கொள்கிறது. அதைப்போல மற்றவர்களும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசினுடைய விருப்பம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கல்லூரிக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருந்தாலும், அரசு பார்த்துக்கொள்ளும் என்று சொல்வதற்கு நன்றி பெரும்பாலும் அரசுக் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரிகளிலே இன்றைக்கு S.C., B.C. மாணவர்கள் சேருகின்றபோது முதலிலே கட்டணத்தைக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு scholarship கொடுக்கிறது. அந்த scholarship

[2003 நவம்பர் 7

உரிய நேரத்திலே கிடைக்காததினாலே, அந்த மாணவர்கள் பணம் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அந்தக் குடும்பத்திலே உள்ள ஏழ்மையான நிலையால், பணம் கட்டமுடியாத நிலையில் பலர் கல்லூரிகளுக்குச் செல்லமுடியாமல் நின்றுவிடுகிறார்கள். அப்படி நிற்கின்ற மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு அரசு ஏதாவது மாற்று வழியைப் பின்பற்றுமா? அதேநேரத்திலே 30 விழுக்காடுகள் இப்போது மாணவர்களுக்கு எண்ணிக்கையைக் கூட்டி, பாடப் பிரிவுகள் துவங்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கிராமப்புறங்களிலே படிக்கின்ற மாணவர்கள், S.C. மாணவர்கள் அல்லது B.C மாணவர்கள் என்று சொல்கின்றபோது 80% இருக்கின்றவர்களுக்குத்தான் அந்த subject கொடுக்கவேண்டுமென்று விதியை வைத்துவிட்டு, ஒவ்வொரு கல்லூரியிலே rank file -லிலே போட்டு நாம் இப்போது admission கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும்போது, கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்களால், competitive-ஆக இருப்பதால் அந்த மார்க் வாங்க முடியவில்லை.

முறபகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், கேள்வி கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** முடித்து விடுகிறேன். Question-ஐ முடிக்க போகிறேன். அப்படி முடியாத சூழ்நிலை இருக்கும்போது அந்த மாணவர்களுக்கு அந்தக் கல்லூரி முதல்வர்கள் என்ன சொல்கிறார்கள். ஏதாவது ஒரு course கொடுக்கிறார்கள். Science படிக்கிறவர்களுக்கு Arts கொடுக்கிறார்கள். Arts படித்தவர்களுக்கு Literature கொடுக்கிறார்கள். படிப்பதற்கும் அந்த மாணவர்களின் எதிர்காலத்திற்கும் சம்பந்தம் இல்லாத ஒரு subject-ஐக் கொடுத்து சோதிக்கின்ற நிலை இப்போது கல்லூரிகளில் இருக்கின்றது. அதையும் அரசு கருத்தில் கொண்டு கிராமப்புற மாணவர்கள் கேட்கின்ற அந்தப் பாடப் பிரிவைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் admission-ஐப் பொறுத்தவரையில், தகுதி அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள் சொல்வதைப் போல மாணவர்கள் விரும்புகிற பிரிவுகளில் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், குறைந்த மதிப்பெண் வாங்கிய மாணவர்களுக்கு அவர்கள் கேட்கிற இடம் கொடுத்து



2003 நவம்பர் 7]

விட்டால், அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். எனவேதான் மாணவர் சேர்க்கையில் admission-ஐப் பொறுத்தவரையில் எந்த முறைகேடும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக mark அடிப்படையில் அதைப்போல இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுகிற வகையிலே அரசுக் கல்லூரிகளில் இப்பொழுது admission கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே எந்த மாற்றமும் செய்வதற்கு இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கல்விக் கட்டணத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் அரசுக் கல்லூரிகளிலே படிக்கிற ஏழை எளிய மாணவர்கள், நடுத்தர வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் கல்விக் கட்டணத்தை உயர்த்தவில்லை. எப்பொழுதும் வசூலிக்கிற அதே கல்விக் கட்டணம்தான் இப்பொழுதும் வசூலிக்கப்படுகிறது. எனவே கல்விக் கட்டணம் உயர்த்தப் படவில்லை. ஏழை எளிய மாணவர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு Scholarship வழங்கப்படுகிறது. அதேபோல 92 - M.E.R. அடிப்படையிலே அவர்களுக்கு fee concession கிடைக்கிறது. அதை வேண்டுமானால் உரிய காலத்தில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரியே இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் shift முறையை துவக்கப்போவதாக இங்கே சொன்னார்கள். ஏற்கெனவே Regular கல்லூரிகளிலே பேராசிரியர்கள், துணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த shift முறையின் மூலமாக அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. எனவே அதையொட்டி - ஏனென்று சொன்னால், இந்த அரசாங்கத்திற்கு பணச் சுமை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்--புதிதாக விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள்

[2003 நவம்பர் 7

பேராசிரியர்கள் போன்றவர்களை எடுப்பதற்கு வாய்ப்பு உண்டா? அப்படி வாய்ப்பு உண்டு என்று சொன்னால், பணச் சுமையை எப்படி நீங்கள் adjust செய்யப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கல்லூரிகளில் நடைமுறையில் உள்ள வகுப்புகளுக்கு மாறாக Shift System மூலம் புதிய பாட வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறபோது அவர்களுக்கு கூடுதலாக ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. அதற்கு Hourly Basis. மணிக்கு இவ்வளவு தொகை— மணிக்கு 100 ரூபாய் — என்கிற அளவிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக Self-financing course, இன்னும் சொல்லப்போனால் Job Oriented Course போன்றவைகளுக்குத்தான் இப்பொழுது நாம் கல்லூரிகளிலே மாலை நேர வகுப்புகள் Shift System-லே ஆரம்பிக்கிறோம். அதற்குரிய கட்டணத்தைக் கொடுத்து மாணவர்கள் சேர்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே அந்த வருமானத்தைக் கொண்டு ஆசிரியர்களை Hourly Basis-ல் மணிக்கு 100 ரூபாய் என்கிற அந்த அடிப்படையிலே கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பாடம் நடத்துவதற்கு எந்தவித பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறோம். அதேபோல ஏற்கெனவே பணிபுரிகிற ஆசிரியர்களுக்கு கூடுதலாக வகுப்புகள் ஒதுக்கப்படுவதில்லை. அவர்கள், அவர்களுடைய பணியை சரியாகச் செய்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**82—**

### மருத்துவ ஊர்தி

**•33698—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி அமைக்க அரசு முன்வருமா?



2003 நவம்பர் 7]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு சட்டமன்றத் தொகுதியில், திருக்கழுக்குன்றத்தில் ஓர் அரசு தாலுகா மருத்துவமனையும், நிரம்பூர், வள்ளிபுரம், கேளம்பாக்கம், செம்பாக்கம் மற்றும் திருப்போரூர் ஆகிய பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், மேலும் மாமல்லபுரம் மற்றும் மரக்காணம் ஆகிய பகுதிகளில் அரசு மருத்துவமனைகளும், செங்கற்பட்டு நகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அமைந்துள்ளதாலும், போக்குவரத்து வசதி தேவைக்கேறப அமைந்துள்ளதாலும், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்குவது குறித்த அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 83, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**83—**

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

**•32822—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்திலுள்ள 15 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கு அரசு கட்டடம் கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்தில் உள்ள 15 மகளிர் சுய உதவிக்

குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கு அரசு கட்டடம் கட்டித் தரும் எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 84, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**84—**

## அகல இருப்புப் பாதைகள்

**•39811—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள குறுகிய இருப்புப் பாதைகளை அகல இருப்புப் பாதைகளாக மாற்றுவதற்கும், புதிய அகல இருப்புப் பாதைகளை அமைக்கவும், போதிய நிதியை மத்திய அரசு ஒதுக்காததால் பணிகள் முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசை நிதி ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தற்போது நிறைவேற்றப்படும் இரயில்வே திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு விவரங்கள் வருமாறு:—

புதிய அகல இரயில் பாதைத் திட்டங்கள் இரண்டு. ஒன்று, சேலம்-கரூர், திட்ட மதிப்பீடு ரூ.229.98 கோடி. இதிலே 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்ற தொகை ரூ.40.7 கோடி.

2. நாகப்பட்டினம்—வேளாங்கண்ணி, திட்ட மதிப்பீடு ரூ.16.93 கோடி. இதில் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.12 கோடி.



அதேபோல அகல இரயில் பாதைகள்—மீட்டர்கேஜ் இரயில் பாதைகளை அகல இரயில் பாதைகளாக மாற்றும் திட்டங்கள்.

| | | |
|---|---|---|
| 1. கடலூர்—சேலம் | .. | திட்ட மதிப்பீடு ரூ.198.68 கோடி, அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற தொகை ரூ.26 கோடி. |
| 2. திருச்சி—நாகூர் | .. | திட்ட மதிப்பீடு 134.42 கோடி ரூபாய். அதில் இரயில்வே துறை ஒதுக்கி இருக்கின்ற தொகை 2001-2004 வரை ரூ.18 கோடி. |
| 3. கொல்லம்—திருநெல்வேலி—திருச்செந்தூர்-தென்காசி, விருதுநகர் | .. | திட்ட மதிப்பீடு ரூ342.5 கோடி. இதுவரை இரயில்வே துறை திட்டத்திற்கு ஒதுக்கி உள்ள தொகை ரூ.55 கோடி. |
| 4. இராமேஸ்வரம்—மதுரை | .. | திட்ட மதிப்பீடு 240 கோடி ரூபாய். ஆனால் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.6 கோடி. |
| 5. தஞ்சாவூர்—விழுப்புரம் | .. | திட்ட மதிப்பீடு ரூ.223 கோடி. ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற தொகை ரூ.22 கோடி. |
| 6. திருச்சி—மானாமதுரை | .. | திட்ட மதிப்பீடு ரூ.175 கோடி. ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிற தொகை ரூ.18 கோடி. |
| 7. விழுப்புரம்—காட்பாடி | .. | திட்ட மதிப்பீடு ரூ.175 கோடி. ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிற தொகை ரூ.3 கோடி. |
| 8. சென்னை—கடற்கரை தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் இரயில் பாதை | .. | திட்ட மதிப்பீடு ரூ520 கோடி. இப்போது அந்தத்திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. |

இருவழிப்பாதைத் திட்டம்—இருவழிப்பாதையை மூன்றாவது பாதையாக அமைக்கின்ற திட்டம். அத்திப்பட்டு—கொருக்குப்பேட்டை மூன்றாவது பாதையாக அமைக்கும் திட்டம். திட்ட மதிப்பீடு ரூ.40 கோடி. அதில்

[2003 நவம்பர் 7

இதுவரை அந்த திட்டப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.30 கோடி. பணி நடைபெற்று வருகிறது. அதேபோல இருகூர்-கோயமுத்தூர் இருவழிப்பாதை திட்ட மதிப்பீடு ரூ.25.11 கோடி. இதுவரை ஒதுக்கீடு செயயபபட்ட தொகை ரூ.16.28 கோடி ரூபாய். ஆக மொத்தம் தமிழகத்திலே இரயில்வே துறை ஒப்புதல் வழங்கியிருக்கின்ற திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2353.62 கோடி ரூபாய. அந்தப் பணிகள் துவங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்திற்கு ரூ.2353.62 கோடிக்கு ரூ.388.28 கோடி இதுவரை ஒதுக்கியிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

(அ) போதிய அளவு நிதி ஒதுக்கீடு இல்லாமையால், சென்னை-தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் தேக்கநிலையில் இருந்தது. சென்னை-கடற்கரை-தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் அகல இரயில் பாதை மாற்றம்; திருமயிலை-வேளச்சேரி திறன் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் போன்ற சில முக்கியமான இரயில் திட்டங்களைக் குறிப்பிட்டு, இத்திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யும்படி வலியுறுத்தி தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8-11-2002 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதேபோல மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொடர் முயற்சியினால் தற்போது சென்னை-தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது.

(முற்பகல் 10-20)

அதேபோல தஞ்சாவூர்—விழுப்புரம் மொத்த தூரம் 192 கிலோமீட்டர். திட்ட மதிப்பீடு 223 கோடி ரூபாய். இந்தத் திட்டத்தில் தஞ்சாவூர்-கும்பகோணம் இடையே அகல இரயில் பாதையாக மாற்றும் பணியினை மகாமகம் திருவிழாவிற்கு முன் முடிக்கும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய இரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு 20-8-2003 அன்று கடிதம் எழுதியிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து மத்திய இரயில்வே அமைச்சர் அவர்கள் 2004 பிப்ரவரி திங்களுக்குள் இப்பணி முடிக்கப்படும் என்று 9-10-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா



2003 நவம்பர் 7]

அவர்களுக்குக் கடிதம் எழுதி உள்ளார்கள் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமமா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு மக்கள் தேவைகளைக் கருத்தில்கொண்டு போடுகிற சில திட்டங்களை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் மத்திய அரசுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடிதம் எழுதினார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வாறு கடிதம் எழுதிய பிறகு கூடுதல் தொகை ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதைத் துங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து எடுத்த நடவடிக்கையின் காரணமாக பல்வேறு சமயங்களில் பாரதப் பிரதமருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இரயில்வே துறை அமைச்சர் நிதிஷ்குமார் அவர்களுக்கும், தமிழ்நாட்டிலுள்ள திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கடிதத்தின் மூலமாகவும் பல்வேறு சமயங்களிலே வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய தொடர் முயற்சியின் காரணமாக இப்போது தஞ்சாவூர்-கும்பகோணம் இரயில் திட்டம், அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம், கும்பகோணம் மகாமகம் திருவிழாவிற்குள் முடிக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகளும் இப்போது பெற்று அந்தப் பணி முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அதேபோல இரயில்வே துறையே 2004 பிப்ரவரிக்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது. அதேபோல இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொடர் முயற்சியின் காரணமாகத்தான் தற்போது சென்னை-தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம் ஏறத்தாழ முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, அவர்கள். ஏனென்றால், கும்பகோணம் மகாமகம். குளிக்கப் போகிறார் அவர்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்-கும்பகோணம் அகல இரயில் பாதைத் திட்டம் ஆரம்பித்து நடந்துகொண்டிருந்ததையும், முடிந்ததையும்

தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இரயில்வே துணை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது அவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட மனுவில் கும்பகோணம் புகைவண்டி நிலையத்தில் அனைத்து இரயில்களையும் நிறுத்துவதற்கு இட வசதி போதுமானதாக இல்லை; ஆகையினாலே அதை மாயூரம் Junction வரையில் நீட்டித்துத் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது அதைப் பரிசீலிப்பதாகவும் இரயில்வே துணை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த முழு விவரங்களையும் இரயில்வே துறைதான் சொல்லவேண்டும். பொதுவாக தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தமிழக போக்குவரத்துத் துறை, இரயில்வே துறை, விமானப் போக்குவரத்துத் துறை மற்றும் தபால் தந்தி தொடர்புத் துறைகளுக்கு ஒரு முகமையாக - Agent போல- தமிழகத்திலே நடைபெறுகின்ற திட்டப் பணிகளுக்கு நிலம் எடுத்துக் கொடுப்பது போன்ற பல்வேறு பணிகளையும் தொடர்புகளையும் செய்து தருகின்ற பணியைத்தான் செய்து வருகிறது. இங்கு இருக்கின்ற பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லையென்று சொன்னாலும்கூட, அது தொடர்பாக மத்திய அரசுக்கு நாங்கள் தகவல் தெரிவிப்போம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கின்ற கருத்தினை மாநில அரசு மத்திய அரசுக்கு உரிய முறையில் தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மயிலாப்பூர்-வேளச்சேரி இரயில் திட்டம் எப்போது மக்களின் பயன்பாட்டுக்கு வரும் என்பதையும், இந்தத் திட்டம் மேலும் விரிவாக்கம் செய்து நீட்டிக்கப்பட உள்ளதா என்றும் அறியவிரும்புகிறேன். அதேபோல இந்தக் கேள்வியானது குறுகிய கால வினாவாக கொடுக்கப்பட்ட கேள்வி. இது ஐந்து மாதங்களுக்கு முன்பு பெறப்பட்ட பதில். இப்போது 13 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டு இருந்தார்கள். இந்த ஐந்து மாத இடைவெளியில் மேலும் ஏதேனும் புதிதாக இப்படி அகல இரயில் பாதைகளை அமைக்கின்ற திட்டம் அரசின் பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.





*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற சென்னை-தாம்பரம்-செங்கல்பட்டு புறநகர் அகல இரயில் பாதை மற்றும் திருமயிலை-வேளச்சேரி துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் போன்ற சில திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8-11-2002 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்குக் கடிதம் மூலமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்தத் துறை இன்றைக்கு மத்திய அரசோடும் மத்திய இரயில்வே துறையோடும் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டு இந்தப் பணிகளை முடிப்பதற்கு உறுதுணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். புதிய திட்டம் என்று சொன்னால் இப்போது வேளாங்கண்ணி—நாகப்பட்டினம் திட்டத்திற்கு வேளாங்கண்ணி கோயில் நிறுவனமே 1 கோடி ரூபாயை வழங்கி இருக்கிறார்கள். அதோடு அந்தத் திட்டத்தையும் விரைந்து முடிக்க வேண்டும் என்று—Pilgrim Centres முக்கிய ஸ்தலமாக இருப்பதால், அது ஒரு புனிதமான இடமாக இருப்பதால் இப்படிப்பட்ட ஸ்தலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பணிகளை முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் --இன்று மகாமகத்திற்கு மட்டுமல்ல, வேளாங்கண்ணி கோயிலுக்கும் அந்தத் திட்டத்தையும் விரைந்து முடிக்க வேண்டும் என்று— வற்புறுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாமகத்தையொட்டி கும்பகோணம் இரயில் பாதையை சீர் செய்வதைப்போல திருவண்ணாமலையில் மாதந்தோறும் பௌர்ணமியிலே பல இலட்சம் பக்தர்கள் வருகிற காரணத்தால் 3 ஆண்டு காலத்திற்கு முன்பாக காட்பாடி-திருவண்ணாமலை-விழுப்புரம் வழியை அகலப்பாதையாக மாற்றுவதற்காக மத்திய அரசாங்கம் அனுமதி அளித்து இதுவரை அதனுடைய பணிகள் சரிவர தொடங்கப்படவில்லை. அதற்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா? இப்போது ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் முழுவதும் அரசு நிதியிலேயே ஓர் இரயில்வே திட்டத்தை அமைத்து துவக்கியிருக்கிறார்கள். அதைப்போல முழுவதும் தமிழக

அரசினுடைய பணத்திலேயே இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா? 3 நாட்களுக்கு முன்பாகக்கூட மத்திய இணை அமைச்சர் 50% பணம் கட்டினால் 60 பாலங்கள் கட்டுவதற்கு இரயில்வே துறை பணத்தைத தயாராக வைத்திருக்கிறது; தமிழக அரசு கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல விழுப்புரம்-காட்பாடி திட்டம் 175 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சி பங்கு வகிக்கிற அந்த மத்திய அரசு, இரயில்வே துறை அந்தத் திட்டத்திற்கு இதுவரை வெறும் 3 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள்தான் அங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் உங்களுடைய மத்திய அரசை வலியுறுத்தி, இரயில்வே துறையையும் வலியுறுத்தி இங்கே இருக்கிற திட்டத்திற்கு கூடுதல் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்கிற பொறுப்பு உங்களிடம்தான் இருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுடைய அமைச்சர்களை வலியுறுத்தி இந்தத் திட்டத்தினை விரைந்து முடிப்பதற்குக் கூடுதல் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று நீங்களும் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது அதேபோல புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு என்றைக்கும் தமிழகத்தினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வாதாடியோ, போராடியோ அதற்காக திட்ட மதிப்பீடு பெறுவதற்கு, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சி எடுத்து வருகிறது. ஆகவே நீங்களும் அங்கே குறைந்தபட்சம் குரலாவது கொடுக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே புதிய இருப்புப் பாதை அமைப்பதற்கு மத்திய அரசு ஒதுக்கி உள்ள நிதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அவற்றிலே சேலம்-கரூர் புதிய இருப்புப்



பாதை, அதாவது ராசிபுரம், நாமக்கல் வழியாகச் செல்கிற புதிய இருப்புப் பாதை சுமார் 85 கிலோ மீட்டர் தூரம். அதனுடைய திட்ட மதிப்பீடு 229.98 கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். திட்ட மதிப்பீட்டிலே 10 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் யானைப் பசிக்குச் சோளப் பொரியைப் போல உள்ளது. இது எங்களுடைய நீண்டநாளைய கனவு. கடந்த 25 ஆண்டுகாலமாக சேலம்-கரூர்-திண்டுக்கல் இரயில்வே பாதையைப் பற்றி நாங்கள் பேசிக் கொண்டே வருகிறோம். ஆகவே இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் எடுத்துக் கூறி, சேலம்-கரூர் இருப்புப் பாதை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு இரயில்வே துறை இணை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்கள்கூட இன்னும் ஓராண்டிலே இந்தப் பணி முடிவடையும் என்று கூறியிருக்கிறார்கள். அது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் மதிப்பீடு 229 கோடி ரூபாயிலே 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிற நிலையிலே எப்படி இந்தப் பணிகள் முடிவடையும் என்று தெரியவில்லை. இருந்தபோதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் எடுத்துக் கூறி தனிக் கவனம் செலுத்தி போதிய நிதி ஒதுக்கி, இந்தப் புதிய இருப்புப் பாதை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம்-கரூர் அகல இரயில் பாதைத் திட்டம் நீண்ட காலமாக தமிழகத்திலே நடைபெற்று வருகிறது. இருந்தாலும்கூட குறிப்பிட்ட காலத்தில் இந்தப் பணியினை விரைந்து முடிக்க வேண்டும் என்று தமிழக அரசு மத்திய இரயில்வே துறைக்கு பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. நமது தமிழகத்தைச் சேர்ந்த மத்திய இரயில்வே இணை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களிடம்கூட நேரிலே இதுகுறித்து நாங்கள் பேசியிருக்கிறோம், அவருக்குக் கடிதம் மூலமும் தெரிவித்திருக்கிறோம். அவரும் உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாடு அரசினுடைய கோரிக்கையை ஏற்று சேலம்-கரூர் அகல இரயில் பாதைத் திட்டத்தை விரைந்து முடிப்பதாக மத்திய இரயில்வே துறை இணை அமைச்சரும்கூட சொல்லியிருக்கிறார்.

எனவே அந்தத் திட்டம் விரைவில் முடிக்கப்படும் என்று நம்புவோம். அதற்கு இங்கே இருக்கிற மணி போன்றவர்களும் அவர்களுடைய அமைச்சரிடம் சொல்லி, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சேலம்-நாமக்கல் அகல இரயில் பாதைத் திட்டத்தை விரைந்து முடிப்பது பற்றிச் சொன்னார்கள். கடந்த வாரம்கூட மாண்புமிகு இரயில்வே துறை இணை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களும் நாங்களும் மக்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த அகல இரயில் பாதையைப் பார்வையிட்டோம். பார்வையிட்ட நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல் அல்லாமல் அங்கே மிகப் பெரிய பாறைக் கறடு இருக்கிறது. அதன் வழியாகச் செல்ல வேண்டும். சில நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தின் மூலம் தடையாணை பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. அதை விரைவில் நிவர்த்தி செய்து அந்தப் பாதையை வேகமாக முடிப்பதற்கு மத்திய இரயில்வே அமைச்சகம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 85, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**85—**

### குடிநீர்த் திட்டம்

**•7617—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகர குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மூன்றாவது குடிநீர்த் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். திருப்பூர் நகர குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க மூன்றாவது குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.



**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991-96 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக அரியணையில் இருந்தபோது தொலைநோக்குப் பார்வையோடு திருப்பூர் நகருக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்ததோடு, தொலைநோக்குப் பார்வையோடு மூன்றாவது குடிநீர்த் திட்டமும் தேவை என்று அந்தத் திட்டத்தையும் தீட்டினார்கள். ஆனால் இடையிலே ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம், தனது 5 ஆண்டுகால ஆட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டம் என்கிற காரணத்தினால் அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டது. மீண்டும் தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்று ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டிக்கு அடுத்தபடியாக திருப்பூர் நகருக்கு வருகை தந்து 3-வது குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி அதனுடைய பணிகள் 60 சதவிகிதம் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் ஓராண்டு காலத்திற்குள் குடி தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இந்த 3-வது குடிநீர்த் திட்டத்தினுடைய தண்ணீர் திருப்பூர் நகருக்கு வருகின்ற அளவில் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 3-வது குடிநீர்த் திட்டத்தின் மூலமாக திருப்பூர் நகரில் உள்ள நகராட்சி, தொழிற்சாலைகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஒன்றியத்திலே இருக்கக்கூடிய 21 ஊராட்சிகளில் 11 ஊராட்சிகளுக்கு நேரடியாக புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக தண்ணீர் supply செய்யப்பட இருக்கிறது. மீதி இருக்கக்கூடிய 10 ஊராட்சிகள், அதாவது பெருமாநல்லூர், ஈட்டிபுரம்பாளையம், காளிபாளையம், கணக்கம்பாளையம், கொங்குபாளையம், போன்ற 10 ஊராட்சிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகத்திலிருந்து தண்ணீர் பெறப்பட்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தண்ணீர் supply செய்வதாக அந்தத் திட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது. அதற்காக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 1.5 எம்.எல்.டி. வழங்குவதாக அந்தத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், பெருமாநல்லூருக்கு அருகாமையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய

[2003 நவம்பர் 7

சீரிய முயற்சியால் 200 ஏக்கர் அளவில் புதிய பின்னலாடை தொழிற்பேட்டை அமைந்திருக்கிற காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற 1.5 எம்.எல்.டி. தண்ணீர் போதாது; எனவே கூடுதல் தண்ணீர் பெறுவதற்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் 1.5 எம்.எல்.டி. தண்ணீர் போதாது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு போதாத தண்ணீர் குறித்து ஆலோசனை மேற்கொள்ளும் என்று தெரிவித்து அமைகிறேன் ....

முறபகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை அது முடிவுறுவதைச் சொல்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், திட்டம் துவங்கிய தேதியைச் சொல்ல மறுக்கிறாரே ஏன்? இந்த 3 திட்டங்களும் தொடங்கப்பட்டது எப்போது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடுகள்)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவசாமி உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.



2003 நவம்பர் 7]

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம். ஆகையால் அதை மறைக்கிறார். அடிக்கல் நாட்டியது பற்றிச் சொல்கிறாரே தவிர, திட்டம் கொண்டுவந்தது தி.மு.க ஆட்சியில்தான் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள் இதற்கு ஒரு தனிக் கேள்வி போட்டால் விடை தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருணாகரன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன் (குறுக்கீடுகள்) திரு. சிவசாமி, உட்காருங்கள். திரு. கருணாகரன் அவர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது கேள்வி நேரம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை, ஈரோடு ஆகிய 2 மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட சுமார் 13-க்கு மேற்பட்ட பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் பயன்படத்தக்க...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவசாமி, எழுதிக் கொடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மிக முக்கியமான திட்டமான அவினாசி- அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் சம்பந்தமாக ஏற்கெனவே கடந்த 2 பட்ஜெட் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, மூலக் கேள்வி எதுவாக இருந்தாலும் கூட்டுக் குடிநீர் திட்டம் சம்பந்தமாக இருப்பதனாலே, அதுசம்பந்தமாக ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 நவம்பர் 7

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாததால், தனிக் கேள்வி போட்டால் இதற்கு விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**86—**

### நகராட்சிக்குத் தண்ணீர்

***32728—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பாற்கடலிலிருந்து அரக்கோணம் நகராட்சிக்குத் தண்ணீர் கொண்டு வரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணியை முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருப்பாற்கடலிலிருந்து இத்திட்டத்திற்கு குடிநீர் எடுத்தால் பிற நீர் ஆதாரங்கள் பாதிக்கப்படும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு அத்திப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத் தீர்ப்பு பெறப்பட்டவுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விண்ணின் மழைத் துளி, மண்ணின் உயிர்த் துளி' என்ற பொன் மொழியை நிறைவு செய்யும் வகையில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை முதன்முதலில் இந்தியாவிலேயே உண்டாக்கிய பெருமை மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உரியதாகும். எங்கள் அரக்கோணம் நகராட்சியில் மொத்தம் 77,453 பேர்கள் வசிக்கின்றனர். ஆகையால் திருப்பாற்கடலிலிருந்து அரக்கோணம் நகராட்சிக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ரூபாய் 12 கோடியில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நிறைவு செய்யப்பட்டால், என்னுடைய தொகுதி மக்கள் முழுமையாகப் பயன் பெற்று குடிநீர் கிடைக்கப் பெறுவார்கள். இந்தக் கேள்வியை நான் வைத்தபோது, அத்திப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். தற்போது நீதிமன்றத்திலுள்ள வழக்கும் முடிவுற்றதாக அறிகிறேன். தற்போது தடையேதும் இல்லை. எனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 நவம்பர் 7]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கைத் திரும்பப் பெற பல்வேறு சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வழக்கைத் திரும்பப் பெற்றவுடன் விரிவான மதிப்பீடு தயார் செய்து ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் உரிய நிர்வாக ஒப்புதல் பெற்ற பிறகு நிதி ஆதாரத்தை இறுதி செய்தபின் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றில் கடந்த 3 ஆண்டுகளாக வெள்ளம் வராத காரணத்தினாலே நிலத்தடி நீர் ரொம்ப கீழே போய்விட்ட காரணத்தினால் நீர் ஆதாரம் இல்லை. ஆகவேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நாங்களெல்லாம் கோரிக்கை வைத்து அவர்கள் ஒகேனக்கல்லிலிருந்து வேலூருக்கு *(மணியடிக்கப்பெற்றது)* இல்லை, இல்லை, ஒகேனக்கல்லிலிருந்து வேலூருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**87—**

### சுற்றுச் சூழல் பாதிப்பு

***19017—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள கடற்கரைச் சாலைகளில் சென்னை துறைமுகத்திலிருந்து யூரியா, பொட்டாஷ் மற்றும் வேதிப் பொருட்களை

ஏற்றி வரும் லாரிகளிலிருந்து வேதிப பொருட்கள் சாலையோரங்களில் கொட்டுவதால் ஏற்படும் சுற்றுச் சூழல் ஆபத்தைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) 1989 ஆம் ஆண்டைய* தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி, சேமித்தல் மற்றும் இறக்குமதி விதிகளின்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இரசாயனப் பொருட்களை கையாளும் தொழிற்சாலைகளுக்கு இத்தகைய இரசாயனப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது தகுந்த, போதிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றியே கையாள வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறது. மேலும் இரசாயன வேதிப் பொருட்கள் ஏற்றிவரும் லாரிகள் தார்பாலின் கொண்டு மூடப்பட்டுள்ளதா என்பதை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் துறைமுகப் போக்குவரத்து மேலாளரும் கண்காணித்து வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(முற்பகல் 10-10)*

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் பல்வேறு உரத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அந்த உரத் தொழிற்சாலைகளுக்கு சென்னை துறைமுகத்திலிருந்து யூரியா, பொட்டாஷ், கந்தக அமிலங்கள் லாரிகளிலே கொண்டு செல்லப்படுகின்றன. அப்படி கொண்டு செல்லப்படுகின்றபோது, சாலைகளின் இருபுறங்களிலும் அவற்றைக் கொட்டிச் செல்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிறது. அதன் மூலமாக வெயில் காலங்களில் அதனுடைய சுற்றுப்புறங்களில் இருக்கின்ற குடிசைகள் தீப்பற்றி எரிகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. மேலும் தொழிற்சாலைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற விதை உரங்கள், விளைச்சல் யூரியாக்கள், காம்ப்ளெக்ஸ் போன்றவை தயாரிக்கப்பட்ட பிறகு, அவற்றிலிருந்து வெளியேறுகின்ற உரக் கழிவுகள், ஜிப்சம் இவை பூமியில் கலந்து குடிநீரில் மாசு படிந்து மக்கள் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகின்றது. அவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் concrete சாலை அமைத்து, அதன்மேல் இந்த உரக் கழிவு ஜிப்சத்தை வெளியேற்றினால், மக்கள் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து





விடுபடுவதோடு மட்டுமல்லாமல், அவற்றைத் தவிர்த்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கின்ற வகையில் மக்களுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கும். எனவே மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் பாதுகாப்பான சூழ்நிலையில் வேதிப்பொருட்கள் கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்வாரா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைகளை நேரில் சென்று ஆய்வு செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கின்ற விதத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் செயல்பட வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியிருக்கின்றது. பொது மக்களுக்கு எந்த சுற்றுச்சூழலும் பாதிக்காத வகையில் தொழிற்சாலைகள் செயல்பட மாசுக் கட்டுப்பாடு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் லாரிகளில் தார்ப்பாய் மூடி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விதிமுறை இருந்தாலும் — ஒரு சில சமயங்களில் ஏற்படுகின்ற இந்த இரசாயனக் கசிவின் காரணமாக — கடந்த 2 மாதங்களுக்கு முன்புகூட திருவொற்றியூர் காலடிப்பேட்டையில் ஏற்பட்ட இரசாயனக் கசிவின் காரணமாக, குழந்தைகள், பெரியவர்களுக்கு கண் எரிச்சல் ஏற்பட்டு, அதன் பிறகு தீயணைப்புத் துறையின் மூலமாக தண்ணீர் அடிக்கப்பட்டு அதனுடைய அமிலத் தன்மை குறைக்கப்பட்ட பிறகு சகஜ நிலைமை திரும்பியது. இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்படுவதற்கு கூண்டு லாரிகள் மூலம்தான் இந்த இரசாயனப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைமுகத்திலிருந்து இரசாயனப் பொருட்களை ஏற்றிச் செல்கின்ற லாரிகள் தார்ப்பாலின் போட்டு மூடியிருந்தால்தான் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றன என்பதை பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**88—**

## கட்டடம்

**•9111—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, கொளக்காட்டு புதூர் கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் சொந்த இடமிருந்தும் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கொளக்காட்டு புதூர் கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் ஆரம்ப நாளிலிருந்து வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. சங்கத்திற்கென்று சொந்தமாக அடிநிலமோ, கட்டடமோ எதுவும் இல்லை. நிதி ஆதாரம் இச்சங்கத்திற்குப் பெருகும்போது அடிமனை வாங்கி கட்டடம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 89, திரு. ஆர். சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**89—**

## பணிக்கொடை

**•39762—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமலுள்ள பணிக்கொடை உடனடியாக வழங்கப்படுமா?



**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

மேலூர் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்த மொத்தம் 773 தொழிலாளர்களில் இதுவரை 764 தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சென்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 668 தொழிலாளர்களுக்கு ரூபாய் 65661 இலட்சம் பணிக்கொடை உட்பட இதர பணப் பயன்கள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 105 நபர்களில் 96 நபர்களுக்கு ரூ8272 இலட்சம் பணிக்கொடை உட்பட பணப் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள 9 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் செல்ல இதுவரை விருப்பம் தெரிவிக்கவில்லை. மேற்படி நபர்களுக்கான பணப் பயன்களுக்கான தொகை கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையருடைய கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் விருப்பம் தெரிவிக்கும்போது இவர்களுக்கான பணிக்கொடை உட்பட பணப் பயன்கள் முழுமையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முறபகல் 10-45

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளையினுடைய பசி தாய்க்குத்தான் தெரியும் என்பார்கள். அதேபோல நம்முடைய தாய்க்கு தமிழ் நாட்டில் இருக்கின்ற மக்களுடைய பசி தெரிந்தவுடனேயே பல்வேறு நிவாரண நிதிகளை வழங்குகிறார்கள். மேலூர் கூட்டுறவு நூற்பாலை என்பது மதுரை மாவட்டத்திலே உள்ள ஒரே கூட்டுறவு நூற்பாலைதான். கடந்த 1999 ஆம் ஆண்டு இந்த ஆலை மூடப்பட்டது. அதிலே பணி புரிந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய எந்த நிவாரணமும் கொடுக்காமல், 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை பசியும், பட்டினியுமாக ரோட்டில் திரிந்தார்கள். அதில் யாரும் கவனம் செலுத்தவில்லை. இதை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவே, போன கூட்டத் தொடரிலே, அம்மாவினுடைய கவனத்திற்கு இவர்களுடைய பசியைக் கொண்டு போக வேண்டுமென்பதற்காகவே இந்தக் கேள்வி போடப்பட்டது. ஆனால் போன கூட்டத் தொடரிலே இந்தக் கேள்வி வரவில்லை. இருந்தாலும் அந்தக் கேள்வி அம்மாவினுடைய கவனத்திற்குப் போனவுடனேயே, அந்த ஏழை மக்கள் மற்றும் தொழிலாளிகள் அனைவருக்கும் புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், அவர்களுடைய பட்டினியைப் போக்குவதற்காக பணப் பட்டுவாடா செய்ததற்கு, என்னுடைய

சார்பாகவும், அந்த ஏழைத் தொழிலாளிகள் சார்பாகவும் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இன்னும் 8 தொழிலாளர்கள் அங்கே பணிபுரிந்தவர்கள், 30 ஆண்டு காலமாக பணிபுரிந்தவர்கள் பல்வேறு சூழ்நிலைகளால் பதவி இறக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் அரசால் கொடுக்கப்பட வேண்டிய கருணைத் தொகை ரூபாய் 20,000 அந்த 8 நபர்களுக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 8 பேர்களுக்கும் கருணைத் தொகை ரூபாய் 20,000 வீதம் வழங்க வேண்டும். இன்னும் ஒரு சிலர் 1996 முதல் 1999 வரை வேலை பார்த்து, ஓய்வு பெற்றவர்களுக்கு சம்பளம், போனஸ் போன்றவை மொத்தம் 1,79,441 ரூபாய் பாக்கியிருக்கின்றது. அதையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில் இருக்கின்ற அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஏழைத் தொழிலாளர்கள் 8 பேர்களுக்கும் மற்றும் இறந்தவர்களுக்குள்ள சம்பளப் பாக்கியையும் உடனடியாக வழங்க முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் கூட்டுறவு நூற்பாலையில் 25 முதல் 30 ஆண்டுகள் வரை பணிபுரிந்த, பணிக்காலத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட 8 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கருணைத் தொகை தலா ரூ.20,000-மும் மற்றும் 1995 முதல் ஏப்ரல் 1999 முடிய பணியிலிருந்து விலகியவர்கள் பணி மூப்பு மற்றும் இறந்தவர்களுக்கு ஊதியம், பணிக்கொடை, வித்தியாசமற்ற விடுப்பு ஊதியம் ரூ.1,79,441/- வழங்கப்படாமல் உள்ளது. இதை விரைந்து வழங்க தேவையான பிரேரணை தற்போது ஆலையின் ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அதில் 71 தொழிலாளிகளுக்கு 1997, 1998 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளுக்கான போனஸ் தொகை மற்றும் டிசம்பர் 1998 மற்றும் சனவரி 1999 மாதங்களுக்கான ஊதிய வித்தியாசம் மொத்தம் ரூபாய் 1,79,441/- விரைவில் வழங்குவது குறித்து நல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுத்து கொடுக்கப்படும் என்று சொல்லி, உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு முதல்மைச்சர் அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இது மேலூர்; வேலூர் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் கூட்டுறவு நூற்பாலையிலே பணிபுரிந்த ஊழியர்களில் சிலருக்கு இன்னும் இந்த நிலுவைத் தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அழைக்குத் தெரிவித்தார்கள். இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் இப்போது கூட்டுறவு சொசைட்டி மூலம் liquidate செய்வதற்கான அறிவிக்கை எல்லாம் செயயப்பட்டு, அது விறகப்பட்டுவிட்டு, அந்த தொழிலாளர்களுக்கு இன்னும்கூட நிவாரணம் கிடைக்காமல் இருக்கிறது. அது எப்போது கிடைக்கும்? மேலூர் மட்டுமல்ல; வேலூரிலும் அதே நிலைமை. வேலூர் கூட்டுறவு நூற்பாலையில் இருக்கக்கூடிய 112 தொழிலாளர்களுக்கு இன்னும் பணம் வரவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் எப்பொழுது கொடுப்பார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களிடத்திலே கோரிக்கை வைத்த அனைவருக்கும் நாங்கள் அந்த V.R.S. திட்டத்தின் மூலமாக பணம் கொடுத்து இருக்கின்றோம். ஒரு சிலர் மீது, நடவடிக்கைகள் எடுத்த ஒரு சிலருக்கு அந்த கருணைத் தொகையை கொடுக்க முடியவில்லை. அதுகூட, அந்த ஆட்சியரின், கணக்கிலே வரவு வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தருந்த. உரிய முறையிலே அரசிடம் எடுத்துச் சொல்வார்களேயானால், விரைவில் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

முற்பகல் 10-50

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, பசுமலை மகாலட்சுமி மில்ஸ் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணப் பயன்கள் குறித்து அமைச்சர் அவர்கள் பொருத்தமான, உகந்த பதில் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது. திரு. க. முருகவேல் ராஜன்.

[2003 நவம்பர் 7

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே மேலூர் கூட்டுறவு நூற்பாலையைப் போலவே, முசிறியார் கூட்டுறவு நூற்பாலையும் நஷ்டத்திலே இயங்கியதால் மூடப்பட்டு அங்கே பணிபுரிந்த சுமார் 200 தொழிலாளர்கள் பணிக்கொடை உள்ளிட்ட எத்தகைய சலுகைகளும் இதுவரை பெறவில்லை என்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமை மாறியிருக்கிறதா? தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறியார் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிந்த அனைவருக்கும், அவர்களுக்குச் சேரவேண்டிய பணப் பயன்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 179 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை அந்தப் பணியாளர்களுடைய குடும்பத்திற்கு கொடுத்து உதவி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**90—**

**கலங்கரை விளக்கம்**

***8124—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 நவம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் ஏராளமான மீன்பிடிப் படகுகள் உள்ளன. இரவு நேரங்களில்கூட அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்ற காரணத்தால், கலங்கரை விளக்கம் அவசியம் அமைத்துத் தரவேண்டும். இந்தக் கலங்கரை விளக்கத்தை அமைத்துத் தருவதால் அரசுக்கு அதிகமான செலவாகாது. மீனவர்கள் நலன் கருதி, மல்லிப்பட்டினம் பகுதியில் கலங்கரை விளக்கம் அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்து, வருகிற நிதியாண்டில் அமைத்துத் தருவதற்கு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலங்கரை விளக்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை எனத் தமிழ்நாடு கடல்சார் வாரியம் தெரிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒருமுறை கட்டுமரங்கள், பாக்கியிருக்கிற படகுகள் இவையெல்லாம் காணாமல்போய், மறுபடியும் இலங்கையிலே அவை அகப்பட்டு திரும்பக் கண்டுபிடித்ததற்குக் காரணமே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி, இது மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலே கலங்கரை விளக்கம் அமைப்பது தொடர்பான கேள்வி, அதனாலே நீங்கள்...

**திரு. கோ.சி. மணி:** அதற்குத்தான் வருகிறேன். அங்கே கலங்கரை விளக்கம் இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படுகின்றன என்று ஒருமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்தத் துறையினர் எல்லாம் பார்வையிட்டு, அதை அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளைச் செய்கிறோம், ஆலோசிக்கிறோம் என்று தெரிவித்திருந்தார்கள். அதனுடைய நடவடிக்கை தொடருமா? அது எந்த நிலையில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள், இலங்கை அரசினால் சிறை பிடிக்கப்படுகின்ற நிலைமையை அறிந்து இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைக் காத்திட நிலையான குத்தகையே நிரந்தரத் தீர்வாகும் என்றும், இந்திய அரசு இலங்கை அரசைத் தொடர்புகொண்டு இலங்கை கடல் பகுதியிலே உரிமை பெற்ற இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இவர்களுடைய பாதுகாப்பு நிச்சயமாக தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. ப. அரசன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**91—**

**தொழிற்சாலை**

**•27929—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் நீண்ட கடற்கரைப் பகுதிகள் உள்ளதால் ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சார்ந்த தொழிற்சாலை ஒன்று உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் அருகில் மீன் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் ஏதும் தற்போது துறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் வருடத்தில் 12 மாதங்கள் மீன் பிடிக்கச் செல்லமுடியாது. அதற்காகத்தான் அரசுகூட 4, 5 மாதங்களுக்கு நிவாரணம்கூட கொடுக்கிறது. மீனவர்கள் மீன் பிடித்து வருகிறபோது, வலையிலே சங்காயம் என்கிற ஒரு பொருள் அந்த வலையோடு சேர்ந்து



வந்துவிடுகிறது. மீனவர்களுக்கு அதனுடைய அருமை தெரியவில்லை. இந்தச் சங்காயத்திலேயிருந்து கோழித் தீவனங்களெல்லாம் தயாரிக்கிறார்கள், ஆகவே மீனவர்களுக்கு ஒரு பயிற்சி அளித்து, அந்தப் பகுதியிலே இருக்கிற மீனவர்கள், மீனவப் பெண்கள், கோழித் தீவனம் தயாரிப்பதற்கு, அந்தச் சங்காயத்தை உபயோகப்படுத்தி, கோழித் தீவனத் தொழிற்சாலை அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு சார்பில் இல்லாவிட்டாலும், தனியாக இதுபோன்ற தொழிற்சாலையை அமைப்பதற்கு நிறைய பேர் வருகின்றார்கள். அதுபோன்று தனியாக யாராவது தொழில் செய்வதற்கு முன்வருவார்களேயானால் அதற்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. எஸ். கண்ணன்.

**திரு. ஏ. எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பழவேற்காடு உட்பட, ஏறக்குறைய 30-க்கும் மேற்பட்ட குப்பங்கள் இருக்கின்றன. அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்களையெல்லாம் பாதுகாப்பதற்கு வழி இல்லாமல் ஏஜெண்டுகளுக்கு, குறைந்த விலையில் மீனவர்கள் விற்கின்ற ஒரு மோசமான சூழ்நிலை இருக்கிறது. ஆதலால் தேவைப்படும் பகுதிகளுக்கு அமைச்சர் அவர்கள் —cold storage— அதாவது, குளிர்பதன அறைகள் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கின்ற அந்தப் பனிக்கட்டி நிலையங்களெல்லாம் இப்போது பராமரிக்கப்பட்டு வந்திருந்தாலும், தனியாக போட்டி போட்டுக்கொண்டு, தனியார் நிறுவனங்கள் அமைத்து வருகின்றார்கள். அந்த அடிப்படையிலே, தனியாரே இதுபோன்று நடத்த முன்வருகின்றபோது அதற்கு அரசு நல்ல உதவிகளைச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா

[2003 நவம்பர் 7

அவர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே மீன் சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்வதற்கும், தொழிற்சாலைகள் அமைப்பதற்கான திட்டங்களையும் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நீங்கள் தொழில் செய்ய முடியும் என்று சொன்னால், அதற்கான உதவிகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள் சொல்லும்போது, சங்காயம் என்று சொன்னார்கள். சங்காயம் என்றால் என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொஞ்சம் விளக்கமாகத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொன்னவரிடம் கேளுங்கள். வினா எண் 92, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**92—**

## புதிய வட்டம்

**•18710—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும வருவாய்த் துறை அமைச்சர் கீழ்ககாணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே. பேட்டை, பாலாபுரம் மற்றும் எரும்பி ஆகிய பிர்க்காக்களைப் பிரித்து, ஆர்.கே.பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2003 நவம்பர் 7]

**திரு. பி. எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டம், 80 கிலோமீட்டர் தூரம் கொண்ட பெரிய பரப்பளவு கொண்ட வட்டமாகும். இரண்டு ஒன்றியங்களைக் கொண்டதாகும். இப்பகுதி மக்கள் இதனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாகக் கோரிக்கை எழுப்பி வருகின்றனர். விதியைத் தளர்த்துகின்றபோது மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஆர். கே. பேட்டை ஒன்றியத்தைப் பிரித்து, ஆர்.கே. பேட்டையை புதிய வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் புதிதாக ஏற்படுத்த மற்றும் பிரிக்கக் கோரி பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் நகர்மன்றத் தலைவர்களிடமிருந்து ஏராளமான மனுக்கள் வந்த வண்ணம் இருப்பதால், இது தொடர்பாக அளவுகோலை ஏற்படுத்தித் தரக் கோரி அரசுக்கு முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்க ஆய்வுகசு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**93—**

## இடம் மாற்றம்

**•19411—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்களை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுதல் செய்யும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

[2003 நவம்பர் 7

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கிராம நிர்வாக அலுவலர்களை மாறுதல் செய்யும்பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் 'அ' மற்றும் 'ஆ' என இரு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 'அ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களை வருடத்திற்கு ஒருமுறையும், 'ஆ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களை மூன்று வருடத்திற்கு ஒருமுறையும மாறுதல் செய்ய ஏற்கெனவே ஆணைகள் உள்ளன.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களெல்லாம் கூரை வீடுகளிலும், அந்தந்த ஊர்களிலுள்ள ஏதாவது ஒரு வசதியானவர்களின் வீட்டின் தாழ்வாரத்திலும் அலுவலகம் நடத்தி வந்த அவர்களுக்கு ரூ.70 ஆயிரம் செலவில் மிக அருமையான அலுவலகங்கள் கட்டிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் எப்போது பணிக்கு வருகின்றார்கள் என்ற விவரம் மக்களுக்குத் தெரிவதில்லை. பொது மக்களின் நலனில் அக்கறை இருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு...(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**திரு. கே.எஸ். தென்னரசு:** *மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு காலை 2 மணி நேரம், மாலை 2 மணி நேரம் என்று ஏதாவது ஒரு நேரத்தை ஒதுக்கி, அந்நேரத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகத்தில் பணிபுரிய வேண்டுமென்று அவர்களுக்கு அந்த அலுவலக நேரத்தை நிர்ணயிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*



2003 நவம்பர் 7]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற அரசு அலுவலர்களைப்போல கிராம நிர்வாக அலுவலர்களும் காலை 10 மணி முதல் மாலை 5-45 மணி வரை பணியில் இருக்க வேண்டும். அவர்கள் பல்வேறு பணிகளுக்காக அந்தந்த கிராமங்களினுடைய உட்கிடை கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை கட்டாயம் இரண்டு மணி நேரம் அவர்களுடைய அலுவலகத்தில் இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

### (ஏழாவது பட்டியல்)

1—

### மின் விநியோகம்

**வினா 22867—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியில் முத்தையா நகர், வேதாந்தம் நகர், ஸ்டேட் பாங்க் நகர் ஆகிய பகுதிகளில் சீராக மின் விநியோகம் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியில் முத்தையா நகர், வேதாந்தம் நகர், ஸ்டேட் பாங்க் நகர் ஆகிய பகுதிகளில் மும்முனை மின்சாரம் 24 மணிநேரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.*

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 நவம்பர் 7

2—

## மின் இணைப்பு

**வினா 26598—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அறிவித்த குடிசைகளில் வசிப்போர் ஒரு மின்விளக்கு இலவச இணைப்புப் பெற்று, மேற்கொண்டு அதிகப்படியான மின்விளக்கு வைத்ததால் மின் இணைப்பு 2001 ஆம் ஆண்டில் எவ்வளவு பேருக்கு துண்டிக்கப்பட்டது?

(ஆ) இதுபோன்ற செயல் எதிர்காலத்தில் நடவாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டில் ஒரு விளக்கு இலவச இணைப்புகளில் அனுமதியற்ற கூடுதல் மின்பகு உபயோகிப்பதால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை 4,712.

(ஆ) ஆம், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. குடிசை மின் இணைப்பில் விதி மீறல் கண்டுபிடிக்கப்பட்டால் அம்மின் இணைப்பை துண்டிக்காமல் இருக்க இலவச குடிசை-மின் இணைப்பில் உள்ளவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விளக்குகள் பயன்படுத்தினாலோ அல்லது ஏதாவது ஒரு விதத்தில் விதி மீறல் கண்டுபிடித்தாலோ அந்த மின் நுகர்வோருக்கு ஒரு மாத தாக்கீது கொடுத்து ரூ.900/- (ரூபாய் தொள்ளாயிரம்) மட்டும் தவணை முறையில் பெற்றுக்கொண்டு அந்த குடிசை மின் இணைப்பினை வீட்டு மின் இணைப்பாக மாற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் நிரந்தர மின் துண்டிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் 5,998 இணைப்புகள் வீட்டு விநியோகம் வீதப்படி (Iஏ)-ன்கீழ் மாற்றப்பட்டுள்ளது. மேலும் 1-7-2002 முதல் குடிசை மின் இணைப்புகளில் மின் அளவைகள் பொருத்தியே மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

இதுபோன்ற செயல்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க 2001 ஆம் ஆண்டில் ஒரு விளக்கு மின் இணைப்புகளின் கூடுதல் மின்பகு உபயோகிக்காத வண்ணம் மின்பகு கட்டுப்படுத்தும் கருவி (power limiting devices)



2003 நவம்பர் 7]

தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்ந்தவாறு உள்ள சில மின் இணைப்புகளில் பொருத்தப்பட்டதாலும் 250 குடிசை விளக்கு மின் நுகர்வோர்கள் தாமே முன்வந்து வீட்டு இணைப்பு வீதப்படி Iஏ-க்கு மாறியுள்ளனர்.

3—

## மின் கம்பம் மாற்றுதல்

**வினா 26960—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழிநுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றி புதியனவற்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கந்தர்வகோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட பழுதடைந்த மீதமுள்ள 30 ஆர்.சி.சி. மின் கம்பங்களும் டிசம்பர் மாதம் 2002-ல் மாற்றி அமைக்கப்பட்டுவிட்டன. மேலும் டிசம்பர் 2002-க்குப் பிறகு கண்டறியப்பட்ட பழுதடைந்திருந்த 64 மின் கம்பங்களும் மாற்றப்பட்டுவிட்டன.

4—

## மின் இணைப்பு

**வினா 35639—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம், ஆள்வார்பட்டியில் துணைமின் நிலையம் கட்டப்பட்டு வருவதால் அத்தொகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் மின் இணைப்பு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

[2003 நவம்பர் 7

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

குளத்தூர் தொகுதி மக்களுக்கு அவர்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே புதிய மின் இணைப்புகள் வாரிய விதிமுறைகளுக்கிணங்க வழங்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம், ஆள்வார்பட்டியில் 33/11 கேவி. துணைமின் நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட துணைமின் நிலையம் மின்னூட்டம் பெற்றவுடன் அதனைச் சுற்றியுள்ள குன்றாண்டார்கோயில், ஆள்வார்பட்டி, உடையாளிப்பட்டி, வைத்தூர் அண்டக்குளம் கிராமங்கள் சீரான மற்றும் தடையில்லா மேலும் மேம்பட்ட மின் அழுத்தத்தோடு உள்ள மின்சாரம் பெற்று பயன்பெறும்.

5—

**குடியிருப்பு வசதி**

**வினா 35888—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம்., சுப்பிரமணியபுரம் இள மின் பொறியாளருக்கு அலுவலகமும், குடியிருப்பு வசதியும் செய்து தரும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், சுப்பிரமணியபுரம், இள மின் பொறியாளருக்கு அலுவலகமும், குடியிருப்பு வசதியும் செய்து தரும் எண்ணம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.



2003 நவம்பர் 7]

6—

**இள மின் பொறியாளர் அலுவலகம்**

**வினா 35889—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் இள மின் பொறியாளர் அலுவலகம் கட்டித்தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு.டி.ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் இள மின் பொறியாளர் அலுவலகம் கட்டித்தரும் கருத்துரு தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

7—

**மின் அழுத்தம்**

**வினா 37126-திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வடக்குத்து ஊராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் போர்செட்டிற்கு மின் மோட்டாருக்கு சீரான மின் அழுத்தம் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, வடக்குத்து ஊராட்சி எல்லைக்குள் 17 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் இணைப்புகள்

உள்ளன. அவற்றுள் மின் இணைப்பு எண் 510 வடக்குத்து பகிர்மானம் தவிர மற்ற மின் இணைப்புகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. மின் இணைப்பு எண் 510 வடக்குத்து பகிர்மானம், வடக்குத்து மின்மாற்றி எண் 6-ல் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மின் இணைப்பு எண்510, வடக்குத்து பகிர்மானத்திற்கு சீரான மின்சாரம் அளிப்பதற்காக மேற்கண்ட மின் மாற்றியிலிருந்து தனியாக மின் பாதை அமைத்து 16-7-2003 அன்று மின்னூட்டம் அளிக்கப்பட்டது. தற்பொழுது மேலே கூறிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கும் சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

8—

### கருணை இல்லம்

**வினா 37443—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் எத்தனை கருணை இல்லங்கள் உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் கருணை இல்லங்கள் எதுவும் இல்லை.

9—

### பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

**வினா 39343—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெறுபவர்கள் எத்தனை பேர்?



**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 1-6-2003 அன்று வரை பயன் பெறுபவர்கள் 17 பேர்.

10—

### தொலைபேசி இணைப்பு வசதி

**வினா 16120—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் தொலைபேசி இணைப்பு வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திட்டம் சாரா செலவுகள் குறைக்கப்பட வேண்டி உள்ளதால், கோட்டூர், வேட்டைக்காரன் புதூர் ஆகிய தாலுகா அல்லாத மருத்துவமனைகளுக்கு தொலைபேசி இணைப்பு வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

11—

### எய்ட்ஸ் நோயாளிகள் விவரம்

**வினா 20117—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு மருத்துவமனையில் 2001-2002ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற எய்ட்ஸ் நோயாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சேலம் அரசு மருத்துவமனையில் 2001-2002 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோய்க்காக புற நோயாளிகளாக 110 நபர்களும், உள்நோயாளிகளாக 19 நபர்களும் சிகிச்சை பெற்றனர்.*

**12—**

### எய்ட்ஸ் நோய் சிகிச்சை

**வினா 27587—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் எய்ட்ஸ் நோய் சிகிச்சை பெற்றவர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) பூரண குணம் அடைந்தவர்கள் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் எய்ட்ஸ் நோய் சிகிச்சை பெற்றவர்களின் விவரம்:*

| | | |
|---|---|---|
| *வெளி நோயாளிகள்* | *1,50,172* | *(மார்ச் 2001 முதல் மார்ச் 2003 வரை)* |
| *உள் நோயாளிகள்* | *35,962* | *(1993 முதல் மார்ச் 2003 வரை)* |

*(ஆ) இந்நோய் உள்ளவர்களை பூரண குணம் ஆக்க இதுவரை மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை, அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கூடுதலாக்கவும், மேல் தொற்று நோய் பரவாமல் இருக்கவும் மருந்துகள் வழங்குவதன் மூலம் 34,695 நோயாளிகளுக்கு ஆயுட்காலத்தை நீட்டிக்க முடிகிறது. மற்ற 1267 நபர்கள் எச்ஐவி. எய்ட்ஸ் நோயால் 1993 முதல் 31-3-2003 முடிய இறந்து விட்டார்கள்.*



**13—**

### இலவச போலியோ சொட்டு மருந்து

**வினா 21040—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2003 ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி குழந்தைகளுக்கு அரசால் வழங்கப்பட்ட இலவச போலியோ சொட்டு மருந்து எத்தனை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*2003 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதி ஐந்து வயதிற்குட்பட்ட 74.84 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.*

**14—**

### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா 41052—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?*

*(ஆ) அவற்றை அரசுக் கட்டடத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் மொத்தம் 70 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

(ஆ) 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 66 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசின் சொந்தக் கட்டடங்களிலும், எஞ்சியுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஊராட்சி ஒன்றியக் கட்டடங்களிலும், இரண்டு துணை சுகாதார நிலையக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் இயங்கி வருகிற ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு கட்டடம் கட்டப்பட்டு தற்போது கட்டடக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவுறும் தருவாயில் உள்ளன. மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அரசு புதிய கட்டடம் கட்ட தேவையான நிலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**15—**

### திருமண உதவிப் பணம்

**வினா 20435—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலத் துறையினால் வழங்கப்பெறும் முதியோர், விதவைகள் திருமண உதவிப் பணம் பெறுபவர்கள் ஒன்றிய வாரியாக எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலத் துறையினால் வழங்கப்பெறும் முதியோர், விதவைகள், திருமண உதவிப் பணம் பெறுபவர்கள் ஒன்றிய வாரியாக பின்வருமாறு:-*

| வ.எண் | ஊராட்சி | முதியோர் உதவித் தொகை | விதவை உதவித் தொகை 2001-02 | | திருமண உதவித் தொகை 2002-03 |
|---|---|---|---|---|---|
| 1 | அன்னவாசல் | 805 | 613 | 5 | — |
| 2 | விராலிமலை | 506 | 435 | 3 | — |
| 3 | குன்னாண்டார்கோவில் | 56[illegible] | 392 | 7 | — |
| 4 | திருவரங்குளம் | 798 | 892 | 7 | — |
| 5 | கறம்பக்குடி | 737 | 679 | 7 | — |
| 6 | திருமயம் | 590 | 649 | 3 | 1 |
| 7 | அரிமளம் | 404 | 633 | 7 | — |
| 8 | பொன்னமராவதி | 681 | 544 | 3 | — |
| 9 | புதுக்கோட்டை | 1617 | 1177 | 25 | 2 |
| 10 | கந்தர்வகோட்டை | 402 | 609 | 12 | 1 |
| 11 | அறந்தாங்கி | 1269 | 1231 | 5 | — |
| 12 | ஆவுடையார் கோவில் | 613 | 675 | 5 | — |
| 13 | மணமேல்குடி | 604 | 609 | 5 | — |
| | **மொத்தம்** | **9602** | **9138** | **94** | **4** |



**16—**

### டானிடா நிறுவனம் வழங்கிய உதவி

**வினா 22791—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சமூக நலத் துறையின் மறுவாழ்வு இல்லங்களில் குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வளிக்க, 2000-2001 ஆம் ஆண்டில் டானிடா நிறுவனம் வழங்கிய உதவி மூலம் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*சமூக நலத் துறையின் மறுவாழ்வு இல்லங்களில் குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வளிக்க 2000-2001 ஆம் ஆண்டில் டானிடா நிறுவனம் வழங்கிய உதவி மூலம் 2395 இல்லவாசிகள் பயனடைந்துள்ளார்கள்.*

**17—**

**தையற் பயிற்சிப் பள்ளி**

**வினா 22815—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாழ்த்தப்பட்ட மகளிருக்கு தையற் பயிற்சிப் பள்ளி நடத்தி இலவசமாக தையல் கற்றுக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆதி திராவிடர் மகளிருக்கென 7 தையற் பயிற்சி மற்றும் பனை ஓலை பயிற்சி நிலையங்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மகளிருக்கென 7 தையற் பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு அவற்றில் மகளிருக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 28 மகளிர் தையற் பயிற்சி மற்றும் பனை ஓலை பயிற்சி நிலையங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் உட்பட அனைத்து இனத்தவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசு இலககுப்படி ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 20 பயனாளிகள் பயிற்சி பெற வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இப்பயிற்சி நிலையங்களில் பயனாளிகளின் வருகையை கருத்தில் கொண்டு அனைத்து இனத்தவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

*(ஆ)* வினாவிற்கு இடமில்லை.

**18—**

**கணிப்பொறி இயந்திரம்**

**வினா 27099—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* படித்த விதவைப் பெண்களுக்கு கணிப்பொறி பயிற்சி அளித்து மானியத்துடன் கூடிய கணிப்பொறி இயந்திரம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



*(ஆ)* ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டில் சமூக நலத் துறையின்கீழ் ஆறு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் தஞ்சாவூர் சேவை இல்லத்தில் படித்த விதவை, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு ஆறுமாத கால கணிப்பொறி பயிற்சி 20 நபர்கள் வீதம் இரு தொகுதிகளில் ஆண்டுக்கு 40 நபர்களுக்கு கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டு சமூக நல இயக்குநர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மானியத்துடன் கூடிய கணிப்பொறி வழங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**19—**

**மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா 38648—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில் சமூக நல ஆணையரகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

*(ஆ)* கடந்த ஆண்டு எத்தனை பேருக்கு சீருடைகள் தைக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டத்தில் சமூக நல ஆணையரகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மகளிர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு செயல்படுகின்றன.

1) பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சேலம்-5.

2) ஆத்தூர் ஆதி திராவிட பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம், ஆத்தூர்.

[2003 நவம்பர் 7

(ஆ) கடந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் மொத்தம் 5,12,942 பேருக்கு சீருடைகள் தைத்து வழங்கப்பட்டன.

**20—**

### இரு சக்கர மிதிவண்டி

**வினா 21273—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002 ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் +2 படிக்கும் ஆதிதிராவிடர் மாணவிகளுக்கு இலவச இரு சக்கர மிதிவண்டி எத்தனை பேருக்கு அரசு வழங்கி உள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*25 பேர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.*

**21—**

### ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகள்

**வினா 32076—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகள் பற்றிய விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*பழங்குடியினர் ஆராய்ச்சி மையமானது உதகமண்டலத்திலுள்ள எம்.பாலாடாவில் 2-10-1983-ல் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இம்மையத்தின் முக்கிய நோக்கம் பழங்குடியினர் பற்றிய ஆராய்ச்சிப் பணியை நடத்துதல் அப்பணி தொடர்பான ஆய்வு அறிக்கைகளை வெளியிடுதல், அருங்காட்சியகத்தை நிறுவுதல், பராமரித்தல், அதனை மேம்படுத்துதல் மற்றும் அருங்காட்சியகம் தொடர்பான புத்தகத்தை வெளியிடுதல் போன்றவையாகும். மேலும் இம்மையம் தொடங்கியதிலிருந்து 42 ஆராய்ச்சி அறிக்கைகளையும், 3 புத்தகத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளது. பல பயற்சித் திட்டங்களையும் பழங்குடியினர் அருங்காட்சியகத்தை உலகத்தரம் வாய்ந்ததாகச் செய்யும் பணியினையும் இம்மையம் செய்து வருகிறது. இன்னும் இந்த மையம் பழங்குடியினர்கள் பற்றி முழுமையாக அறிந்துள்ளதால் அவர்கள் பற்றி ஆலோசனைகள் வழங்கும் அமைப்பாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்யும் நிறுவனமாகவும் பணியாற்றி வருகிறது.*



*2. இம்மையம் இந்தியாவிலுள்ள 14 பழங்குடியினர் ஆராய்ச்சி மையங்களில் ஒன்றாக பழங்குடியினரின் நலம், கலை மற்றும் பண்பாடு, சமுதாய மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றில் அக்கறை கொண்டு, அதற்கான ஆய்வுப் பணிகளைச் செய்து வருகிறது.*

**22—**

### வீதி செப்பனிடல்

**வினா 41600—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி; கக்கன் நகரில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் வீதி மிகவும் பழுதடைந்துள்ளதால் இதைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:**

*பழுதடைந்துள்ள இந்த வீதியை 2003-2004 ஆம் ஆண்டில் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சீரமைக்க முடிவு செய்து வால்பாறை பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண் 41, நாள்: 05-9-2003-ல் நிறைவேற்றப்பட்டு அதன்படி பணிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

[2003 நவம்பர் 7

23—

## புதியவழித் தடங்களில் பேருந்து

**வினா 1873—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் உளுந்தூர்பேட்டையிலிருந்து வந்தவாசி வரையிலும் கொண்டையான் குப்பத்திலிருந்து பெரிய குப்பம், தெள்ளார் வழியாக வந்தவாசி வரையிலும், செய்யாறிலிருந்து அனுக்காவூர், விளாரிப்பட்டு, கோவிலூர் வழியாக வந்தவாசி வரையிலும் புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதியில் உளுந்தூர்பேட்டை என்ற ஊர் இல்லை. உளுந்தை என்ற கிராமம்தான் உள்ளது. இக்கிராமம் வந்தவாசியிலிருந்து மதுராந்தகத்திற்கு கீழ்கொடுங்காலூர் கூட்டுச்சாலை, கீழ்கொடுங்காலூர், அகத்திகாபுரம், உளுந்தை கூட்டுச்சாலை, கிளியநகர், பெரும்பாக்கம் செல்லும் தடத்தில் 17.0 கி. மீட்டரில் உள்ள உளுந்தை கூட்டுச் சாலையிலிருந்து இடதுபுறம் உள்ளே 0.8 கி.மீட்டரில் உள்ளது. இத்தடத்தில் வந்தவாசியிலிருந்து கிளியாநகருக்கு புறநகர் பேருந்துகள் மூலம் தினசரி 4 நடைகளும், மதுராந்தகத்திலிருந்து கீழ்கொடுங்காலூர் கூட்டுச் சாலை வரை நகரத்தடம் எண்டி14-ன் மூலம் தினசரி 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. அரசு விதிகளின்படி பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திற்குள் அமைந்துள்ள ஊர்களை பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகக் கருத வேண்டும். உளுந்தை 0.8 கி.மீ.ல் அமைந்துள்ளதால் இக்கிராமத்தை பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதலாம். எனவே உளுந்தை கிராம மக்கள் வந்தவாசி செல்வதற்கும் மதுராந்தகம் செல்வதற்கும் வசதி உள்ளது.

வந்தவாசி கொண்டையான் குப்பம் (வழி) செம்பூர், மிகா நல்லூர், நல்லூர் வழித்தடத்தில் வேலூர் மற்றும் காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் 12 நடைகளும் தனியார் பேருந்து மூலம் 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. பெரிய குப்பம் நல்லூரிலிருந்து 1 கி. மீ. தொலைவில் உள்ளது. தற்சமயம் பெரிய குப்பம் கிராம மக்கள்



2003 நவம்பர் 7]

நல்லூர் வந்து நல்லூரிலிருந்து வந்தவாசி வருகின்றனர். வந்தவாசி—திண்டிவனம் சாலையில் தெள்ளார் கிராமம் உள்ளது. இக்கிராமத்தின் வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் பெருமளவில் இயக்கப்படுகின்றன.

செய்யாறு—வந்தவாசி (வழி) அனுக்காவூர், விளாரிப்பட்டு, கோவிலூர் வழியாக எந்தப் பேருந்தும் நேரடியாக வந்தவாசிக்கு இயக்கப்படவில்லை என்பதால் இது ஒரு புதிய வழித்தடமாகும். இருப்பினும் செய்யாறிலிருந்து இடையிலுள்ள ஊர்களான அனக்காவூர், விளாரிப்பட்டு, கோவிலூர் போன்ற கிராமங்களுக்கு டி57 மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. நகரத்தடம் டபிள்யூ 1 மூலம் வந்தவாசி—செய்யாறு (வழி) வினாயகபுரம், கோவிலூர் என இரண்டு நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே கோவிலூர்—வந்தவாசி, கோவிலூர்—செய்யாறு போன்ற ஊர்களுக்குச் செல்ல பேருந்து வசதி உள்ளது. எனவே கோரிக்கைத் தடத்தில் புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

## பேருந்து வசதி

**வினா 15701—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, காவேரிராஜபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் ஆணைப்பாளையம், மிட்டாபாளையம், அத்திப்பட்டு, இராமாபுரம், ரெங்காபுரம், பங்காருகானப்பள்ளி ஆகிய ஊர்களிலிருந்து கல்வி பயில வருவதால், அவர்கள் வசதிக்கு ஏற்ப காலை 9.30 மணி மற்றும் மாலை 4.30 மணிக்கு காவேரிராஜபுரத்திற்கு பேருந்துகள் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்பொழுது விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நகரத்தடம் எண்டி 90 அரக்கோணத்திலிருந்து காவேரிராஜபுரத்திற்கும் கனகம்மா சத்திரத்திற்கும் இருமுனைகளில் இயக்கப்படுகிறது.

1. அரக்கோணம்—காவேரிராஜபுரம் வழி ஆணைப்பாளையம், மிட்டாப்பாளையம், அத்திப்பட்டு, இராமாபுரம், ரெங்காபுரம், பங்காருகானப்பள்ளி.

2. அரக்கோணம்—கனகம்மாசத்திரம் வழி காவனூர், கீழ்குப்பம், கோனலம்.

தற்பொழுது காலை 8.30 மணிக்கு அரக்கோணத்திலிருந்து கனகம்மாசத்திரத்திற்கும் காவனூர், கீழ்குப்பம், கோனலம் வழியாகவும் மாலை 3.30 மணிக்கு கனகம்மாசத்திரத்திலிருந்து அரக்கோணத்திற்கு கோனலம், கீழ்குப்பம், காவனூர் வழியாகவும் இயக்கப்படுகிறது. மேறகூறியபடி இயக்கப்படும் தடத்தை மாற்றி இயக்கினால் காவனூர், கீழ்குப்பம், கோனலம் ஆகிய ஊர் மக்களிடமிருந்து எதிர்ப்பு வரும். ஆகவே டி.90 தடத்தை ஆணைப்பாளையம், மிட்டாப்பாளையம் பள்ளி மாணவர்கள் காவேரிராஜபுரம் சென்று பயில நேரத்தை மாற்றியமைக்க சாத்தியமில்லை.

25—

### பேருந்து விடும் திட்டம்

**வினா 17569—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை ஊராட்சியிலிருந்து கோண்டபுரம் வரை சிறு பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பெர்மிட் கோரி விண்ணப்பம் பெறப்படுமெனில், விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.



26—

### பேருந்து இயக்கம்

**வினா 22615—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி வழியாக பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பழவூர் வழியாக இயக்கப்படும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளும் பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளி நிறுத்தம் வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி நிறுத்தத்தில் பேருந்துகள் முறையாக நின்று செல்கின்றனவா என்பதனைக் கண்காணிக்கும் வகையில் பயணச் சீட்டு ஆய்வாளர்களால் ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படி நிறுத்தத்தில் பேருந்துகள் நின்று செல்வது உறுதி செய்யபபட்டுள்ளது.

27—

### வாகனங்கள் விவரம்

**வினா 11569—திரு மு. கார்த்தி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் எத்தனை வாகனங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாகனங்களின் எண்ணிக்கை 28 (இருபத்தெட்டு).

(ஆ) I. சுரங்கப்பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்:

| விவரம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. லோடர் | : | 2 |
| 2. டோசர் | : | 2 |
| 3. டம்பர் | : | 8 |
| 4. டிப்பர் | : | 4 |

II. அலுவலகப்பணி மற்றும் பிற பணிகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள்:-

| வ.எண். | வாகனங்கள் விவரம் | எண்ணிக்கை | பயன்பாடு விவரம் |
|---|---|---|---|
| 1. | ஜீப் | 4 | சுரங்க உபயோகத்திற்கு- 2<br>சுழல்சூளை விரிவிற்கு - 1<br>பதிவு அலுவலத்திற்கு - 1 |
| 2. | மினிவேன் | 1 | சுரங்கம் மற்றும் தொழிற்சாலை தேவைக்கு உண்டான உதிரி பாகங்கள் சேகரிப்பதற்கும் மற்றும் பெறுவதற்கும் அவற்றை தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வதற்கும். |
| 3. | கார் செயலாளர் மற்றும் பொது மேலாளர் (நிதி) அவர்களின் உபயோகத்திற்கு | 2 | - மேலாண்மை இயக்குநர் |
| 4. | மாருதி வேன் | 1 | பதிவு அலுவலக உபயோகத்திற்கு |
| 5. | வெடிமருந்து வேன் | 1 | வெடி மருந்து கொண்டு செல்வதற்கு |



| வ.எண். | வாகனங்கள் விவரம் | எண்ணிக்கை | பயன்பாடு விவரம் |
|---|---|---|---|
| 6. | ஆம்புலன்ஸ் வேன் | 1 | சுரங்கம் மற்றும் தொழிற்சாலையில் உள்ள ஆஸ்பத்திரி மற்றும் தொழிலாளர்கள் உபயோகத்திற்கு |
| 7. | பேருந்து | 2 | சுரங்கம் மற்றும் தொழிற்சாலையில் உள்ள பணியாளர்கள் காலை மற்றும் மாலை அலுவலகம் வந்து போவதற்கு<br>சுரங்கம் மற்றும் தொழிற்சாலையில் உள்ள காலனியில் உள்ள பணியாளர்கள் குழந்தைகள் பள்ளி செல்வதற்கு |

**28—**

## பொருள்களின் மதிப்பு

**வினா 31853—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம், சென்னை ஏற்றுமதி செய்முறை மையத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) மேலும் அதன் வளர்ச்சிக்கு அரசிடம் உள்ள திட்டங்கள் யாவை என அரசு அறிவிக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரத்திலுள்ள சென்னை ஏற்றுமதி செய்முறை மையத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூபாய் 3357.31 கோடி ஆகும். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | 1998-99 | ரூ. 536.88 கோடி |
| 2. | 1999-2000 | ரூ. 545.42 கோடி |
| 3. | 2000-2001 | ரூ. 690.96 கோடி |
| 4. | 2001-2002 | ரூ. 764.30 கோடி |
| 5. | 2002-2003 | ரூ. 819.75 கோடி |

(ஆ) மேலும் அதன் அபிவிருத்திக்கு உதவும்பொருட்டு இவ்வரசு மேலும் 25 இலட்சம் செலவில் அவ்வளாகத்துக்குள் ஒரு பேருந்து நிலையம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

**29—**

### காகிதம் உற்பத்தி

**வினா 31855—திரு. டி. மணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், புகளூர் காகித ஆலையில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு காகிதம் உற்பத்தி செய்யப்படுகின்றது?

(ஆ) இவ்வாலை மூலம் எங்கெங்கு காகிதம் விநியோகம் செய்யப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விரிவான அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

**விரிவான அறிக்கை**

புகளூர் காகித ஆலையில் 31-3-2003 ஆம் வரையிலான காகித உற்பத்தித் திறன் 180000 மெட்ரிக் டன்கள் ஆகும். 2002-03 நிதியாண்டில் 167878 மெட்ரிக் டன்கள் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2003-04 முதல் காகித உற்பத்தித் திறன் 230000 மெட்ரிக் டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலையில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் 2002-03 ஆம் ஆண்டு 25871 மெட்ரிக் டன்கள் எழுது காகிதம் பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, எகிப்து, சிங்கப்பூர், ஜோர்டான், ஈரான், மலேசியா, துபாய், லெபனான், சூடான், ஏமன், நைஜீரியா, இந்தோனேசியா, மியான்மர், தென் ஆப்பிரிக்கா, குவைத், தென் கொரியா, கொரியா, இங்கிலாந்து, மொரிசியஸ் தைவான் மற்றும் கிரீஸ் போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.



**30—**

### மொலாசசின் அளவு

**வினா 34392—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 31-03-2002 ஆம் தேதிய நிலவரப்படி இருப்பில் இருந்த மொத்த மொலாசசின் அளவு எவ்வளவு?

(ஆ) அவற்றின் மொத்த மதிப்பு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 31-03-2002 ஆம் தேதிய நிலவரப்படி இருப்பில் இருந்த மொலாசஸ் அளவு 6,532,942 டன்கள் ஆகும்.

(ஆ) அவற்றின் மொத்த மதிப்பு டன் ஒன்றுக்கு ரூ. 800/- வீதம் (கலால் வரி ரூ. 500/-நீங்கலாக) - ரூ.68.26,354.00

**31—**

### வருமானம்

**வினா 34393—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலுள்ள வடிப்பகம் மூலமாக 1999-2000, 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள வடிப்பகங்கள் மூலமாக 1999-2000, 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் கிடைத்த

[2003 நவம்பர் 7

வருமானம் பின்வருமாறு:-

| ஆண்டு | வருமானம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 834.81 |
| 2000-2001 | 717.55 |
| 2001-2002 | 1065.59 |

32—

### தரிசு நிலங்கள்

**வினா 42192—அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு புகளூர் காகித ஆலைக்கு நாமக்கல், கரூர் மாவட்டங்களில் ஒதுககியுள்ள தரிசு நிலங்கள் எத்தனை ஹெக்டேர்?

(ஆ) அவற்றில் பயிரிடப்போகும் பயிர்கள் அல்லது மரங்கள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 107 ஹெக்டேர் தரிசு நிலமும் கரூர் மாவட்டத்தில் 80 ஹெக்டேர் தரிசு நிலமும் தமிழ்நாடு அரசு காகித ஆலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு பத்திரிகை மற்றும் காகித நிறுவனம் இந்தத் தரிசு நிலங்களில் தனது ஆலை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களான துபாபுல், சவுக்கு மற்றும் கத்திச் சவுக்கு (அகேசியா) ஆகிய மரக்கூழ் வகை மரங்களைப் பயிரிட உத்தேசித்துள்ளது.

33—

### ஊரக வளர்ச்சி வங்கி

**வினா 32807—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 7]

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் இயங்கிவரும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக, திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லாத நிலையில் கோவில்பட்டி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்புகள் இல்லை.

34—

### கூட்டுறவு பிரதம நிலவள வங்கி

**வினா 37897—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற கூட்டுறவு பிரதம நிலவள வங்கிக்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட அரசு இடம் ஒதுக்கித்தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாத வாடகையாக ரூ.5000/- வழங்கப்பட்டு வருகிறது. இவ்வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அடிமனை வாங்க வங்கியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலை உள்ளது.. மேலும்

[2003 நவம்பர் 7

கூட்டுறவுச் சங்கங்களுக்கு/வங்கிகளுக்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பாக செயல் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லாத நிலையில் திருக்கோவிலூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு அலுவலகக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கித்தர தற்போது வாய்ப்புகள் இல்லை.

35—

**குடும்ப அட்டை விண்ணப்பம்**

**வினா 32162—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் புது குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்துள்ளோர் எத்தனை பேர்?

(ஆ) விண்ணப்பித்தவர்களுக்கு குடும்ப அட்டை எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ளடங்கிய புதுக்கோட்டை மற்றும் கந்தர்வகோட்டை வட்ட வழங்கல் அலுவலகங்களில் புதிய குடும்ப அட்டை கேட்டு வரப்பெற்ற 639 மனுக்களில் (புதுக்கோட்டை வட்டத்தில் - 627 மற்றும் கந்தர்வகோட்டை வட்டத்தில் - 12) உரிய விசாரணைக்குப் பிறகு தகுதியின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட 216 (புதுக்கோட்டை வட்டம் - 211 மற்றும் கந்தர்வகோட்டை வட்டம் - 5) மனுக்கள் தவிர, புதுக்கோட்டை வட்டத்திற்குரிய தகுதியானவையென்று கண்டறியப்பட்ட 416 மனுக்களில் 26 மனுதாரர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 397 மனுக்களுக்கு (புதுக்கோட்டை வட்டத்தில் 390 மனுக்கள் - கந்தர்வகோட்டை வட்டத்தில் 7 மனுக்கள்) சென்னை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டுப் பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டு விடும்.



2003 நவம்பர் 7]

36—

**குடும்ப அட்டை மனு**

**வினா 34435—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் உள்ள குடும்ப அட்டைகள் எத்தனை?

(ஆ) புதிய குடும்ப அட்டை கேட்டு மனு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(இ) இந்த குடும்ப அட்டைகள் எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதியில் மொத்தம் 1,52,310 குடும்ப அட்டைகள் புழக்கத்திலுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| விவரம் | செங்கற்பட்டு வட்டம் | திருக்கழுக்குன்றம் வட்டம் |
|---|---|---|
| அரிசி அட்டைகள் | 92,187 | 40,185 |
| கூடுதல் சர்க்கரை அட்டைகள் | 5,898 | 3,696 |
| கூடுதல் மண்ணெண்ணெய் அட்டைகள் | 7,809 | 2,363 |
| காவலர் அட்டைகள் (மண்ணெண்ணெய் அட்டைகள்) | 143 | 29 |
| **மொத்தம்** | **.. 1,06,037** | **46,273** |
| **ஆக மொத்தம்** | **.. 1,52,310** | |

(ஆ) மற்றும் (இ) குடும்ப அட்டை வழங்கக்கோரி செங்கற்பட்டு வட்டத்தில் 316 மனுக்களும் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் 94

மனுக்களும் பெறப்பட்டுள்ளன. அவற்றில் செங்கற்பட்டு வட்டத்தில் 103 நபர்களுக்கும், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் 63 நபர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மற்றவர்க்ள் உரிய சான்றுகளை சமர்ப்பித்த பின்னால் விசாரணை செய்யப்பட்டு, குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

**குடும்ப அட்டைகள் விண்ணப்பம்**

**வினா 34705—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, செங்கற்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் வட்ட வழங்கல் அலுவலகங்களில் கடந்த 2001-2002 ஆம் ஆண்டிற்கு குடும்ப அட்டைகள் விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, செங்கற்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் வட்ட வழங்கல் அலுவலகங்களில் 2001-2002 ஆம் ஆண்டில், புதிய குடும்ப அட்டை கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களில், 360 விண்ணப்பதாரர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதர மனுக்கள் உரிய சான்றிதழ்களுடன் பெறப்படாததால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

**38—**

**தெரு விளக்கு**

**வினா 29402—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள குரங்கு நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு தெரு விளக்கு போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள குரங்கு நீர்வீழ்ச்சி இந்திரா காந்தி வன உயிரின உய்விட சரணாலயப் பகுதி ஒதுக்குக் காட்டில் உள்ளது. 1972 ஆம் வருட வனஉயிரினப் பாதுகாப்புச் சட்டத்தின்படி சரணாலயப் பகுதியில் காலை 6 மணி முதல் மாலை 6.30 மணி வரை மட்டுமே பிரவேசிக்க அனுமதிக்க இயலும். மேலும் இரவு நேரங்களில் வன விலங்குகள் தண்ணீர் குடிக்க நீர்வீழ்ச்சிக்கு வரும் சமயம் தெரு விளக்குகள் இருந்தால் விலங்குகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. வால்பாறை தொகுதியில் உள்ள குரங்கு நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு தெரு விளக்கு அமைக்க அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.



**39—**

**மெல்லிய நூலிழையாக்குதல்**

**வினா 26916—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்கள் நெய்கின்ற ஜமக்காளங்கள், கம்பளிகள் பருமனான நூலிழையாக இருப்பதை மெல்லிய நூலிழையாக்க அரசு ஆலோசனை கூறுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஜமக்காளங்கள், தரை விரிப்பாக பயன்படுத்தப்படுவதாலும், கம்பளிகள் குளிர் பிரதேசத்தில் பயன்படுத்தப்படுவதாலும்,

[2003 நவம்பர் 7

நெசவாளர்கள் நெய்கின்ற ஜமக்காளங்கள், கம்பளிகள் பருமனான நூலிழையாக இருப்பதை மெல்லிய நூலிழையாக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

40—

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா 31941—திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) What is the position of silk Co-operative weavers society started 15 years back at Kelamangalam?

(b) Is it running under profit?

(c) If so, the details thereof?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தாலுகா, கெலமங்கலத்தில் எஸ்.ஏ. 90. கெலமங்கலம் பட்டுத் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 30-1-1978-ல் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வந்தது. இச்சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்ததாலும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் காசுக்கடன் புதுப்பிக்க இயலாத காரணத்தினாலும், உறுப்பினர்களின் எண்ணிக்கை 25-க்குக் குறைவாக இருந்ததாலும், இச்சங்கம் 1983-ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 137 (2) (பி)-ன்கீழ் 24-9-1997-ல் கலைக்கப்பட்டுவிட்டது.

(ஆ) மற்றும் (இ) கேள்வி எழவில்லை.



2003 நவம்பர் 7]

41—

## மீன் வளர்த்தல்

**வினா 20533—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, செட்டேரி டேமில் மீன்குஞ்சுகள் வளர்ப்பால் வருட வருமானத்தில் லாபம் எவ்வளவு ?

(ஆ) லாபமில்லையென்றால் மீன் வளர்ப்பை நிறுத்த அரசிடம் ஏதேனும் உத்தேசம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) செட்டேரி அணையில் நீரின் தன்மையாலும், போதுமான நீர்வரத்து இன்மையாலும் இலாபம் ஈட்டுவது தற்போது இயலாது.

(ஆ) மீன்குஞ்சுகளை இருப்பு செய்து அவை ஓரளவு வளர்ச்சியடைந்த நிலையில் பிடித்து ஏலத்திற்கு விடப்படுகிறது. இந்நிலையில் பாதிப்பு அதிகம் இல்லையாதலால் மீன்வளர்ப்பை நிறுத்த உத்தேசம் ஏதும் இல்லை.

42—

## சலவைத் தொழில் செய்யும் கருவிகள்

**வினா 22816—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள சலவைத் தொழில் செய்யும் ஏழைகளுக்கு இலவசமாக சலவைத் தொழில் செய்யும் கருவிகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எபபோது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டு வருமானம் ஊரகப்பகுதியில் ரூ.16,000/- மற்றும் நகர்ப்புறங்களில் ரூ. 24,000/-க்குட்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு துணி தேய்ப்புப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. வால்பாறை தொகுதியில் இலவச துணி தேய்ப்புப் பெட்டிகள் கோரி இதுவரை விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

43—

### சலவைப் பெட்டி

**வினா 24236—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பரளச்சி பகுதியில் சலவைப்பெட்டி வழங்கக்கோரி விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு சலவைப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், பரளச்சி பகுதியில் சலவைப்பெட்டி வழங்கக்கோரி மொத்தம் 20 நபர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

(ஆ) அவர்களுள், இதுவரை 4 நபர்களுக்கு சலவைப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.



44—

### நிதியுதவி

**வினா 34317—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை பயனாளிகளுக்கு நிதியுதவி 2002-2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது?

(ஆ) எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் 24 பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

(ஆ) ரூ. 16,71,500/-வழங்கப்பட்டுள்ளது.

45—

### விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்கும் திட்டம்

**வினா 22831—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு சில கிராமங்களிலும், பேரூராட்சிகளில் ஒரு சில கிராமங்களிலும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) தமிழக அரசு விளையாட்டுகளில் இளைஞர்களை ஊக்குவிக்க கிராமங்களிலும், பேரூராட்சிகளிலும் மற்றும் நகர்ப்புறங்களிலும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஏற்படுத்த அரசு ஆணை நிலை எண் 24, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள் 10-7-2000-ல் ஆணையிட்டது. அவ்வாணையின்படி, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:-

| வஎண் | ஊராட்சி ஒன்றியம் | உடற்பயிற்சி மையங்கள் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | ஆனைமலை | 1. சோமந்துரை, 2. வாழைக்கொம்பு நகர், 3. ஜல்லிப்பட்டி, 4. திவான்வாபுதூர், 5. அங்கலக்குறிச்சி, 6. ஆத்தூர் பொள்ளாச்சி, 7. ரமணமுதலிப்புதூர், 8. தென்கங்கம்பாளையம். |
| | பேரூராட்சி | |
| 1. | கோட்டூர் | 1. 1வது வார்டு சந்தைப்பேட்டை வளாகம், 2. 21வது வார்டு மலையாண்டி பட்டணம் |
| 2. | வால்பாறை | 1. வால்பாறை பேரூராட்சி விளையாட்டு மைதானம், 2. வால்பாறை பேரூராட்சி விளையாட்டு மைதானம் (2 இடங்கள்) |
| 3. | வேட்டைக்காரன் புதூர் | 1. 7வது வார்டு-தெற்கு மேட்டுத் தெரு (எம்.ஜி.ஆர். நகர்) 2. 1வது வார்டு-மீனாட்சிபுரம் வீதி. |



**46—**

## உடற்பயிற்சி மையம்

**வினா 27016—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை காந்தி நகரில் காமராஜபுரம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி மையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை காந்தி நகரில் காமராஜபுரம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**47—**

## விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

**வினா 31121—திரு. ராதாரவி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர் விளையாட்டில் ஆர்வம்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2003 நவம்பர் 7

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) உடல் ஊனமுற்றோர் விளையாட்டில் ஆர்வம்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல் திட்டம் ஏதும் தனியாக வகுக்கவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

48—

**விளையாட்டுத் திட்டம்**

**வினா 37136—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

49—

**விளையாட்டுப் பயிற்சிப் பள்ளி**

**வினா 38703—திரு. ப. அரசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 நவம்பர் 7]

விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க மூன்று மாவட்டங்களுக்கு ஒரு விளையாட்டுப் பயிற்சிப் பள்ளியென துவங்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க மூன்று மாவட்டங்களுக்கு ஒரு விளையாட்டுப் பயிற்சிப் பள்ளியென துவங்க கருத்துரு அரசிடம் ஏதுமில்லை.

50—

**விளையாட்டுப் பணி**

**வினா 41254—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் விளையாட்டுப் பள்ளிகள் துவக்கி, இளைஞர்களிடையே திறமையை வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தனியாக மாவட்டந்தோறும் விளையாட்டுப் பள்ளிகள் துவக்கி, இளைஞர்களிடையே திறமையை வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 111-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருத்த அறிக்கை

### வேலைநிறுத்தம் செய்ததற்காக விசாரணைக்குட்படுத்தப்படும் அரசு ஊழியர்கள் எண்ணிக்கையில் திருத்தம்

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள். இதை முடித்துவிட்டு உங்களைக் கூப்பிடுகிறேன்.

பேரவை விதி 111-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஊழியர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில் 6-11-2003 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் பேசும்போது நான் பின்வருமாறு விளக்கம் அளித்தேன்:

"மீண்டும், மீண்டும் ஒன்றரை இலட்சம் பேரை வேலையை விட்டு நீக்கம் செய்து விட்டோம், இரண்டு இலட்சம் பேரை வேலை நீக்கம் செய்து விட்டோம் என்கிறார்கள். ஏற்கெனவே, இந்த வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்பாக எத்தனை பேர் தமிழக அரசுப் பணியில் இருந்தார்களோ, அத்தனை பேரும் இப்போதும் பணியில் இருக்கிறார்கள். 6,072 பேர்களைத் தவிர..." என்று குறிப்பிட்டிருந்தேன்.

உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அன்றையதினம் குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட எண்ணிக்கை 6,072. ஆனால் பின்னர், அது திருத்தப்பட்டு சரியான இறுதி எண்ணிக்கை 5,729 எனக் குறைக்கப்பட்டது. எனவே உச்ச நீதிமன்ற ஆணைப்படி நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகள், தற்போது இந்த 5,729 பேரின் மனுக்களை விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நேற்று நான் குறிப்பிட்ட 6,072 பேர் என்பதைத் திருத்தி 5,729 பேர் என்று அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.





## 3. தகவல் கோரல்

### (அ) சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் துவக்க நாளிலிருந்து, ஒரு பிரச்சினையை நான் இந்த மன்றத்தில் தங்கள் வாயிலாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆளுங்கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், எல்லோருக்கும் இந்த அவையிலே சம உரிமை உண்டு. அது எங்களுக்குக் கிடைக்காவிட்டால், பேரவைத் தலைவரிடத்திலே முறையிடுவோம். நீங்கள் எங்களுக்கு அந்த உரிமையைப் பாதுகாக்கிற நிலையிலே இருக்கிறீர்கள்; அதுதான் ஜனநாயக மரபு. எதிர்க்கட்சி இல்லாமல் ஆளுங்கட்சி இருக்க முடியாது. ஆனால் ஆளுங்கட்சிக்கு பெருமை; ஆளுகிற கட்சி அதற்குரிய மரியாதை உண்டு. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த அவையின் நடவடிக்கைகளை தமிழ்நாட்டு மக்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல படிப்பதைவிட பார்ப்பதைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். அரசாங்கத்தின் சார்பிலே Film Division சார்பிலே இங்கே படம் எடுத்து அதை எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும் எடுக்கிறார்கள் மற்றும் தருகிறார்கள். ஆனால் இதுவரையிலே நான் ஒளிவுமறைவு இல்லாமல் சொல்கிறேன்; முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆளுங்கட்சிக்குக் காட்டுகிற சலுகை, அவர்களுக்குத் தருகிற நேரம் இவற்றோடு ஒப்பிடுகிறபோது எங்களை நோஞ்சானாகக் காட்டுகிறபோது, மக்கள் எங்களுடைய கடமையில் நாங்கள் தவறிவிட்டதாகக் கருதுகிறார்கள். இந்தப் பிரச்சினையை பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துவைத்ததோடு மட்டுமல்ல; எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. தூர்தர்ஷனில் இருக்கிற ஒரு பெரிய அதிகாரி இங்கே இருக்கிற செய்தித் துறையினுடைய இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறாராம். அதாவது நீங்கள் ஆளுங்கட்சிக்கே அதிகம் முக்கியத்துவம் தருகின்ற காரணத்தால் எதிர்க்கட்சிகள் எங்களோடு சண்டை போடுகிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரு குற்றச்சாட்டு என்றால், கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்றால் அதன் கடித நகல் ஏதாவது இருந்தால் அந்தக் கடிதத்தின் நகலைக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்; முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை, முதலமைச்சர் அவர்களுடைய மரியாதையை காட்டுவதிலே எங்களுக்கு ஒன்றுமில்லை. அமைச்சர் பெருமக்களைக்கூட காட்டட்டும். காரணம் அவர்கள் Treasury Bench-லே அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் எங்களுக்குரிய மரியாதை இல்லாத காரணத்தால் இது உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தால், ஆளுங்கட்சிக்கு சாதகமாகத்தான் அந்த அரசு நிறுவனம் இருக்கும். ஆகவே, தயவுசெய்து எல்லாத் தொலைக்காட்சிக்கும் அந்த வாய்ப்பைக் கொடுங்கள். அவர்கள் யார் யாரைக் காட்டவேண்டுமென்று விருப்பமாக இருக்கிறார்களோ, யார் யாரைக் காட்டலாம் என்று கருதுகிறார்களோ அவர்களைக் காட்டட்டும். எனவே எங்களுக்கும் நம்பிக்கை இருக்கும். ஆகவே ஒரு ஆளுங்கட்சிக்கு மட்டும் சாதகமான நிலை என்று வைத்திருப்பதை இந்த அரசு மாற்ற வேண்டும். அவர்கள் மாற்றுகிறார்களோ இல்லையோ பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு நீங்கள் பாதுகாப்பு அளித்து, நாங்களும் இங்கே முறையாகப் பணியாற்றுகிறோம்; எங்களுக்கும் கை தட்டுகிறார்கள்: எங்களுக்கும் கோபம் வருகிறது, நாங்களும் சிரிக்கிறோம். ஒன்றும் இல்லை. எப்போது சோர்ந்து இருக்கிறோமோ அப்போதுதான் காட்டுகிறார்கள். டல்லாக இருக்கும்போதுதான் காட்டுகிறார்கள். ஆகையால் நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள் உடனே இப்படி, இப்படி, இப்படி (சைகையுடன) என்கிறார்கள் C.M.....

*முற்பகல் 11-05*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டை ஏற்க இயலாது. ஏறக்குறைய 4 மணி நேரம், அதற்கு மேலும் நடக்கின்ற அவை நிகழ்ச்சிகளை ஒரு மணி நேரம் வீடியோ கேசட்டுக்குள் அடக்கி, சுருக்கித்தான் காண்பிக்கிறார்கள். அந்த நாள் முழுவதும் இந்த அவையில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றனவோ எல்லாவற்றிலும் கொஞ்சம் காட்டுகிறார்கள். இதில் நீங்கள் கவனிக்கவேண்டிய ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை அந்த கேசட்டில் பார்க்கவே முடியாது. கேசட்டில் மட்டுமல்ல; பொதுவாக இந்த அரசு வந்தது முதல், இந்தப் பேரவை அமைந்தது முதல் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பே கிடைப்பதில்லை. பெரும்பாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தலைவர்களும்தான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு நானும் மற்ற அமைச்சர்களும்



பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். நேற்றையதினம்கூட இந்த அவையில் நடைபெற்ற நிகழ்வுகளை நமது Information Division பிரிவினர், Film Division பிரிவினர் cassette தயாரித்துக் காண்பிக்கின்றபோது, விழுப்புரம் நகர்மன்றப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி என்னென்ன பேசினாரோ கிட்டத்தட்ட அவ்வளவையும் காண்பித்தார்கள். அதைப்போலவே, திரு. ஹேமச்சந்திரன் பேசியதையும், திரு. பழனிசாமி பேசியதையும், இதர உறுப்பினர்கள் பேசியதையும், எல்லாவற்றையும் காட்டிவிட்டு அவர்கள் என்ன கருத்து சொன்னார்களோ அதற்கு நாங்கள் சொல்கின்ற பதிலையும் காட்டுகிறார்கள். ஆகவே ஒருதலைப்பட்சமாக நிச்சயமாக இந்த அரசு நடந்துகொள்ளவில்லை. Information பிரிவோ Film Division பிரிவோ, ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ளவில்லை. இதில் குற்றம் குறை ஏதேனும் இருக்ுமேயானால் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரின் பார்வையில்தான், கண்ணோட்டத்தில்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நோத்திலே பாரபட்சம் இல்லாமல் எல்லா உறுப்பினர்களுடைய பேச்சுகளும் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். இப்படி பாரபட்சம் இல்லாமல் இருக்கின்ற நேரத்திலே, இந்த அவையிலேகூட எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அனுமதியைப்போல எல்லாத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கலாமே, அதிலே தவறு இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, அதைப்பற்றி பின்னாலே பேசுவோம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு)

### (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு போவைத் தலைவா அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, I am on a point of order.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். நான் பொதுவாக எல்லாவற்றுக்கும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். அதாவது இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் குறுகிய காலக் கூட்டத் தொடர். இதில் ஏறத்தாழ ஒத்திவைப்புப் பிரச்சினைகள், சிறப்புக் கவன ஈர்ப்பு, கவன ஈர்ப்பு என்று நூற்றுக்கு மேற்பட்டவைகள் வந்திருக்கின்றன. அதிலே எவ்வளவு முக்கியமானவை என்று கருதுகிறோமோ அவைகளெல்லாம் ஒரு நாளைக்கு சில தடவை இரண்டு முறைகூட எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்றைக்கூட எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். வேறு முக்கியமான பிரச்சினைகள் இருந்தால் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பேசுகிறபோது, நேற்றையதினம் திரு. ஹேமச்சந்திரன் பேசியதைப்போல, திரு. பழனிசாமி பேசியதைப்போல பேசி இருக்கலாம். அதை நேற்று புறக்கணித்து விட்டு, பிரதான எதிர்க்கட்சி போன்றவர்கள் எல்லாம் போய் விட்டார்கள். ஆகவே இன்றைய கூட்டத் தொடரிலே, இன்றைக்கு நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மற்றவைகளைப்பற்றி எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைக்குச் சூழ்நிலை இல்லை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, point of order.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

## 4. அறிவிப்புகள்

### (அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழக ஆட்சிமன்றம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைக்கும்,



கல்விக் குழுவிற்கும் அவைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன.

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை : திருமதி வளர்மதி ஜெபராஜ்; திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு: திருமதி சிஎம். சூரியகலா, திரு. சி. ஞானசேகரன்;

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்கள் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் மேற்காணும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### (அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, பழைய சர்க்கார்பதி பகுதியில் பாலப் பணிகள் முடிவடையாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-10*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது; பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது; தயவுசெய்து உட்காருங்கள். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் பழைய சர்க்கார்பதி மலைஜாதி மக்கள் குடியிருந்து வருகின்ற பகுதியில் பாலப் பணிகள் முடிவடையாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(உறுப்பினர்கள் திரு. இரா. திருமாவளவன் அவர்களும், திரு. கு. ஜெயக்குமார் அவர்களும் எழுந்து நின்றுகொண்டு ஏதோ பேசிக்கொண்டே இருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட பழைய சர்க்கார்பதியில், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆற்றில் உயர்மட்டப் பாலம் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தையொட்டி இரண்டு பக்கமும் தடுப்புச் சுவர்கள் கட்டி, இணைப்புச் சாலை அமைக்கும் பட்சத்தில் பழைய சர்க்கார்பதி, நாகர்ஊத்து மற்றும் மன்னம் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள், அவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து சேத்துமடைக்கு வந்து செல்ல மிகவும் உதவியாக இருக்கும் என்பதால் இப்பணிக்கு ரூ. 7.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

ஆனால் இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், கோவை மாவட்ட ஆட்சித் தலை ரால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிதியிலிருந்து இந் த் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு 31-10-2003 அன்று இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கி, 31-12-2003-க்குள் நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்) கைநீட்டிப் பேசக்கூடாது. முறைகேடானது. தயவுசெய்து அமருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கோவை தங்கம், ஒரு கேள்வி கேளுங்கள்.

(சில திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து, அவர்களுக்குப் பேச வாய்ப்பு கொடுக்குமாறு குரல் எழுப்பினர்.)



நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(உறுப்பினர் திரு. இரா. திருமாவளவன் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்.)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பகுதி, சேத்துமடை அருகிலுள்ள பழைய சர்க்கார்பதி மலைஜாதி மக்கள் 250 குடும்பங்களில் உள்ள சுமார் ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள். (குறுக்கீடு) இப்பகுதி மக்கள் கூலி வேலைக்கும், குழந்தைகள், பள்ளிகளுக்கும் செல்ல வேண்டுமானால், 6 கிலோ மீட்டர் தூரம் வனத் துறை வழியாகச் செல்ல வேண்டும். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. கு. ஜெயக்குமார், வெளிநடப்புச் செய்தார்.)

வனத் துறை வழியாகச் செல்லும்போது, எந்நேரமும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில்கூட, திரு. செந்தில் அவர்கள் தோட்டத்தை யானைகள் அழித்துவிட்டன; 5 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. பிரசவ நேரங்களிலே, பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இப்போதுகூட இப்பகுதிக்கு அருகிலுள்ள டாணா முதல் தம்பதிமுடி வரை 5 கிலோ மீட்டர் சாலையும், சேத்துமடை முதல் தம்பதிமுடி சாலையும், டாணா முதல் சமாதானப்பதி சாலையும், மீனாட்சிபுரம் சாலையும், காளியம்மன் சாலையும் மிகவும் பழுதடைந்துள்ளன. இதையும் செப்பனிட்டு சீர்படுத்தித் தர வேண்டுகிறேன். மேலும் எனது சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலேயிருந்து 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறேன். அரசு எனது கோரிக்கையை ஏற்று 7 இலட்சம் ரூபாய் பாலப் பணிக்காக அணுகு சாலைக்காக கொடுத்து உதவி செய்து, அந்தப் பகுதி மலைஜாதி மககளின் நீண்டநாளைய கோரிக்கையை ஏற்று, உதவிபுரிந்த அரசுக்கும், ஆதிதிராவிட நலத் துறைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***(ஆ) விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் அவைமுன் வைக்கப்பெற்றவை (1 முதல் 3 வரை இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.****

*பக்கம் 232 முதல் 237 வரை இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர். (குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*



*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய, மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள பொருட்களைக் கொண்டு வருவதன் மீதான வரி (இரண்டாம்*

திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2003), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவோர் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Supplementary Budget மீதான விவாதத்தில் பேசுவதற்காக வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை இங்கே நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற Budget-ஐ, நாம் present செய்கிறபோது, 500 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய அளவுக்கு, இன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சில திட்டங்களைச் சேர்த்து, நிதியை ஒதுக்குவதற்கான ஒரு சட்டமுன்வடிவை இங்கே அவைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-15*

இந்த அதிகமான தொகையை நாம் வழங்கக்கூடிய அளவிற்கு ஏன் நம்முடைய துறை முதலிலேயே திட்டமிடவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். பொதுவாக CAG Report-ஐப் பார்க்கிறபோது, அவர்கள் சென்ற ஆண்டு அறிக்கையிலேகூட பல துறைகளிலே 1000 கோடி ரூபாய்க்கு மேல் பணம் மீதி ஆகி இருக்கக்கூடிய நிலையை சுட்டிக்காட்டி, துறை அந்த Budgetary Control-ஐயே இழந்துவிட்டதோ என்கிற ஒரு வாசகத்தைக்கூட அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பொதுவாக, உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இலவச வேட்டி சேலை என்கிற திட்டத்தை சென்ற ஆண்டு இந்த அரசு ஏனோ விட்டுவிட்டது. பிறகு மீண்டும் அதை புதுப்பிப்பதற்காக, இப்போது அதைப் புதிதாகச் சேர்த்து இருக்கிறது. முதலிலேயே அந்தத் திட்டம் தொடர்ந்து வந்திருக்குமானால், முதல் budget-லே budget present செய்கிறபோது இதற்கான வழிவகை அப்போதே கண்டு இதற்கு நிதி ஒதுக்கீட்டை நாம் செய்திருக்க முடியும்.

அதேபோல இங்கே பல துறைகளிலே நம்முடைய அரசு பணத்தை ஓரளவிற்கு Loss of Revenue, காட்டக்கூடியது பற்றிக்கூட CAG Report-ல் Test check records of Sales Tax, State Excise, Agricultural Income Tax, Land Revenue, Urban Land Tax, Taxes on Vehicles and other departmental offices conducted during the year 2001-2002 revealed under assessment, short levy, அதேபோல, loss of revenue, etc. amounting to Rs. 756.99 crores in 2599 cases என்று இருக்கிறது. 756.99 கோடி வருவாய் இழப்பிற்கு நாம் இங்கே ஆளாகி இருக்கிறோம். அதேபோல Sales Tax-ஐப் பொறுத்தளவில் 62.18 கோடி ரூபாய்க்கு irregularly waived even though the conditions for sanction of waiver were not satisfied என்று இருக்கிறது. ஆகவே irregular-ஆக 62.18

கோடி ரூபாய், நிதி நெருக்கடி இருக்கிறபோது, ஏன் இதை waive செய்தோம் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அவையில் விளக்க வேண்டும்.

அதேபோல Waiver of Rs. 427.21 crore, irregular-ஆக ஒரே ஒரு Mega industry-க்கு waive செய்து இருப்பதாகக்கூட CAG Report-லே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனம் லாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு நிறுவனம். அதற்கு 427.21 கோடி ரூபாயை ஏன் waive செய்தார்கள் என்பதை அரசு இங்கு விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல Mis-use of permits by All India Tourists Transport Operators resulted in loss of revenue of Rs. 38.98 crores என்று இருக்கிறது. 38.98 கோடி ரூபாய் All India Tourists Transport Operators-களிடம் நாம் permit-ஐ சரியாக கண்காணிக்காததினுடைய விளைவு இவ்வளவு Loss ஏற்பட்டு இருக்கிறது.

அதேபோல Additional Tax of Rs. 251.84 crores in respect of 1,93,721 temporary permits issued was omitted to be levied என்று, அதிலேகூட 251.84 கோடி ரூபாய்க்கு நாம் இழப்பைச் சந்தித்து இருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைகள் வராமல் பார்த்துக்கொள்வோம் என்று சொன்னால், நாம் நிதி நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான ஒரு வாய்ப்பு இருந்திருக்கும்.

அதேபோல விவசாயத்தை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், அந்த விவசாயத்தில் Tamil Nadu Horticulture Producers Society என்று வைத்து இருக்கிறோம்; அந்த society-க்கு கடன் வாங்கிக்கொடுத்து இருக்கிற பணத்திலே, விவசாயத் துறையில் Horticulture துறை 1.12 கோடி ரூபாயை பயன்படுத்தாமல், — நாம் கடன் வாங்கிக்கொடுத்த பணத்தையே அவர்கள் 3 ஆண்டுகளாக வங்கிக்குக் கொண்டுபோய் deposit செய்துவிட்டு, பயன்படுத்தாமல் — விட்டிருக்கிறார்கள். அதிலே 51.74 இலட்சம் ரூபாய்க்கு வட்டி அங்கே தேங்கிப்போய், அதையும் பயன்படுத்தாமல் விட்ட நிலை இருக்கிறது. இப்போது விவசாயம் பாதிக்கப்பட்டு இருக்கிற சூழலில், சொட்டு நீர்ப் பாசனத்திற்கோ அல்லது மற்றவற்றிற்கோ அவர்கள் முறையாகச் செலவு செய்து இருக்கலாம். இப்போது மூலிகைச் செடி பற்றி ஐதராபாத்திலிருந்து ஜெயக்குமார் என்ற ஒரு விஞ்ஞானி அதி நூதனமான மூலிகைச் செடிகளை தமிழ்நாட்டில் பயன்படுத்தினால் நிச்சயமாக விவசாயிகளுக்கு வளம் ஏற்படும் என்று சுட்டிக்காட்டி



இருக்கிறார். அதேபோல நம்முடைய ஓசூரிலே டாக்டர் பாபு என்கிற ஒரு விஞ்ஞானி Grow More என்கிற ஒரு Institute வைத்துக்கொண்டு, அங்கே ஸ்ரீவா என்கிற ஒரு தாவரத்தின் பெயர் கொண்டிருக்கக்கூடிய கரும் துளசி, இனிப்பு துளசியைப் பயன்படுத்தினால், சர்க்கரை வியாதி போன்ற நோய் இருப்பவர்கள் அந்தத் துளசியை சாப்பிட்டாலே குணமாகும் என்கிறார்கள். அதைச் சாப்பிடும்போது 2 நிமிடம் நம்முடைய வாயில் இனிப்பு இருக்கும்; அப்படிப்பட்ட அதி நவீன துளசி, ஆஸ்திரேலியா, மெக்சிகோ போன்ற நாடுகளில் இருக்கிறது. அவற்றையெல்லாம் இறக்குமதி செய்து, தமிழகத்திலே அவற்றையெல்லாம் பயிர் செய்திருந்தோம் என்று சொன்னால் நிச்சயமாக விவசாயிகளுக்கு ஒரு வாழ்வு கிடைக்கக்கூடிய சூழல் இருக்கும்.

விவசாயிகள் கரும்பு supply செய்தும் 6 மாதமாக இன்னும் பணமே அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் அங்கே 10 டன் மொலாசஸ் அப்படியே இருப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக முன்னுரிமை அளித்து அதை முதலிலே விற்று விவசாயிகளினுடைய கடனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எல்லாம் நலிந்து போய் இருக்கின்றன. அதற்கு ஏதாவது நீங்கள பணத்தை ஒதுக்கீடு செய்து அவற்றை வளம்பெறச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும்.

*முற்பகல் 11-20*

மருத்துவத்தைப் பொறுத்தளவில், நம்முடைய மருத்துவத் துறையில் 6.81 கோடி ரூபாய்க்கு Laundry sets அதாவது, ஆங்காங்கே இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று 16 unit-களுக்கு தமிழக அரசு ஆங்காங்கே Hospital-க்குக் கொடுத்தார்கள். அதிலே ஒன்றே ஒன்று, நாகர்கோவிலில் இருக்கிற Laundry unit மட்டும்தான் இப்போது வேலை செய்கிறதேயொழிய மற்ற 15 இடங்களிலே 6.81 கோடி ரூபாய்க்கு நாம் பணம் கொடுத்தும் இன்னும் Laundry unit-கள் இந்தப் பணிக்கு பயன்படுத்தக்கூடிய ஒரு சூழலுக்கு வரவேயில்லை. அது ஏன் என்பதை அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது C.A.G. Report-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து கே.கே. நகர் Peripheral Hospital-ல் பார்த்தோம் என்று சொன்னால் அங்கே compound கட்டாத ஒரே ஒரு காரணத்தாலே 42.29 கோடி ரூபாய்க்கான இடம் இன்று பறிபோய் இருக்கிறது. யாரோ encroach பண்ணியிருக்கிற காரணத்தாலே இப்போது அந்த hospital-க்குக்கூட 42.29 கோடி ரூபாய் இழப்பு என்றும் C.A.G. Report-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

Medical College-ஐப் பொறுத்தளவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேனி, வேலூர், கன்னியாகுமரியிலே ஆசாரிப்பள்ளம் போன்ற இடங்களில் மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கான ஆணையைப் பிறப்பித்து அதற்கான வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதற்கு Medical Council of India அனுமதி கொடுக்காமல் எங்கெங்கோ நம்மை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையைப் பார்த்தால் Hindu-வில் வந்தது, நேற்றோ, முந்தின நாளோ. அந்த Hindu paper-ல் பார்க்கிறபோது, குரோம்பேட்டையில் பாலாஜி மெடிக்கல் காலேஜ் என்பது — தமிழக அரசுக்கு தெரியுமா, தெரியாதா என்று எனக்குத் தெரியவில்லை — இவர்களுக்குத் தெரியாமல் திடுதிடுப்பென்று புதிதாக ஒரு Medical College வந்திருக்கிறது.

**•மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே பேசும்போது மருத்துவத் துறையைப் பற்றிப் பேசினார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் இருக்கக்கூடிய மருத்துவத் துறை இந்தியாவிலேயே முதலாவதாக வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேனி, கன்னியாகுமரி, வேலூர் ஆகிய மருத்துவமனைகளிலே, உடனடியாக கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னாலே அதற்கான application forms டெல்லியிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நேரடியாக வந்து ஆய்வு செய்வார்கள் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல உறுப்பினர் இங்கே கூறியபோது, ஏதோ அரசாங்கத்திற்குத் தெரியாமல் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசினுடைய பரிந்துரையின் பேரிலோ அல்லது தமிழக அரசினுடைய எந்தவிதமான நடவடிக்கையின் பேரிலோ இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்படவில்லை. இந்தக் கல்லூரியானது தமிழக அரசுக்குத் தெரியாமலேயே நீங்கள் கூறியபடி, Deemed University என்ற ஒரு category-யில் இந்தக் கல்லூரியினுடைய நிறுவனத்தார் நேரடியாக அங்கே இருக்கக்கூடிய, மாண்புமிகு மத்திய அமைச்சரை அணுகி, மத்திய அமைச்சரும், மத்தியில் இருக்கக்கூடிய Medical Council of India, இரண்டு பேரும் சேர்ந்து இங்கே வாங்கக்கூடிய 'Essential Certificate' என்ற certificate-ஐ வாங்காமல் தவறான முறையிலே அவர்கள் இந்தக் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு, இந்த அரசாங்கம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு சூழல் வந்த காரணத்தாலேதான், தமிழ்நாட்டிலே இப்போது 277 பொறியியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு அந்த Engineering கல்லூரியினுடைய தரமே கெட்டுப் போகக்கூடிய அளவுக்கு இன்று ஒரு சூழல் வந்து சேர்ந்திருக்கிறது. அதற்கான ஒரு வழக்கில்கூட—இப்போது தமிழக அரசு 50 மார்க் எடுத்தால்போதும் —நீதிமன்றம் ஒரு தீர்ப்பு கொடுக்க, இப்போது உச்ச நீதிமன்றத்திற்கு தமிழக அரசுகூட சென்றிருக்கிறது. எப்போதுமே நம்மிடம் N.O.C. வாங்கியதற்குப் பிறகுதான் அவர்கள் ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்கின்ற ஒரு நிலையை இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்—

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கெனவே நான் மத்திய கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். Anna University Vice-Chancellor, A.I.C.T.E-க்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இது அவ்வப்போது நடைபெற்று வருகிற ஒரு தவறான நடவடிக்கையாகும். மாநில அரசுக்கே தெரியாமல், மாநில அரசைக் கலக்காமல் சிலபேர் நேரடியாக மத்திய அமைச்சரை அணுகி, A.I.C.T.E.-ஐ அணுகி அவர்கள் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கிவிடுகிறார்கள்; அல்லது நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றத்தின் சாதகமான ஆணைகளைப் பெற்று அவர்கள் கல்லூரிகளைத் தொடங்கி விடுகிறார்கள். இப்போது ஒரு புதிய Medical College தொடங்கப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். இதுபற்றி தமிழக அரசுக்கு எதுவுமே தெரியாது. மத்திய கல்வி அமைச்சரும் அல்லது

சம்பந்தப்பட்ட துறையின் மத்திய அமைச்சரும்-- மருத்துவத் துறை மத்திய அமைச்சரும் Medical Council of India-வும் சேர்ந்து இதற்கான அங்கீகாரத்தை, sanction-ஐக் கொடுத்திருக்கிறார்கள். ஆக மாநில அரசுக்கே தெரியாமல், மாநில அரசுக்கே தெரிவிக்காமல், Education Concurrent List-ல் இருந்தபோதிலும், மத்திய அரசே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறபோது மாநில அரசு என்ன செய்ய முடியும்? ஆகவே மாநில அரசு இதைப்பற்றி திரும்பத் திரும்ப மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. ஆனால் அதற்குத் தகுந்த பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். நன்றி. ஆனால் அவையிலே அதற்காக ஒரு தீர்மானத்தைப் போட்டாவது, தமிழக அரசிடம் இதற்கு ஒரு N.O.C.-யைப் பெற்றுத்தான் ஒரு பொறியியல் கல்லூரியையோ, அல்லது மருத்துவக் கல்லூரியையோ, இயக்குவதற்கான அனுமதியை M.C.I.யோ அதேபோல All India Council for Technical Education கொடுக்க வேண்டுமென்ற நிலையை நாம் உறுதிப்படுத்த வேண்டும். ஏனென்றால் அரசு, கல்லூரி தொடங்குவதற்காக 4 ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறது. அதற்கு எந்தவிதமான அனுமதியையும் கொடுக்காத--(குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மத்திய அரசும் தலையிடுகிறது. A.I.C.T.E., Medical Council of India போன்ற அமைப்புகளும் தலையிடுகின்றன. நீதிமன்றங்களும் தலையிடுகின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், மீனாட்சி காலேஜ் என்னும் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி அண்மையில் தொடங்கப்பட்டது. அவர்கள் முதலில் தமிழக அரசை அனுமதி கேட்டு அணுகினார்கள். பல காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்பட்டது. திரும்ப அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபோது அதை தமிழக அரசு எதிர்த்தது. பின்னர் அவர்கள், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றம் அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டது. இத்தகைய சூழ்நிலையில் மாநில அரசு என்ன செய்ய முடியும்?



**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். ஏனென்றால் இப்போது நீதிமன்றம், மாநில அரசாங்கத்தினுடைய No objection தேவையில்லை என்று சொல்லி, உயர் நீதிமன்றமோ, உச்ச நீதிமன்றமோ தீர்ப்பு கொடுத்த பிறகு, மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்து நடக்கின்ற கல்லூரிகள் முறையானதாகத்தானே நடப்பதாக நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கல்லூரிகள் முறையாக நடைபெறவில்லை. அங்கே பல தவறுகள் நடைபெறுகின்றன. தேவையான Qualifications, தேவையான வசதிகள், அடிப்படை வசதிகள்கூட அங்கே இல்லை என்று சில பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களே, குறிப்பாக Anna University Vice-Chancellor அவர்களே கடிதம் எழுதியிருக்கிறார். ஆனாலும் A.I.C.T.E.அதைக் கண்டுகொள்ளவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், ஒரு மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள். நிறைய பேர் பேசவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் குறிப்பிடுகையில் முறையாக நடப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினார். முறையாக நடக்கிறது என்று சொன்னால், முறையாக தமிழக அரசு நான்கு ஆண்டுகளாக Vellore Medical College, Theni Medical College, Kanniyakumari Medical College-க்கு அனுமதி கேட்கின்றபோது மட்டும் மத்தியிலே ஆளுகின்ற B.J.P. முறையாக ஓர் அரசு நடத்தக்கூடிய நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்காதவர்கள்** என்பதை நீங்கள் விளக்க வேண்டும். என்ன conditions? எல்லா conditions-களையும் fulfil பண்ணிகூட, Vellore Medical College வரவில்லை. ராஜா இதற்காக வக்காலத்து வாங்க வேண்டாம். (குறுக்கீடு). அங்கே முறைகேடான நிலைமை நடந்துகொண்டு இருக்கிறது என்பதை நான் விளக்கக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு). I am not yielding; I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே இங்கே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்; உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய Vellore Medical College-ல Dean போடப்படாமல் இருக்கிறது. உடனடியாக Dean-ஐப் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். ஒரே ஒரு நிமிடம் நேரம் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அடுத்து மணல் தட்டுப்பாடு. இப்போது மணலை அரசே supply செய்வதற்காக நடவடிக்கை எடுத்து இருக்கிறது, அதிலே ஒரு கருத்தை அரசுக்கு நான் ஆலோசனையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது ஒரு லாரி போய் நின்றால், 3 நாட்கள் ஆனாலும் load கிடைக்கவில்லை. ஆனால் எங்கள் வேலூரில் பார்த்தால் ரூ.600 ஒரு load இருந்தது. இப்போது ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் load எடுக்க வேண்டும் என்று சொன்னால், எங்களுக்கு அது பெரிய இழப்பு. ஆற்றுப்பக்கத்திலே இருக்கிற எங்களுக்கெல்லாம்—எங்களுக்கு உரிய விலை, Market-லே என்ன விலையோ அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிர்ணயிக்க வேண்டும். அதேபோல சென்னைக்கு வந்தோம் என்று சொன்னால் ரூ.11,000. load என்கிறார்கள். கன்னியாகுமரிக்கு போனால் பதினோராயிரம் load என்று சொல்கிறார்கள். இப்படி நடுவில் இருக்கிறவர்கள் என்ன வாடகை கேட்கிறார்களா? என்ன, ஏது? ஆகவே இந்த மணல் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்குவதற்காக உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) போதும். போதும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணல் குவாரியை அரசே மேற்கொண்ட பிறகு, மணல் குவாரி செய்கின்ற இடத்தில் Depot வைத்து இருக்கிறார்கள். அந்த Depot-வில் விற்கப்படுகிற விலையை அரசு நிர்ணயித்து இருக்கிறது. அதுதான் ஒரு load-க்கு ஆயிரம் ரூபாய்



என்று நிர்ணயித்து இருக்கிறோம். அதன் பிறகு அங்கிருந்து வாங்குபவர்கள் Transperta ion Charges கொடுக்க வேண்டும் அல்லவா? பக்கத்தில் வேலூருக்குச் சென்றால் Transportation charge குறைவாக இருக்கிறது. கன்னியாகுமரிக்கு எடுத்துச் சென்றால் Transportation charge கூடுதலாக இருக்குமல்லாவா? அதனால்தான் ஊருக்கு ஊர் விலை வித்தியாசப்படுகிறது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறைத் அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக்கூடிய ஒரே ஒரு கருத்து, எங்களுடைய வேலூரில் அதற்கு முன்னால் லாரி வாடகையோடு சேர்த்து 600 ரூபாய்தான் load. ஆனால் நீங்கள் 1000 ரூபாய் load என்று Fix பண்ணியதாலே ஆற்றோரமாக இருக்கும் எங்களுக்கும் அதே 1000 என்று சொன்னீர்கள் என்றால், நீங்கள் சொன்ன மாதிரி Transportation charge அதிகமாக இருக்கின்ற இடத்திற்குப் பரவாயில்லை ஆனால் ஆற்றோரமாக இருக்கின்ற எங்களுக்கெல்லாம் நீங்கள் load-னுடைய கணக்கு 500 ரூபாய் என்று வைத்தால்தான் அது எங்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய நிலையாக இருக்குமே தவிர.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் இடத்திற்கு இடம் வித்தியாசப்படும். உட்காருங்கள். திரு ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மணல் தட்டுப்பாடு இருக்கிறது என்பதனை இங்கே சொன்னார்கள். அதை நான் மறுக்கின்றேன். உள்ளபடியே கடந்த காலங்களில் இந்த மணல் எடுப்பதில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததை அரசு தீவிரமாகக் கவனத்திலே எடுத்துக்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தவிதத்திலும் மணல் திருட்டுத்தனமாக பல்வேறு முறைகேடுகளின் காரணமாக எடுக்கக்கூடாது என்பதனையும், மணல் அதிக அளவில் ஆற்றுப் படுகையில் எடுக்கப்படுவதினால், அந்த ஆற்றுப் படுகையில் இருக்கின்ற நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து போகின்றது

என்பதனையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தீவிரமாக பரிசீலனை செய்து, ஆற்றுப் படுகையிலிருந்து எடுக்கப்படும் மணல் திருட்டினைத் தடுக்கவேண்டுமென்று அரசே மணலை எடுத்து விற்பனை செய்யும் என்று ஆணையிட்டார்கள். அதன்படி கடந்த ஒரு மாத காலமாக அரசு, ஆற்று மணலை எடுத்து வியாபாரம் செய்து வருகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் மணல் தட்டுப்பாடு இருக்கிறது என்பதனைச் சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். தமிழகம் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு சென்னை மண்டலத்தில் 28 depot-க்கள் இயங்கி வருகின்றன. அந்த 28 depot-களிலும் 4-11-2003 அன்று வரை ஆற்றுப் படுகையிலிருந்து எடுக்கப்பட்ட மொத்த லாரிகள், load-கள் 24,472. விற்பனை செய்யப்பட்ட மணல் load-கள் 22,866. கையிருப்பில் இருக்கின்ற load-கள், அதாவது சென்னைக்கு அருகாமையில், சென்னையினுடைய கட்டடப் பணிகளுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் 1,206 load-கள் இன்னும் அந்தந்த Depot-களில் கையிருப்பில் இருக்கின்றன என்பதனை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதைப்போல மதுரை மண்டலத்திலே 14 depot-க்கள் திறக்கப்பட்டு 2,206 loads கையிருப்பில் இருக்கின்றன. திருச்சி மண்டலத்தில் 24 depot-கள் ஆரம்பிக்கப்பட்டு 307 load-கள் கையிருப்பில் 4-11-2003 அன்றைய நிலவரப்படி இருக்கின்றன. பொள்ளாச்சி மண்டலத்திலும் 10 Depot-கள் ஆரம்பிக்கப்பட்டு 100 load-கள் கையிருப்பில் இருக்கின்றன. அந்த வகையில் எந்தவிதத்திலும் depot-களில் கையிருப்பு இல்லை என்ற நிலை தற்போது இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைபபட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாதிரியான விலையைக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இடத்திற்குத் தகுந்தாற்போல் மணலினுடைய விலையை நாம் நிர்ணயம் செய்ய முடியாது. இருக்கின்ற இடத்தில் 1,000 ரூபாய். அதை நீங்களாக வாகனங்களை எடுத்துக்கொண்டு வந்துகூட பெற்றுச் செல்லலாம். அதற்கு எந்த இடையூறும் இல்லை என்பதை நான் தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மணல் கையிருப்பில்



இருக்கிறது; முன்பு முறைகேடுகள் நடைபெற்றன, அதனால்தான் அரசே ஏற்றுக் கொண்டது என்றார்கள். நோக்கத்தை நான் குறை சொல்லவில்லை. மணல் விலை முன்பு கோயம்புத்தூரில் ஒரு லோடுக்கு 4,500 ரூபாய். இன்றும் அதே 4,500 ரூபாய்க்கு மணல் கிடைக்கிறது. ஆனால் அன்றையதினம் 4-1/2 Unit. நீங்கள் எடுத்துக்கொள்வதற்கு முன்பு 4-1/2 Unit மணல் விலை 4,500 ரூபாய். இன்று நீங்கள் எடுத்துக்கொண்ட பிறகு ஒரு load என்பது 2 Unit. 2 Unit-க்கு அதே 4,500 ரூபாய் கேட்பதன் காரணத்தாலே கட்டடப் பணிகள் முழுமையாக நின்றுவிட்டன. கட்டடப் பணியாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதுதான் உண்மை நிலை. முறுக்குக் கம்பியின் விலையும் ஏறியிருக்கிறது; மணல் விலையும் உயர்ந்திருக்கிறது. எனவே கட்டடப் பணிகள் நின்றிருக்கின்றன. கட்டடத் தொழிலாளர்கள் எல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதை நீங்கள் சரிசெய்து, முன்புபடியே 4-1/2 Unit-ஐ இதே விலைக்குக் கொடுப்பீர்களேயானால் இந்தப் பிரச்சினை இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு Point, (குறுக்கீடு)

• **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அனுமதி பெறாமல், உரிமம பெறாமல் திருட்டு லர்ரிகளில் திருட்டு மணல் எடுத்துச் செல்லப்பட்டதால் 4-1/2 Unit 4,500 ரூபாய்க்குத் தந்தார்கள். (குறுக்கீடு) இல்லை, அதுதான் உண்மை. தற்பொழுது seigniorage fee கட்டியாக வேண்டும். அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய கட்டணத்தைக் கட்ட வேண்டும். 160 ரூபாய் பணத்தைக் கட்டிவிட்டு, 2 Unit-க்கு என்று அவர்கள் கட்டிவிட்டு, ஒரு லோடுக்கு என்று கட்டிவிட்டு 4-1/2 Unit திருடிக் கொண்டு சென்றது கடந்தகாலம். தற்பொழுது அரசுக்கு வருவாய் வருகிறது. 29 கோடி ரூபாய் வந்த இடத்திலே 100 கோடி, 200 கோடி என்று அரசு வருவாயை அதிகரிக்கக்கூடிய அளவிற்கு ஒரு அனுமதியை வாங்கிவிட்டு, பல load திருட்டு மணல் எடுப்பதைத் தடுத்த முறைதான் இந்த முறை. திருட்டு மணல் உங்களுக்கு 4,500 ரூபாய்க்குக் கிடைத்தது. இப்போது அரசாங்கத்திற்குப் பணத்தைக் கட்டிவிட்டு எடுக்கிற காரணததால் அதுதான் முறைப்படி நடக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே 4-1/2 Unit கொண்ட மணல் அளவு 4,500 ரூபாய் என்று சொன்னார்கள். தற்பொழுது Depot-க்களில் 2 Unit ஆயிரம் ரூபாய் என்ற நிலை இருக்கிறது. 2 Unit-ஐ ஒரு லாரியில் ஏற்றும்போது 10 டன் என்ற நிலை வருகிறது. லாரியினுடைய திறன், ஏற்றிச் செல்கிற திறன் அதிக tonnage கொண்ட லாரிகள், வேகனைக்கொண்டு வந்து 4 Unit என்ற அளவிற்குக்கூட depot-க்களில் வாங்கிச் செல்ல எந்தத் தடையும் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் அவர்கள் அதிக tonnage கொண்ட லாரிகளைக் கொண்டு வந்து அதிகமாக, எத்தனை Unit தேவையோ, 2 Unit ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு வாங்கிச் செல்லலாம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். நேரம் இல்லை. நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. இது விவாதம் இல்லை. திரு. ஹேமச்சந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால், 2003-2004 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினை ஒட்டிய வரவுகள் மற்றும் செலவுகள் நிலை குறித்த ஓர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அறிக்கையைப் பார்த்தால் இன்று மத்திய அரசிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதி எந்த அளவிற்கு வரவேண்டுமோ அது படிப்படியாகக் குறைந்து கொண்டு இருக்கிறது என்பதை தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. மேலும் அந்த முறையில் உள்ள trend-ல்தான் விஷயங்கள் போகின்றனவோ என்ற பயமும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்று அதை சரிக்கட்டுவதற்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கிற அணுகுமுறையைப் பொறுத்தவரை எங்களுக்கு சில கருத்துகள் இருக்கின்றன. குறை சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. உதாரணமாக The expenditure commitment included in the first supplementary estimates is Rs.578.36 crores. அதற்கு மேலே என்ன சொல்கிறார்கள் என்றால், இலவச வேட்டி - சேலையை விநியோகம் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்தால்



மேலும் நிதி அதிகமாகும் என்றும் சொல்கிறார்கள். அதே நேரத்தில் general fiscal policy என்னவென்றால், அதாவது இன்றைக்கு அரசுக்கு ஏற்பட்டிருக்கிற deficit, பற்றாக்குறையை, 2007 ஆம் ஆண்டு வருகிற நேரத்தில் அதை சரிக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் இன்றைக்கு அரசு பணியாற்றுகிறது. அப்படிப் பணியாற்றுகிற நேரத்தில் நடுத்தர மக்கள், ஏழை மக்களுடைய வாழ்க்கை பாதிக்கக்கூடிய முறையில் இன்றைக்கு அரசின் நடவடிக்கைகள் செல்கிறதா என்ற ஐயப்பாடும் எங்களுக்கு ஏற்படுகிறது.

முற்பகல் 11-40

இன்று கைத்தறித் தொழில் கடுமையான பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நேரத்தில் இந்த அவையிலேயே நாங்கள் ஒரு வேண்டுகோளை வைத்தோம். ஏற்கெனவே இலவச சேலை வேட்டி இந்த மாநிலத்திலே இருக்கிற ஏழை மக்களுக்குக் கொடுத்து வருகிற பழக்கம் தமிழக அரசால் கடைப்பிடிக்கப்படுகிறது. அது நிறுத்தப்பட்டது சரியல்ல. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்ன பிறகு இன்றைக்கு அரசு அதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறது. அது நல்லது. ஆனால் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், இன்று கைத்தறித் தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு இன்றைக்கு Co-optex-லிருந்து கொடுக்கப்பட வேண்டிய ஏராளமான பணம் இன்றைக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு.......

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Co-optex மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்ற கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் அப்படிப்பட்ட ஒரு நிலை வரக்கூடாது என்ற ஒரு எண்ணத்திலே கடந்த மாதம்கூட சுமார் 22 கோடி ரூபாயை கூட்டுறவுச் சங்கங்களுக்கு Co-optex மூலமாக கொடுத்திருக்கின்றோம். இன்னும் Co-optex மூலமாக கொடுக்க வேண்டிய நிலுவை வெறும் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்தான் இருக்கிறது. அதையும் வெகுவிரைவிலே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 நவம்பர் 7

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏதோ Co-optex-லிருந்து கொடுக்க வேண்டிய பணம் - கொஞ்சம் பணம் - கொடுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார். ஆனால் எனக்கு இருக்கிற தகவல் வேறு. உதாரணமாக எங்களுடைய மாவட்டத்திலே ஒரு கூட்டுறவு நூற்பாலை செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த கூட்டுறவு நூற்பாலைக்கு Co-optex -லிருந்து கிடைக்க வேண்டிய நிதி பூரணமாக கிடைக்கப்படாததன் காரணமாக அந்தக் கூட்டுறவு ஆலையை நடத்த முடியுமா என்ற ஐயப்பாடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த நிதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், அந்த ஆலையை மூடவேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பல கூட்டுறவு நூற்பாலைகள் இப்படிப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன.

இன்று சர்க்கரை ஆலைகளை மூடுவது என்ற நிலைக்கு அரசு வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சீமைச் சாராயத்தை நீங்கள் வியாபாரம் பண்ணுவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்திருக்கிறீர்கள். சீமைச் சாராயம் தயார் பண்ணுகிற மொலாசஸ், கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே இருந்துதான் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீமைச் சாராயம் என்றால் என்ன?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மொலாசசைப் பயன்படுத்தி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், சீமைச் சாராயம் என்று எதைச் சொல்கிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** I.M.F.L. அதாவது Indian Made Foreign Liquor.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Indian Made என்கிறபோது அப்புறம் சீமைச் சாராயம் என்று ஏன் சொல்கிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதை எங்கள் ஊரில் சீமைச் சாராயம் என்று சொல்வார்கள். அந்த வகையிலே சொன்னேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், இந்த மொலாசஸ்-ஐ இன்று பயன்படுத்தி நாம் இந்த Indian Made Foreign Liquor-ஐ தயார் பண்ணுவது என்ற அந்த இடத்திற்கு வந்தால், அந்த சர்க்கரை



2003 நவம்பர் 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

ஆலைகளை function பண்ண வைக்க முடியும். அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மணல் எடுப்பது என்ற திட்டம் அரசினுடைய கையில் வந்திருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலே ஒன்றைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மணல் வாரி, லாரிகளுக்குக் கொடுக்கிற வேலைகளைச் செய்து கொண்டிருக்கிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு அந்த வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆனால் இப்போது P.W.D.-க்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்ததன் காரணமாக, அவர்கள் இயந்திரத்தைப் பயன்படுத்தி ஆற்றிலேயிருந்து மணலை வாரி அதை லாரிகளிலே இயந்திரம் வழியாகக் கொடுப்பதன் காரணமாக ஆற்றிலேயிருந்து கிடைக்கிற மணலை லாரிகளில் கொண்டுவந்து போடுகிற வேலையைச் செய்துகொண்டிருக்கிற ஆயிரக்கணக்கானவர்களுக்கு இப்போது வேலைவாய்ப்பு கிடைக்காமல் போய்விடுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆற்றுப் படுகையிலிருந்து முன்பு அரசின் சார்பாக அனுமதி கொடுக்கின்றபோது மூன்று அடிக்குமேல் ஆற்றுப்படுகையில் ஆழமாக மணல் எடுக்கக்கூடாது என்ற வரையறை இருந்தது. அது மனித சக்தியைக் கொண்டு எடுக்கப்படும்போது மூன்று அடிக்குமேல் எடுப்பது சிரமமான வேலை. ஆகவே இயந்திரங்கள் பயன்படுத்தக் கூடாது என்று அளவுகோல் முன்பு அரசின் சார்பாக சொல்லப்பட்டது. அதனுடைய நோக்கம் தனியார்கள் அளவுக்கு அதிகமான ஆழங்களில் 20 அடி, 30 அடி என்ற அளவுகளில் இயந்திரங்கள் மூலம் எடுத்து விடுவார்கள் என்ற கருத்தின் அடிப்படையில்தான், முன்பு இயந்திரங்கள் கூடாது என்ற நிலை இருந்தது. ஆனால் இன்றைய நிலையில் அரசே ஆற்றுப்படுகையில் மணல் எடுக்கின்றபோது மூன்று அடிக்குமேல் எந்த ஆற்றுப்படுகையிலும் எந்த இடங்களிலும் மணல் எடுக்கப்பட அனுமதிக்கப்படாது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் வேலை பார்த்த மணல் அள்ளுகிற வேலை பார்த்த தொழிலாளர்களுடைய வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அரசு இதை கவனமாக கருத்திலே எடுத்துக்கொண்டு ஆற்றுப்படுகையில் மணல் எடுக்கிறபோது அந்தந்தப் பகுதியில் இருக்கிற ஏற்கெனவே இந்தத் தொழிலில் இருக்கிற தொழிலாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற நிலையை அரசு எடுத்து அந்தப்

பகுதியிலே இருக்கிற தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் தற்சமயம் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-45*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. போளூர் வரதன்:** ஒரு clarification, Speaker Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன், இன்னும் ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏனென்றால் இன்னும் 10 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. நான் எதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் ஆற்றிலேயிருந்து மணல் எடுப்பதற்கு நீங்கள் இயந்திரத்தைத்தான் பயன்படுத்த வேண்டும். அதை அப்படித்தான் எடுக்க முடியும். ஆனால் அதைக் கரையிலே கொணடு வந்ததற்குப் பிறகு லாரிகளிலே ஏற்றுகிற வேலை அந்தத் தொழிலாளிகளுக்கு ஏற்கெனவே இருந்த ஒரு வேலை. அந்த வேலையை இப்போது P.W.D. அவர்களுக்குக் கொடுக்காமல் இயந்திரங்களையே பயன்படுத்தி லாரிகளிலே போட வைக்கிற ஒரு பழக்கம் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று நேரத்திற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள்கூட மிகுந்த சிரமம் இருக்கிறது, பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்கள். டெப்போவிற்கு வந்ததற்குப் பின்னால் இயந்திரம் இல்லாமல் நாம்



மனித சக்தியை வைத்து எடுக்கும்போது காலதாமதம் ஏற்படுகிற ஒரு சூழ்நிலை கடந்த ஒரு மாதமாக நாங்கள் நடைமுறைப்படுத்தும்போது இருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் எடுக்கப்படுகிற கூலியை நிர்ணயம் செய்கிறபோது, அங்கே மிகுந்த விலை, இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிற விலையைக் காட்டிலும் அதிகமான விலை, அந்த மணலினுடைய விலையேற்றம் இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகவே தற்போது உள்ள depot-க்களில் இயந்திரங்கள் மூலம் லாரிகளுக்கு மணல் அள்ளுகிற நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே, அரசினுடைய நிலையையும் பாதுகாத்துக்கொண்டு அதேநேரத்திலே அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்க்கையையும் பாதுகாக்கக்கூடிய முறையிலே இந்த விஷயத்தை சரிக்கட்ட வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டுகிறேன். ஏனென்றால் இந்த அரசு வருவாயை அதிகப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்பது ஏழையெளிய மக்களை பாதிக்கக்கூடிய முறையிலே போகக் கூடாது என்ற எண்ணத்திலேதான் நான் இந்தக் கருத்தை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு முக்கியமான விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது; இந்த வேளாண்மை சம்பந்தமாக இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவரங்களை வைத்துப் பார்த்தால் வேளாண்மைக்கே இப்போது போதுமான அளவுக்கு பாதுகாப்பு கிடைக்கப்படாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. வேளாண்மை சம்பந்தமாக தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது; நான் இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிலே அக்கறை கொண்டு பல ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். ஆனால் வேளாண்மை சம்பந்தமாக இன்று பிரதானமாக வருகிற பிரச்சினை irrigation சம்பந்தமான நீர் அல்லது Water. அந்த Water சம்பந்தமான பிரச்சினையிலே, குளங்களை ஆழப்படுத்துவதிலே அதேபோல நீராதாரத்தைப் பொறுத்த அளவிலே இந்தக் கால்வாய்களைத் தூர் வாரி சரி பண்ணுவது போன்ற

185086. D
சென்னை-600 002
P04
P04-34

விஷயங்களுக்கு நம்முடைய வறட்சி நிவாரண நிதியிலேகூட போதுமான அளவிற்கு நிதியை ஒதுக்க முடியவில்லை என்ற ஒரு உண்மை இருந்து கொண்டிருக்கிறது. அதை......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சிக் காலத்தில் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்ட ஆணையே எந்தப் பணியாக இருந்தாலும் கிராமப்புறத்தை ஒட்டிய பணிகள் ஏரி, குளங்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், மழை நீரின் வரத்துக் கால்வாய்களை எல்லாம் சரி செய்தல், இதன் மூலம் கொள்ளளவை ஏரி, குளங்களில் அதிகப்படுத்தி நிலத்தடி நீரைப் பெருக்குதல், அதோடு சேர்ந்து பண்ணைக் குட்டைகளை ஆங்காங்கே நிரம்ப அமைத்தல், ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் மூலமாக Rural Rain Water Harvesting System என்ற முறையிலே அதைச் செம்மையாக நடைமுறைப்படுத்தி நிலத்தடி நீரை அதிகப்படுத்த வேண்டும், அதன் மூலமாக பூமியில் உள்ள தண்ணீரின் நிலை உயர வேண்டும், வேளாண்மை செழிக்க வேண்டும் என்ற முறையில் பிரத்யேக ஆணைகளை வெளியிட்டு பிரத்யேக நிதிகளை ஒதுக்கி சிறப்புக்கூறுத் திட்டமாக அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

*முற்பகல் 11-50*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை இதற்காகக் கொண்டு வந்தது; நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்தீர்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் என்னுடைய தாழ்மையான கருத்து, போதுமான அளவுக்கு இன்னும் அது எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவுக்குச் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம், மத்திய அரசிடமிருந்து நமக்குப்பெற வேண்டிய நிவாரணத்தைப் பெற முடியவில்லை என்பது ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மத்திய அரசு நமக்கு நிதியை மறுத்துக்கொண்டிருக்கின்ற அந்த நடவடிக்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையிலே தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதியைப் பெறுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும். அதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



அதற்கு எங்களைப் போன்ற கட்சிகள் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, மழைநீர் சேகரிப்பிற்காக ஒரு திட்டத்தை ஆரம்பித்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) பேசி முடித்துவிடுங்கள். இது குறித்து ஏற்கெனவே சட்டமுன்வடிவு வந்து முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இது குறித்து ஏற்கெனவே சொல்லி, அதற்கு பதில் எல்லாம் சொல்லப்பட்டுவிட்டது. உட்காருங்கள். திரு. கோ.சி. மணி. (குறுக்கீடு) இல்லை, திரு. கோ.சி. மணி.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டைப் பற்றி இங்கே பேசுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது இல்லை. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு இது. நேற்றைக்கு உங்களைக் கூப்பிட்டுக்கொண்டு போய்விட்டார்கள். நேற்று பேச வேண்டியது இது.

**திரு. கோ.சி. மணி:** அதையொட்டித்தான் இன்றைக்கு நான் பேசுவதாக முடிவெடுத்துப் பேசுகிறேன். காரணம் நேற்று நாங்கள் முறைப்படி செய்ததை நீங்கள் கொச்சைப்படுத்துவதனால் தயவுசெய்து சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை: அதற்குச் சொல்லவில்லை. இதிலே இரண்டு மூன்று பாயிண்டுகளைத்தான் சொல்லலாம்.

**திரு. கோ.சி. மணி:** பொதுவாக, விவசாயப் பிரச்சினை, மற்ற பிரச்சினைகளைச் சொல்வதற்கு நேற்று நான் வந்தேன். அதனால்தான் இன்றைக்கு நான் அதைக் குறிப்பிடுகிறேன். பொதுவாகவே, நான் நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் நேரடியாக நேற்றையதினம் சொல்வதாக இருந்த கருத்தை இன்றைக்கு முதலமைச்சருக்கு எதிரிலே அதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இலவச மின்சார திட்டத்தைப் பொறுத்தவரையில்**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 நவம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இது குறித்து ஏற்கெனவே நீண்ட விவாதம் நடைபெற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு முறையான விளக்கம் எல்லாம் சொல்லி (குறுக்கீடு) முறையான விளக்கம் சொல்லி இது முடிந்துபோய்விட்டது. (குறுக்கீடு) ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானமாக, சிறப்புக் கவன ஈர்ப்பாக வந்து எல்லாம் பேசப்பட்டுவிட்டது. வேறு கருத்துகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) வேறு கருத்துகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** நான் தஞ்சாவூர் ஜில்லாவிலே இருந்து வந்தவன். அது மிக முக்கியமானது. அதிலே இருக்கின்ற குறைபாடுகளைச் சொன்னால், அவர் செய்யலாம் என்பதால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவில் ஏதாவது சொல்ல வேண்டிய சில கருத்துகளை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** நான் குறிப்பிட விரும்புவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சொல்லவேயில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து வேறு கருத்துகளைப் பேசலாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள். அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. கோ.சி. மணி அவர்கள், இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவில் வேறு கருத்துகள் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். இது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்து, நீண்ட நேரம் முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய விளக்கங்களையெல்லாம் சொல்லி முடிந்துவிட்டது. மறுபடியும் அதே பிரச்சினையைக் கிளறாதீர்கள். வேறு ஏதாவது கருத்துகள் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே ஒரு சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 நவம்பர் 7]

**திரு. கோ.சி. மணி:** பாரபட்சமாக நடப்பதற்கு இதைவிட வேறு சான்றே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரபட்சமில்லை. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். வாருங்கள், இரண்டு பேரும் பேசுவோம். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். அந்த மணி வேண்டாம் என்று சொல்லிவிட்டார், இந்த மணியாவது பேசுங்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 11-55*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்போது தமிழக அரசு தொடர்ந்து ஏழையெளிய மக்களுக்காக இலவச வேட்டி சேலை வழங்க இருக்கிறது; அதற்காக 120 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே வழங்கப்பட்டு வந்த இலவச வேட்டி சேலை நிறுத்தப்பட்டதை மீண்டும் வழங்கக் கோரி...

(திரு. கோ.சி. மணி அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணன் கோ.சி. மணி அவர்கள் ஒத்தையாளாக வெளிநடப்புச் செய்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை நிறுத்திய உடனே சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகள் எல்லாம் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று சொல்லி அப்போது வற்புறுத்தினோம். வழங்காமல் மறுத்து, இப்போது மீண்டும் தமிழக அரசு அறிவித்திருப்பது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், கடந்த காலங்களிலே எவ்வளவு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதோ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஏதோ நாங்கள் தானாகவே இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டதைப் போலவும், அவர்கள் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதைப் போலவும் கூறினார்கள். அப்படியல்ல. மாநில அரசுக்கு நிதி தருகிற மைய அரசு, நீங்களும், தி.மு.க.வும் கூட்டாளியாக இருக்கிற அந்த

மைய அரசு fiscal reforms என்று சொல்லக்கூடிய (குறுக்கீடு) நான் பேசுகிற கருத்தைப் பேசுவதற்கு உரிமை இல்லையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எதற்கெடுத்தாலும் கலாட்டா என்பதுதான் உங்களுடைய பொருளா? (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் மைய அரசிலே ஆட்சி புரியவில்லையா? அர்த்தம் இல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார். அதில் ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** டெல்லியிலே உட்கார்ந்து கொண்டு ஒன்றைச் செய்வது, தமிழ்நாட்டிலே இருந்து கொண்டு இன்னொன்றைப் பேசுவது; இதைச் சொன்னால் ஆத்திரம் வருகிறது. காரணம் என்ன? உங்களுக்கு, ஒரே யுக்தி, ஒரே கொள்கையோடு இருக்க வேண்டும். டெல்லியிலே ஒரு கொள்கை, தமிழ்நாட்டிலே ஒரு கொள்கை. இதுதான் உங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடிக்கிறேன். அதாவது ** அடுத்தடுத்து ** பேசுவது நாங்கள் அல்ல. (கூச்சல், குழப்பம்). எதற்காக** என்று, நீங்களே ஏன் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ** என்ற வார்த்தையை முதலில் யார் சொன்னது? பேராசிரியர் அவர்களே, ** என்ற வார்த்தையை அவர் சொன்னார். அவர் முதலிலே சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



சொல்கிறேன். இதற்கு இவ்வளவு ஆத்திரப்பட வேண்டியது இல்லை ஒரு கருத்தைச் சொன்னார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ** என்ற வார்த்தை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள், சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ** என்ற வார்த்தையை முதலிலே பன்னீர்செல்வம் சொன்னார். ** என்ற வார்த்தையை முதன்முதலில் பன்னீர்செல்வம் சொன்னார். பன்னீர்செல்வம் ** என்று சொல்ல முடியும். இல்லாததை அவர் ** என்ற வார்த்தையைச் சொன்னார். பதிலை வாங்கிக் கொள்ளக் கூடிய திராணி, சக்தி இருந்தால், நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். உங்களுக்கு திராணி இல்லை, தெம்பு இல்லை. தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி இல்லை. எதற்காக ** என்ற வார்த்தையை நீங்கள் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், பேராசிரியர் பேசட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்கிறபோது மத்திய ஆட்சியிலே நீங்கள் கூட்டிலே இல்லையா? மத்திய ஆட்சி மாநில ஆட்சிக்கு தாக்கீது தரவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லட்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் யார் பேசுவதாக இருந்தாலும், யாரைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் ** என்றோ, ** என்றோ சொல்லக்கூடாது என்பது அவை மரபு. வேறு யாராவது இந்தப் பக்கத்திலே சொன்னதாக மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் சொன்னால், அவர் சொன்னதை நிறுத்த வேண்டுமே தவிர அவர் திரும்ப இந்த அவையில் ** என்று சொல்கிற வார்த்தை முழு அளவுக்கு இந்த அவையினுடைய குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கிற வார்த்தை நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் அங்கே நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். திமுக. அங்கம வகிக்கிறது. (கூச்சல், குழப்பம்) என் கருத்தைச் சொல்லாமல் இருக்க முடியுமா? எப்படி அதைத் தடுக்க முடியம்? எப்படி அதைத் தடுக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் மைய அரசிலே அங்கம் வகிக்கவில்லையா? மைய அரசிலே உங்களுக்குப் பொறுப்பு இல்லையா? சொல்ல வருகிற வார்த்தையை, சொல்லி முடிக்க விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பிறகு பேசச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்வதாகச் சொல்கிற சொல், உங்கள் நெஞ்சில் குற்றம், அச்சம் இருக்கிற காரணத்தால், வருமுன்னேயே தடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஜிகே. மணி அவர்கள் தெரிவித்த ஒரு கருத்துக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல எழுந்தார். தொடர்ந்து அவரைப் பேச விடாமல் திமுக. உறுப்பினர்கள் இப்படி இடையூறு செய்வது நல்லதல்ல; முறையல்ல. ஆகவே அமைச்சருக்கு பதில் சொல்ல உரிமை இருக்கிறது. அவரை பதில் சொல்ல அனுமதிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** சிறிய விளக்கம். தயவு பண்ணி மாண்புமிகு அமைச்சர் அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசாங்கத்திலே, கூட்டணியிலே இடம் பெற்று, அதன் காரணமாக இந்தக் கொள்கை இருக்கிறது என்று கேட்டால் எங்களுக்கு, அதிலே மாறுபாடு இல்லை. கூட்டணி என்று சொல்லவில்லை. அவர் என்ன சொல்கிறார், கூட்டாளியாக இருந்து என்று சொல்கிறார். தயவுசெய்து (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, இரு சொல்லுக்கும் இடையிலே–

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள், கூட்டணி என்றாலே கூட்டாளி என்றுதான் அர்த்தம்.



**பேராசிரியர் க. அன்பழகன்:** தயவுசெய்து, பேரவைத் தலைவர் அவர்களே,–

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டணியில் இருப்பவர்கள் கூட்டாளிதான். வேறு என்ன பங்காளியா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** நான் இந்தக் கூட்டாளி என்ற வார்த்தையை மறுக்கிறேன். என்ன காரணத்திற்காக என்றால், கூட்டாளி என்பது, எந்தவிதமான நோக்கத்திலேயும் சேருவது கூட்டாளி; கூட்டணி என்பது ஒரு கொள்கை அடிப்படையிலே சேருவது; அந்தக் கொள்கை அடிப்படையிலே கூட்டணி. (குறுக்கீடுகள்) கூட்டணி என்று சொல்லி நீங்கள் கண்டிப்பதிலே எனக்கு மாறுபாடு இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மணிக்கு நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு தமிழக அரசுக்கு ஒதுக்க வேண்டிய நிதியை படிப்படியாகக் குறைத்துவிட்டது. இதை நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். நாங்கள், மைய அரசைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய நிதிப் பிரச்சினைகளை எல்லாம் சரிக்கட்டுவதற்கு 3,000 கோடி ரூபாய், ஒரு grant என்ற முறையிலே வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதையும் நீங்கள் அறிவீர்கள் ஆனால் மைய அரசு எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது? மாநிலத்திற்குச் சுயாட்சி வேண்டும் என்று கேட்கின்ற கொள்கை உடைய திராவிட முன்னேற்றக் கழகம் மைய அமைச்சினுடைய ஆட்சியிலே பங்குற்றிருக்கிறது. ஆனால் மைய அரசைப் பொறுத்தவரைக்கும் அந்த devolution of fund என்ற முறையிலே மைய அரசு மாநில அரசுக்கு ஒதுக்கித் தருகின்ற நிதியிலே அவர்கள் நமக்கு ஓரவஞ்சனை காட்டி, கிட்டத்தட்ட இந்த ஐந்து ஆண்டு காலத்திற்கும் 2,946 கோடி ரூபாயை, வளர்ந்து விட்ட மாநிலம் தமிழகம் என்ற காரணங்களைச் சொல்லி நமக்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இதை எதிர்த்திருக்கிறோம். முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தி, தமிழகம் வளர்ந்துவிட்ட மாநிலம் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, நிதியினைக் குறைப்பது தவறு என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இங்கு people living below poverty line 30, 35 சதவீதம் என்ற நிலையிலே

இருக்கின்றபோது, வறட்சி மிகுந்த மாநிலமாக தமிழகம் இருக்கிறபோது, முறைப்படி, சட்டப்படி கிடைக்கவேண்டிய காவிரித் தண்ணீரை கர்நாடகம் தராமல் வஞ்சித்துவிட்ட நிலையில் தமிழகத்திற்கு முறைப்படி ஒதுக்க ஒத்துக்கொண்ட பணத்தைக் குறைப்பது முறை இல்லை என்று முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இங்குதான் சொல்கிறேன். 2,946 கோடி ரூபாயை, அவர்கள் தரவேண்டிய பணத்தை இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இந்த நிலையில்தான் மையத்திலே பங்கேற்று இருக்கின்ற நீங்களும், திமுக-வும் மாநிலத்திற்கு உள்ள பண அதிகாரத்தைப் பறிக்கின்ற மைய அரசினுடைய போக்கை நீங்கள் கண்டிக்கத் தவறிவிட்டீர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். இதிலே முக்கியமான ஒன்று என்ன என்றால் (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன், துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உட்காருங்கள், நிதியமைச்சர் நிற்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதற்காகத்தான், சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு Point இருக்கிறது. இதை conclude பண்ணிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேச்சை முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திற்குச் சேரவேண்டிய தொகையை மத்திய அரசு தராமல் இருக்குமானால், எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் அதை நாம் ஒற்றுமையாகத் தட்டிக் கேட்பதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்தச் செயலை மத்திய அரசு செய்தது என்று சொல்ல முடியாது. நாங்களே ஆளும் கட்சியாக இருந்தபோது நாங்களும் அதைக்



கண்டித்தோம். முதலமைச்சரும் அப்போது கண்டித்திருக்கிறார்கள். நீங்கள் இப்போது இருக்கிறீர்களே என்று கேட்கிறீர்கள். கேட்க வேண்டியது நமது கடமைதான். எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் இன்னின்ன வகையிலே, இப்படியெல்லாம் நம்மை வஞ்சிக்கிறது என்று சொல்லி, தமிழகத்தின் சார்பிலே அங்கே அமைச்சர் அவர்களிடத்திலே கொண்டு போய் ஒரு மகஜரைக் கொடுததிருக்கலாம. அவர்கள் கொடுக்காவிட்டாலும் எனனையாவது கூப்பிட்டிருந்தால், நான் கொண்டுபோய் நிதியமைச்சரை அறிமுகப்படுத்தி, மத்திய அரசிடம் கொடுத்திருக்கலாம் அதை விட்டுவிட்டு குற்றம் சொல்வதற்கு,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார். மைய அரசிடம், முதலமைச்சர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு நிதியமைச்சர்கள் மாநாட்டிலும் நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம்; எழுத்து மூலமாகத் தந்திருக்கிறோம். அப்படி இருக்கின்றபோதுகூட, கிட்டத்தட்ட இன்னொரு 1800 கோடி ரூபாயை இந்த ஈராண்டு காலமாக, இதுவல்லாமல் வேறு குறைத்துவிட்டார்கள். இதை நான் சொல்வதற்கு முக்கியக் காரணம், அப்படி இருந்தபோதிலும்கூட அவர்கள் discretionary allocation என்ற முறையிலே, விருப்ப ஒதுக்கீடாக 878 கோடி ரூபாய் West Bengal-க்குத் தந்திருக்கிறார்கள்; Communist State அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். அசாமுக்கு 750 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். 672 கோடி ரூபாயை ஒரிசாவுக்குத் தந்திருக்கிறார்கள், 463 கோடி ரூபாயை ராஜஸ்தானுக்குத் தந்திருக்கிறார்கள், 371 கோடி ரூபாயை அவர்கள் மணிப்பூருக்குத் தந்திருக்கிறார்கள். இதையும் நாங்கள் சுட்டிக்காட்டி ஏன் தமிழகத்திற்கு ஓரவஞ்சனை செய்கிறீர்கள் என்று கண்டித்திருக்கிறோம். அப்படி அவர்கள் நிதியை எல்லாம் தராமல் எங்களுக்குத் தடுத்துவிட்ட நிலையில்தான் இலவச வேட்டி சேலை திட்டம் நிறுத்தப்பட்டது. நிதி ஆதாரம் ஓரளவுக்கு சீராகின்றபோது — மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நிதி ஆதாரம் ஓரளவுக்கு சீராகின்றபோது — அரசு ஊழியர்கள் பிரச்சினையைக்கூட பரிவோடு அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் ஓரளவுக்கு நிதி ஆதாரம் சீரான நிலையிலே ஏழை எளிய மக்களுக்கு ஏற்கெனவே கொண்டுவந்த திட்டமான இந்த இலவச வேட்டி சேலை திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

*பிறபகல் 12-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது மத்திய அரசின்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே தொடர்ந்து நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எந்தப பிரச்சினையைப் பேசினாலும்கூட சுற்றிவளைத்து மத்திய அரசை குறை சொல்லுகின்ற வகையிலே இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைப் பட்டவர்த்தனமாக நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இதற்கு மட்டும் ஒன்று. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொல்வது correct. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டினேன். அஸ்ஸாம் மாநிலமாக இருக்கட்டும், ஒரிசாவாக இருக்கட்டும், ராஜஸ்தானாக இருக்கட்டும், மணிப்பூராக இருக்கட்டும், அவர்களுக்கு மைய அரசு நிதி கொடுக்காத நிலையில், அல்லது பிரத்தியேக group ஒதுக்கீடு பெறுகின்ற நிலையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து அந்த மாநில முன்னேற்றத்திற்குப் பணம் வேண்டுமென்று மைய அரசோடு வாதாடுகிறார்கள். ஆனால் இங்கே துரதிருஷ்டவசமாக மைய அரசில் நீங்கள் பங்குதாரர்களாக இருந்தபோதிலும்கூட நியாயமாக ஆளும் கட்சி, நாங்கள் கேட்கின்ற கோரிக்கைகளை நீங்கள் செவிமடுக்கவில்லை. மாறாக எதிர்த்துக் கூறுகிறீர்கள்; நாங்கள் குறை சொல்லுகிறோம் என்று கூறுகிறீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக மக்களின் வாககுகளைப்பெறறு டெல்லியிலே அமைச்சர்களாக இருக்கின்ற உங்கள் அமைச்சர்களுடைய தலையாய கடமை; அந்தக் கடமையிலிருந்து நீங்கள் தவறுகிறீர்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் கூடுதலாக நிதியை ஒதுக்குகிறது என்று நிதியமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஓரவஞ்சனை செய்கிறது என்று சொல்கிறார். மத்திய அரசாங்கத்திலே கூட்டணியிலே இருக்கக்கூடிய கட்சிகள் இங்கே ஒத்துழைக்கவில்லை என்று சொல்கிறார். நான் கேட்கிறேன். மத்திய



அரசாங்கம் தமிழகத்திற்கு ஓரவஞ்சனை செய்கிறது, நீங்கள் எல்லாம் தட்டிக் கேட்க வேண்டும், எங்களுக்கு ஆதரவு கொடுங்கள் என்று சொல்லி தமிழக அரசு எப்போது எதிர்க்கட்சிகளைக் கேட்டது? ஓர் அணியிலே சேர்த்ததா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினைக்காக கடந்த ஆண்டு அனைத்துக் கட்சித் தலைவர்களையும், அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவையும் நாங்கள் டெல்லிக்கு அழைத்துச் சென்று பிரதமரைச் சந்தித்தோம். அபபோது தி.மு.க. அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள டெல்லியில் இருந்தும் அந்தக் கூட்டத்திற்கு வரவில்லை, பிரதமரைச் சந்திக்க வரவில்லை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூட எவ்வளவு அழைத்தும்கூட வரவில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 1989-லே அப்படித்தான் வி.பி. சிங் அவர்களிடம் Tribunal வேண்டுமென்று கேட்பதற்காக இங்கே அ.தி.மு.க.விலே அன்றைக்கு இருந்த, எஸ்.ஆர். ராதா, எதிர்க்கட்சித் தலைவர், அவரை எல்லாம் அழைத்து அவர்களுக்கும் சேர்த்து ticket வாங்கிக்கொண்டுபோய் நாங்கள் டெல்லியில் இறங்குகிறபோது, வருகிறோம் என்று சொல்லிவிட்டு வராமலேயே இருந்துவிட்டார்கள், அன்றைக்கு அ.தி.மு.க. சார்பில் இருந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், எம்.பி.க்களும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட காவிரிப் பிரச்சினையைச் சொன்னார்கள். தஞ்சையில் நடந்த அரசாங்க விழாவிலேகூட எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் இப்போது வெளிப்படையாகவே சொல்கிறேன், காவிரி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அல்லது மாநிலத்தினுடைய உரிமைகளைப் பெறுகின்ற பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, மத்திய அரசாங்கத்திலே கூட்டணியிலே இருக்கக்கூடிய கட்சிகள், மற்ற எல்லாக் கட்சிகளும் மாநில உரிமைகளைப் பெறுவதிலே உறுதியாக இருக்கின்றன. ஆனால் ஆளுகின்ற தமிழக அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானது எதிர்க்கட்சிகளைப் புறக்கணிக்கிறது, தமிழகத்திலே ஒற்றுமையை உருவாக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். (குறுக்கீடு)

நான் சொல்லிவிடுகிறேன். சொல்லி முடித்துவிடுகிறேன். தயவுசெய்து. ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே காங்கிரஸ் ஆட்சி செய்கிறது. அங்கே உச்சநீதிமன்ற உத்தரவை மீறுகிறது; மனித நேயததை மறுக்கிறது; தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் விடமுடியாது எனறு அடம் பிடிக்கிறது. ஆனால் அப்படி அடம் பிடிப்பவர்கள், மறுக்கக்கூடியவர்கள் அங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளை எல்லாம ஒன்றாக எத்தனை முறை கூட்டினாார்கள்? அந்த முதலமைச்சர் பிரதமரை எத்தனை முறை சந்தித்தார்கள்? அவர்கள், மறுக்கக்கூடியவர்களே சந்திக்கிறார்கள் என்று சொன்னால் இங்கே உரிமையைக் கேட்கக்கூடிய முதலமைச்சர், நம்முடைய தமிழக அரசாங்கம் எதிர்க்கட்சிகளை—நாட்டு மக்கள் மத்தியிலே ஒற்றுமையை உருவாக்கி—எத்தனை முறை சந்தித்திருக்க வேண்டும். அந்த முயற்சியை மேற்கொள்ளவில்லையே? பிரதமர் சென்னைக்கு வருகிறார், முதலமைச்சர் இல்லை. பிரதமர் வருகின்ற நேரத்திலே அவரை முதலமைச்சர் வரவேற்கவில்லை என்று சொன்னால் அவருடைய மனநிலை எப்படி இருக்கும்? எப்படி தமிழக அரசுக்கு உதவி செய்யக்கூடிய மனம்பான்மை வரும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, நான் பேசி முடித்துவிடுகிறேன். One minute; One minute..

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமுறை பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது நான் இல்லை. அவ்வளவுதான். பலமுறை அவரை வரவேற்று இருக்கிறேன். பலமுறை காவிரிப் பிரச்சினைக்காக டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து இருக்கிறேன்; பேசி இருக்கிறேன். பலமுறை இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் கூட்டியிருக்கிறேன். ஆகவே செய்யவேண்டியதை செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால் கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் மாநிலத்தின் ஜீவாதாரப் பிரச்சினை என்று வருகின்றபோது, கர்நாடகத்தில் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒன்று சேருகிறார்கள். ஆனால் இங்கே ஆளும் கட்சியையும், முதலமைச்சரையும் குறை சொல்ல எதிர்க்கட்சிகளுக்கு நேரமே போதவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பொறுப்புள்ளவர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, தாங்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. பொதுக் கூட்டங்களிலே பேசுவது, வெளியிலே பேசுவது எல்லாவற்றையும் கொண்டுவரக்கூடாது. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின்மீது ஏதாவது சொல்லவேண்டிய சில கருத்துகளைச் சொல்லி அதோடு முடியுங்கள். இன்னும் 10 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நிறைவேற்றியாகவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் கேட்க விரும்புவது இலவச வேட்டி-சேலை வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். இது தொடர்ந்து வழங்கப்படுமா? அதே நேரத்திலே கடந்த காலங்களிலே எவ்வளவு குடும்பங்களுக்கு, ஏறக்குறைய ஒன்றரைக் கோடி குடும்பங்களுக்கு-

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரேயொரு ஆண்டுதான் இலவச வேட்டி சேலைகள் வழங்கப்படவில்லை. இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2001 பொங்கலின்போது அப்போது ஆட்சியிலே இருந்தது திமுக. அரசு. திமுக. அரசு அன்றையதினம் இலவச வேட்டி சேலைகளை வழங்கிவிட்டு, அதற்கு Co-optex-க்குக் கொடுக்கவேண்டிய பணத்தையே கொடுக்கவில்லை. அந்தச் சுமையும் எங்கள்மீது விழுந்தது. நாங்கள் 2001 மே மாதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். அப்போது நிதிநிலைமை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். இங்கே கஜானா காலி. திவால் ஆகும் நிலைமை. மத்திய அரசிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிதி வரவில்லை. அதனால் 2002 பொங்கலுக்கு மட்டும்தான் கொடுக்க முடியவில்லை. 2003 பொங்கலுக்கும் நாங்கள் கொடுக்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகள்தான் கொடுக்க முடியவில்லை. சற்று நிதிநிலைமையை ஓரளவிற்கு நாம் சரிசெய்த பிறகு உடனடியாக நாங்களாகவே முன்வந்து மீண்டும் 2004 பொங்கலுக்கு இந்த இலவச வேட்டி சேலைகள் மீண்டும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கொடுக்காதபோது ஏன் கொடுக்கவில்லை என்று திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள். கொடுக்க முன்வரும்போது ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள். மீண்டும் நிறுத்திவிடுவீர்களா என்று கேட்கிறீர்கள். நிச்சயமாக நிறுத்தமாட்டோம். கொடுப்போம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை நான் ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்கவில்லை. இதைத் தொடர்ந்து வழங்குவீர்களா என்று கேட்கிறேன். அதே நேரத்திலே, கடந்த காலங்களிலே எவ்வளவு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதோ...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இலவசமாக வேட்டி சேலைகள் எந்தத் தரத்தில் கொடுக்கப்பட்டன என்பதை நாடே நன்றாக அறியும். ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் polyester சேலைகளும் polyester வேட்டிகளும் கொடுப்பதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்தக் கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** தரமான வேட்டி சேலைகள் வழங்கினால் வரவேற்கக்கூடியதுதான். அதில் மாறுபாடு இல்லை. அதே நேரத்திலே கடந்த காலங்களிலே வழங்கப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடிய 1½ கோடி குடும்பங்களுக்கு அதே அளவு வழங்கப்படுமா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

• **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அதிகபட்சமாக 77 இலட்சம் சேலைகளும், 70 இலட்சம் வேட்டிகளும் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றையதினம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினாலே அனைத்து ஏழை மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலே 81 இலட்சம் சேலைகளும், 71 இலட்சம் வேட்டிகளும் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரக்கூடிய கும்பகோணம் மகாமக விழா. அந்த மகாமக விழாவிற்காக அரசாங்கம் சுகாதாரப் பணிகளுக்காக, புற வழிச்சாலை அமைப்பதற்காக 25 கோடி ரூபாய் நிதி... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதெல்லாம் சட்டமுன்வடிவிலே வரக்கூடியவை அல்ல.



**திரு. ஜி.கே. மணி:** இது நிதியொதுக்கம் தானே? அவர் சொன்னதைத்தான் சொல்கிறேன். எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள். முக்கியமானதை மட்டும் சொல்லி முடியுங்கள். இவையெல்லாம் சட்டமுன்வடிவுகள். விவாதங்கள் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** சுகாதாரப் பணிகளுக்காகவும், புறச்சாலை அமைப்பதற்காகவும் 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வழிபாட்டு முறையை, வழிபாடடுத் தலங்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரக்கூடிய அந்த விழாத் தலத்திற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்குவது என்று சொன்னால், தமிழ்நாட்டிலே இன்று தமிழ்க் கடவுள் என்று சொல்லக்கூடிய திருமுருகப்பெருமானுடைய அறுபடை வீடுகள் இருக்கின்றன. அந்த ஆலயங்களுக்கும், அதுபோன்று பிரசித்தி பெற்ற ஆலயங்கள் தஞ்சை பெரிய கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவண்ணாமலை கோயில் போன்ற ஆலயங்களுக்கு இப்படி ஆண்டுதோறும் கூடுதலாக நிதி ஒதுக்கப்படுமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே......

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றால் அது கோயிலுக்காக அல்ல. மகாமகம் திருவிழாவுக்காக இந்தியா முழுவதிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்கதர்கள் வருகிறார்கள். அந்த மக்களுக்குத் தேவையான infrastructure வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகத்தான் அரசு இந்தச் செலவை ஏற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** ஒரு வேண்டுகோள். தொகுதி எம்.எல்.ஏ. என்பதாலே ஒரு வேண்டுகோள் வைக்கிறேன்; வேறு ஒன்றும் இல்லை. சுற்றுப்புறச் சாலைகளை மட்டும் நீங்கள் செப்பனிடுவதற்காகவும், உள்ளூரில் இருக்கிற சாலைகளைச் செப்பனிடுவதற்காகவும் இந்தத் தொகையை ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் மகாமகம் திருவிழா என்பது நாகை, சீர்காழியிலிருந்தே தொடங்கப்பட்டு லாரிகள், பஸ்கள்,

வேன்கள் எல்லாமே அங்கங்கே நிறுத்தப்படுகிற சூழ்நிலை எல்லாம் ஏற்படும், ஆகையினாலே தயவுசெய்து ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலிருக்கிற அனைத்துச் சாலைகளையும் சீர் செய்து, புதிய சாலைகள் சிலவற்றைக்கூட போட கோரிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணத்தை நோக்கி வருகின்ற அத்தனை சாலைகளும், அதாவது முக்கிய சாலைகளிலிருந்து பிரிந்து கும்பகோணத்தை நோக்கி வருகின்ற அத்தனை சாலைகளும் தனிப் பழுதுபார்ப்பில் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஒரு மணித் துளியிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். அதைப்போலவே திருவண்ணாமலையிலே மாதந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அங்கே அடிப்படை வசதிகள் இல்லை. ஆகவே அதைப்போல மற்ற தலங்களுக்கும் இது விரிவாக்கம் செய்யப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும்கூட சொல்கிறேன்.**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி அவர்கள் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) சும்மா, கண்டதை எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) பேசக்கூடாது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆலயங்கள் இருக்கின்ற நகரங்களுக்கும் இந்தப் பணிகள் விரிவுபடுத்தப்படுமா என்று கேட்கின்றார்கள். குறிப்பாக 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகின்ற இந்த கும்பகோணம் மகாமகம் திருவிழாவையொட்டி கும்பகோணத்தில் இருக்கிற, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக் கூறியதுபோல, மக்களின் வசதிக்காக பல உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தர இருக்கின்றோம். அதைப்போலவே மற்ற நகரங்களில் இருக்கின்ற திருக்கோயில்களில் திருப்பணி நடக்கின்ற நேரத்தில், சம்பந்தப்பட்ட ஊர்களிலும் இந்த மாதிரியான உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்கள் நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. திரு. சிவபுண்ணியம். திரு. சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு எதுவும் இல்லை, உங்கள நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, வேறு சட்டமுன்வடிவு வரும்போது பேசுங்கள். வேறு சட்டமுன்வடிவு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம் பேசுங்கள், இல்லாவிட்டால் அடுத்தவருக்கு வாய்ப்பு போய்விடும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கிடு) இந்தச் சட்டமுன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் பேசுங்கள். (குறுக்கீடு) மணி, அனுமதியில்லாமல் பேசக்கூடாது. உங்கள் நேரம் முடிந்தது, உட்காருங்கள். இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

ஏற்கெனவே போதுமான நேரம் வழங்கப்பட்டது. சட்டமுன்வடிவிலே அவ்வளவு நேரம் யாருக்கும் வழங்கப்படுவதில்லை. நீங்கள் சொல்ல வேண்டியவைகள் எல்லாற்றையும் சொல்லிமுடித்துவிட்டீர்கள். திரு. சிவபுண்ணியம் பேசுங்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) சரி, மணி ஒரு மணித் துளியிலே முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிபாட்டு உரிமையைப் பறிக்கக்கூடாது, விமர்சிக்கக்கூடாது என்ற வகையிலே பல்வேறு திட்டங்களைச் செய்வதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட--ஒட்டுமொத்த மிகப் பெரும்பான்மை மக்களின் வழிபாட்டு உரிமையைப் பறிக்கக்கூடிய வகையிலே ஆடு, கோழி பலியிடக்கூடாது என்று சொல்கிறீர்களே, இது எந்த வகையிலே நியாயம்? இது மக்களுடைய உரிமையைப் பறிப்பதாக இல்லையா? சட்டம் என்பது மக்களுக்காகத் தானே தவிர,—

*பிற்பகல் 12—20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மிருகங்களை பலியிடக்கூடாது என்ற சட்டம் 1950 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. எங்கள் அரசு கொண்டு வந்த சட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1950 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம், இதுவரையிலே நடைமுறைபடுத்தப்படவில்லை. எந்த மாநிலத்திலும் இல்லை. இது மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கக்கூடிய வகையிலே மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கக்கூடிய வகையிலே இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்பொழுது திடீரென்று நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? என்ன தேவை ஏற்பட்டது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி முடியுங்கள். சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே அந்த வகையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துக்கொள்கிறேன். அதே வகையிலே இந்த மணல் பிரச்சினையிலே இன்னொன்று கூடச் சொன்னார்கள். இங்கே நான் ஆழமாகப் போக விரும்பவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டுவிட்டது. சிவபுண்ணியம் (குறுக்கீடு) சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே சில செய்திகளை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும் காலம் கருதி ஒருசில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். வேளாண்மைப் பாசனம் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காவிரி டெல்டா பாசனப் பகுதியில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு ஓரளவு சாகுபடிப் பணிகள் தொடங்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. விதைப்பும் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே மேட்டூர் அணையிலே தண்ணீர் மிக வேகமாகக் குறைந்து வருகிறது. பருவ மழையும் நமக்குப் போதுமான அளவு கிடைக்காத சூழ்நிலையில் அந்த சாகுபடிப் பணிகள் நடைபெறுமா என்ற அச்சமும் சந்தேகமும் எழுந்து கொண்டிருக்கிறது.

இங்கே காவிரி நீர் பற்றிப் பேசப்படுகிறது. அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. குறிப்பாக காவிரி நீர் கிடைக்கவில்லை என்று சொன்னால், காவிரி டெல்டா பாசன விவசாயிகளுடைய நிலை மிகப் பெரிய பரிதாபத்திற்குரியதாக மாறி விடுகிற அபாயம் இருக்கிறது. இதே நிலையிலே மேட்டூர் அணையினுடைய தண்ணீர் திறக்கப்படுமேயானால், இன்னும் 1 மாத காலத்திற்குள்ளாக அந்தத் தண்ணீர் முடிந்து போய் விடும், தீர்ந்து போய் விடும். அடுத்து இந்த பாசனப் பகுதியிலே பயிர் செய்யப்படுகிற பயிர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியைப் பற்றி இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதுதான் அங்கே இருக்கிற விவசாயிகளுடைய எதிர்பார்ப்பு. இங்கே மத்திய, மாநில அரசுகளுடைய கருத்துகள் சொல்லப்பட்டாலும் நமது மாநில அரசுதான் இதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து, தீவிரமான நடவடிக்கையின் மூலமாக தண்ணீரைப் பெறுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். இதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா என்ற கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன். இடையிலே கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, பதில் வந்திருக்கிறது என்று சொன்னாலும், அந்த நடவடிக்கை என்பது செய்யப்பட்டிருக்கிற விவசாயத்தைப் பாதுகாப்பதற்குரிய போதுமான நடவடிக்கையாக இல்லை அது. அது போதுமானதாக இருக்காது.

ஆகவே இடையிலேயே தண்ணீரைப் பெறுவதற்கான முயற்சியை நம்முடைய தமிழ்நாடு அரசு எடுக்குமா? இல்லையா? இல்லையென்றால், அந்த விவசாயத்தினுடைய நிலைமை என்ன ஆவது என்பதுதான் இப்போது காவிரி டெல்டா பகுதியிலே இருக்கிற பிரச்சினையாக இருக்கிறது. இதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு விரைவான நடவடிக்கையின் மூலமாக நமக்கு இடைக்காலமாகக் கிடைக்கவேண்டிய நீரைப்பெறுவதற்கும் உரிய தீர்வு காணுவதற்குரிய முயற்சியை எடுப்பார்களா என இந்த அவையிலே அறிய விரும்புகிறேன். இதன் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறபோதுதான் அந்தப் பகுதி விவசாயம் பாதுகாக்கப்படும். இல்லையென்று சொன்னால், சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு என்ன நிலை ஏற்பட்டதோ அதே நிலை தொடர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும். வேறு சில செய்திகளைச் சொன்னால் அது இங்கு பிரச்சினையாக மாறிவிடுகிறது. ஆகவே பாதிப்பு வாராத நிலையைப் பாதுகாக்கவேண்டுமேயானால், விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். காவிரி டெல்டா பாசனப் பகுதியை இப்போது இருக்கிற நிலையில் அது எப்படிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சியாக நம்முடைய தமிழ்நாடு அரசு ஓர் உயர் மட்டக் குழுவை அங்கே அனுப்ப வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அது தலைமைச் செயலாளர் தலைமையிலேயோ அல்லது அமைச்சர்கள் தலைமையிலேயோ அல்லது முடிந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட நேரிலே வந்து பார்த்து அதற்குரிய தீர்வு கண்டாலொழிய அந்தப் பாசனப் பகுதியைப் பாதுகாக்க முடியாது; இக்கட்டான நிலைமைக்கு ஆளாகிறது. ஆகவே உடனடியாக தண்ணீரைப் பெறுவதற்கான முயற்சி, கர்நாடக அரசை நிர்பந்தப்படுத்துவதற்கான முயற்சி என்ன வகையிலே எடுக்கலாம் என்பதைப் பற்றி நம்முடைய தமிழ்நாடு அரசு இப்பொழுதே அறிவிக்குமா; அதற்கான முயற்சியை எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன். அதன் மீது முதலமைச்சருடைய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இங்கே சொன்னார்கள். அது அ.தி.மு.க்.வா, தி.மு.க. வா என்று இங்கே போட்டி போடுகிறபோது, யார் போவது, யார் வருவது என்ற





பிரச்சினை பற்றி இங்கே சொன்னார்கள். நாங்கள் கூப்பிடுகிறபோது அவர்கள் வரவில்லை, அவர்கள் கூப்பிடுகிறபோது நீங்கள் போகவில்லை. நீங்கள் இருவருமே கூப்பிடுகிறபோது நாங்கள் வந்தவர்கள். ஆகவே நாங்கள் வந்தவர்கள் என்ற காரணத்தினாலே இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்தப் பிரச்சினையின் மீது (குறுக்கீடு) இல்லை, இதிலே நான் சொல்வது, இங்கே பேசுகிற விஷயம் என்பது வேறு. எனவே குறிப்பாக இங்கே நாம், இரண்டு அரசியல் கட்சிகளுடைய பிரச்சினையாக பார்ப்பதாகத்தான் இந்த காவிரி நீர்ப் பிரச்சினை உள்ளது. அதைத் தீர்ப்பதற்கான ஒன்றுபட்ட நடவடிக்கை இல்லை என்று சொல்லி வருத்தப்படுகிற அரசியல் கட்சிகளிலே நாங்களும் ஒன்று என்ற முறையிலே சொல்கிறேன். கர்நாடகத்திலே ஒன்றுபடுகிறார்கள். தமிழகத்திலே ஒன்றுபட முடியவில்லை என்றால் என்ன காரணம்? இதிலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி, இப்பொழுதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிகளையும் ஒன்றிணைதது அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்திலே அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, காவிரி நீரைப் பெறுவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்குமா? அதற்குரிய பதிலைச் சொல்வார்களா என அறிய விரும்புகிறேன். இதிலே மிகவும் மௌனம் சாதிக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதன் மீது சொல்லவில்லையென்று சொன்னால்....

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்குத்தான் விரிவாகப் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தலாகப் பேசுவதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பொறுபபற்ற முறையில் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார் என்றுதான் இந்த நேரத்தில் சொல்லத் தோன்றுகிறது. மாநில அரசு காவிரி நீரைப் பெறுவதற்கு என்ன செய்யப் போகிறது என்று திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறார். நேற்றையதினம்தான் மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது; என்னென்ன நடவடிக்கைகளை

தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதை இந்த அவையில் தெளிவாக, விரிவாக, விளக்கமாகக் குறிப்பிட்டேன். மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டு, மாநில அரசின் சக்திக்குட்பட்டு, என்னென்ன நடவடிக்கைகள், என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள முடியுமோ அத்தனையும், இந்த மாநில அரசு ஏற்கெனவே செய்துவிட்டது; இப்போதும் செய்து வருகிறது. இவ்வளவுக்குப் பிறகும் நமக்கு காவிரியில் கிடைக்க வேண்டிய நீர் கிடைக்கவில்லையென்றால் அது மாநில அரசின் குற்றமல்ல. நடவடிக்கை எடுக்க வேண்டியது, நடவடிக்கை எடுக்கக் கூடியது, மத்திய அரசுதான். மத்திய அரசு தனது கடமையைச் செய்யவில்லை. எப்படி என்று சொல்கிறேன். எப்போது Tribunal ஒரு Order-ஐக் கொடுத்ததோ, Interim Order, அதைச் செயல்படுத்த வேண்டியது கர்நாடக அரசின் கடமையாகும். ஆனால் செயல்படுத்தத் தவறியது. இந்த Tribunal கொடுத்த interim award-ஐ கர்நாடக அரசு செயல்படுத்தவில்லையென்றுதான் உச்ச நீதிமன்றத்தை அணுகினோம். உச்ச நீதிமன்றம் இதனை Cauvery River Authority-இன் பொறுப்பிற்கு விடவேண்டும் என்று சொன்னது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படித்தான் Tribunal கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே கடமையோடு இந்தக் காவிரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்தக் காவிரி நீர் ஆணையத்திற்கு தலைவர் யார்? இந்த நாட்டின் பிரதமர். அந்தக் காவிரி நதி நீர் ஆணையத்தின் தலைவராகிய பிரதமர் கர்நாடக அரசுக்கு ஓர் உத்தரவிடுகிறார். குறிப்பிட்ட தேதிக்குள் இவ்வளவு தண்ணீரை நீங்கள் தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டும் என்கிறார். ஆனால் கர்நாடக அரசு அதைச் செய்ய மறுக்கிறது. இது ஒரு முறையல்ல, பல முறை நடந்துவிட்டது. எப்போதிலிருந்து இந்தக் காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டதோ, அது எத்தனை முறை கூடியிருக்கிறதோ, ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் பிரதமர் கர்நாடக அரசுக்கு இவ்வளவு தண்ணீரை தமிழ்நாட்டிற்குத் திறந்து விடவேண்டும் என்று உத்தரவிட்ட பிறகும், ஒரு முறைகூட அதன்படி கர்நாடக அரசு தண்ணீரைத் திறந்துவிடவில்லை. அடுத்து மத்திய அரசு என்ன செய்ய வேண்டும்? கர்நாடக அரசின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பிரிவுகளின்கீழ், எத்தகைய நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைக்கூட விவரித்து ஏற்கெனவே நான் பிரதமருக்கே கடிதம் அனுப்பியிருக்கிறேன். இதை நேரிலும் விவாதித்திருக்கிறேன். இத்தனை முறை உச்ச நீதிமன்ற ஆணையை மீறி Tribunal ஆணையை



மீறி, Tribunal-ன் ஆணையைச் செயல்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்ட ஆணையத்தின் ஆணையை மீறி கர்நாடக அரசு அடிபணிய மறுக்கிறது என்றால், அடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டியது யார்? பிரதமர்தான். என்ன செய்திருக்க வேண்டும்? Article 257 of the Constitution சொல்லுகிறது. This Article deals with control of the Union over states in certain cases. The executive power of every State shall be so exercised as not to impede or prejudice the exercise of the executive power of the Union and the executive power of the Union shall extend to the giving of such directions to a State as may appear to the Government of India to be necessary for that purpose. ஆகவே பிரதமர் தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டார். இத்தனை முறை காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் பிரதமர் இட்ட கட்டளையை கர்நாடக அரசு ஏற்க மறுத்தபோது, செயல்படுத்த மறுத்தபோது, நாங்களும் வேண்டுகோள் விடுத்தபடி, அடுத்து பிரதமர் என்ன செய்திருக்க வேண்டும்? Article 257-ன்கீழ் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 257-ன்கீழ், கர்நாடகத்திற்கு மத்திய அரசு ஓர் உத்தரவிட்டிருக்க வேண்டும். மத்திய அரசு இந்த உத்தரவு இடுகிறது; இதன்படி தமிழகத்திற்கு இவ்வளவு தண்ணீரை நீங்கள் திறந்துவிட்டாக வேண்டும் என்று உத்தரவிட்டிருக்க வேண்டும். அப்போதும் கர்நாடக அரசு அதைச் செயல்படுத்தவில்லையென்றால் அடுத்து என்ன செயதிருக்க வேண்டும்? அதையும் ஏற்கெனவே பிரதமருக்கு தெரிவித்திருக்கிறோம். இதைப் பற்றி விரிவாகக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

*பிற்பகல் 12-30*

Article 365 of the Constitution says - "Effect of failure to comply with, or to give effect to, directions given by the Union,--where any State has failed to comply with, or to give effect to any directions given in the exercise of the executive power of the Union under any of the provisions of this Constitution, it shall be lawful for the President to hold that a situation has arisen in which the Government of the State cannot be carried on in accordance with the provisions of this Constitution."

ஆகவே இந்திய அரசியல் சட்டப் பிரிவு 257-ன்கீழ மத்திய அரசு கர்நாடக அரசுக்கு, நீங்கள் குறிப்பிட்ட அளவு தண்ணீரை தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்ட தேதிக்குள் திறந்துவிட வேண்டும் என்று ஆணையிட்டிருக்க வேண்டும். அதை எப்போது கர்நாடக அரசு

மீறியதோ. அதன் பிறகு இந்திய அரசியல் சட்டப் பிரிவு 365-ன்கீழ் மத்திய அரசு இட்ட உத்தரவை செயல்படுத்தத் தவறிய கர்நாடக அரசு, இந்திய அரசியல் சட்டத்தின்படி நடைபெறவில்லை என்று மத்திய அரசு சொல்லியிருக்கவேண்டும். அதை ஜனாதிபதி அவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்க வேண்டும். அதன் பிறகு Article 356-ஐப் பயன்படுத்தி கர்நாடக அரசைக் கலைத்திருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் செய்திருந்தால், அரசைக் கலைக்கின்ற அளவிற்குக்கூட போய் இருக்காது. Article 257-ன்கீழ் மத்திய அரசு ஓர் உத்தரவை கர்நாடக அரசுக்கு அனுப்பி எப்பொழுது அவர்கள் அதைச் செயல்படுத்தவில்லையோ, Article 365-ன்கீழ் கர்நாடக மாநில அரசு இந்திய அரசியல் சட்டத்தின்படி செயல்படவில்லை என்று ஜனாதிபதிக்கு அறிக்கை கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தாலே கர்நாடக அரசு வழிக்கு வந்து, நமக்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரைத் திறந்துவிட்டிருப்பார்கள். அதை ஏன் பிரதமர் செய்யவில்லை? ஏன் மத்திய அரசு அதைச் செய்யவில்லை? இந்த அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லையா? இந்த அதிகாரம் பிரதமருக்கு இல்லையா? இவ்வளவு அதிகாரங்களையும் கையில் வைத்துக்கொண்டு பிரதமர் ஏன் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தத் தயங்குகிறார்? இவ்வளவு அதிகாரத்தையும் கையில் வைத்துக்கொண்டு மத்திய அரசு ஏன் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தத் தயங்குகிறது? ஆகவே தண்ணீர் கிடைக்கவில்லை என்றால், அது மாநில அரசின் குற்றம் அல்ல. பிரதமரின் குற்றம், மத்திய அரசின் குற்றம் என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட வஞ்சகச் செயலிலே ஈடுபடுவதை நானும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு நானும் உடன்படுகிறேன். மத்திய அரசாங்கம் இப்படிச் செய்ய மறுப்பதைக் கண்டித்து நம்முடைய சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி ஒட்டுமொத்தத் தீர்மானமாக மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி காவிரி நீரைப் பெறுவதற்கான முயற்சியை நம்முடைய தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கும் பிரதமருக்கும் என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை இப்பொழுது நான் தெளிவுபடுத்தி இங்கே கூறினேன். இன்றைய சட்டமன்றக் கூட்டத் தொடர் இன்றுடன் முடிவடைவதால் நேரம் போதவில்லை. அடுத்தமுறை சட்டமன்றம் கூடும்போது நிச்சயமாக இதுகுறித்து ஒரு தீர்மானம் இந்த அவையில் கொண்டுவருவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஜனவரி மாதத்தில் சட்டமன்றம் கூட உள்ளது. அதற்குள் கர்நாடக அரசு நமக்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரைத் திறந்துவிடவில்லையென்றால் அப்பொழுது அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் நான் சொன்னபடி இத்தகைய ஒரு தீர்மானம் கொண்டுவரப்படும். இந்திய அரசியல் சட்டப் பிரிவு 257-ன்கீழ் பிரதமர், அதாவது மத்திய அரசு, கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும். அவ்வாறு இடப்படும் உத்தரவை கர்நாடக அரசு செயல்படுத்தவில்லையென்றால், இந்திய அரசியல் சட்டப் பிரிவு 365-ன்கீழ் கர்நாடக மாநில அரசு இந்திய அரசியல் சட்டத்தின்படி நடைபெறவில்லை என்று ஜனாதிபதி அவர்களுக்கு மத்திய அரசு அறிக்கை தர வேண்டும். அதன் பிறகு மத்திய அரசு முடிவெடுத்து, அந்த முடிவை ஜனாதிபதி அவர்களுக்குப் பரிந்துரைத்து, இந்திய அரசியல் சட்டப் பிரிவு 356-ன்படி கர்நாடக மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றம் கோருகிறது என்று ஒரு தீர்மானத்தை நிச்சயமாகக் கொண்டுவருவேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு கட்சி வேறுபாடின்றி, இந்த அவையிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இப்பொழுதே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானம் கொண்டு வருவேன் என்று சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே சில ஷரத்துக்களைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். ஒரு மாநில அரசைக் கலைப்பதற்கான அதிகாரத்தைப் பற்றிப் பேசுகிறபோது, நாம் அதிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. திரு. சிவபுண்ணியம் முடியுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அடுத்த சட்டமுன்வடிவிலே பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிஷம்; இந்த முதல் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்த நேரத்திலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் ஏற்கெனவே பேசிவிட்டார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை; பேசவே இல்லை; ஒரு Clarification. அவர் நிறைய பேசப் போகிறார்; Clarification தான்; இதிலே இருக்கிற Clarification தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒரு Clarification கேளுங்கள். (குறுக்கீடு) திரு. ராஜா, உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *2003 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், "எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்று, புதுப்பணிகள் குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்கு சட்டப் பேரவையினுடைய ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடு செய்யும் பொருட்டும் இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகிறது" என்று சொல்லியிருக்கிறார். இதிலே அவர் கோரியிருக்கிற தொகை ரூ.578.36 கோடி. இவையெல்லாம் புதுப் பணிகள் என்று சொல்கிறார்கள். எதிர்பாராச் செலவு நிதியினுடைய மொத்த அளவே,* corpus *ரூ.150 கோடி. அது ரூ.150 கோடியாக இருக்கின்ற இந்த நேரத்திலே,* Contingency Fund-*லே இந்தப் பணத்தை எடுக்கமுடியாது; நிதியை எடுக்கமுடியாது. நீங்கள் எடுக்கின்ற நிதி, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மட்டும்தான் எடுக்கமுடியும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மட்டுமே எடுக்கமுடியும் என்று சொன்னால், இவ்வளவு பெரிய தொகையை— ஏற்கெனவே 865.15 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது* budget-*ல்;*



*அப்படியிருக்கின்ற நேரத்திலே இதை—எப்படி ஈடுகட்டினீர்கள்? எப்படிச் செலவு செய்தீர்கள்? எதிர்காலத்திலே எப்படிச் செலவு செய்ய இருக்கிறீர்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)*

**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில் சொல்லிவிட்டும். (குறுக்கீடு) இல்லை, ஒரு Clarification மட்டும் கேளுங்கள்; நேரமில்லை.

**திரு. எச். ராஜா:** இரண்டே நிமிடங்கள் போதும் எனக்கு. நான் ஏற்கெனவே பேசவேண்டும் என்று உங்களிடம் அனுமதியைத் தனியாகக் கேட்டேன். அதாவது இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, ** மத்திய அரசுக்கு எதிராக இங்கே பேசியிருக்கிறார். அதை தயவுசெய்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அந்தப் பொருளில் அவர் சொன்னதுமாதிரி தெரியவில்லை. (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** இல்லை, சொன்னார் அவர். நான் அப்போதே object பண்ணினேன். அதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று நான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்தகைய பொருளிலே சொல்லியிருந்தால் அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எச். ராஜா:** எந்தவிதமான ஆதாரமில்லாமல், ** அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** இல்லை, எனக்கு இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். நான் அதிக நேரம் கேட்கவில்லையே. I want just two minutes. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** அதேபோல ஒவ்வொரு முறையும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், மைய அரசு மாநிலத்திற்கு வஞ்சம் செய்து விட்டதாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். அதாவது மைய அரசு அனைத்து மாநிலங்களையும் கணக்கிடும்போது, percentage-ல் வேண்டுமானால், 11th Finance Commission-ல் குறைவாக இருக்கலாம். ஆனால் quantitative terms-லே, actual quantity-யிலே, போன ஆண்டைவிட, இந்த ஆண்டு நிதி குறையவில்லை. அதற்கு முந்தைய ஆண்டிலும் நிதி குறையவில்லை. மேலும் மத்திய அரசு இப்போது பல்வேறுவிதமான திட்டங்களிலே ஒரு partner-ஆக, development activity-யில் இருந்துகொண்டிருக்கிறது. எந்தவொரு திட்டமாக இருந்தாலும் சரி; அது சம்பூர்ண கிராமிய ரோஜ்கார் யோஜனாவாக இருக்கலாம்; பிரதம மந்திரி கிராம சதக் யோஜனாவாக இருக்கலாம்; அல்லது சர்வ சிக்ஷா அபியான்-ஆக இருக்கலாம். ஆகவே ஒவ்வொரு திட்டத்திலும் மத்திய அரசு ஒரு partner-in-development-ஆகத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

அதேபோல காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் என்னுடைய ஒரேயொரு கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ராஜா, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான......(குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டை மறுப்பதற்கு எனக்கு நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பிரதமருக்கு எதிராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை; மத்திய சர்க்கார் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத்தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்.



**திரு. எச். ராஜா:** பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டை மறுப்பதற்கு நேரம் தராத காரணத்தினால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு திரு. சி பொன்னையன்:** மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். இந்தத் துணை மானியத்தைப் பொறுத்தவரைக்கும், இதிலே Contingency Fund-லேயிருந்து எடுத்த பணத்தை ஈடுகட்டுவதற்காக என்ற நிலை இருக்கிறபோது, அதற்கான தொகை குறைவாக இருக்கிறது என்பதனை இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதிலே மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'The supplementary estimates are being presented mainly to obtain the approval of the Legislature for expenditure on New Services'.'MAINLY' என்று இருக்கிறது. அப்போது வேறு சில பிரிவுகளுக்கும் இதிலே, இந்த Supplementary Budget-ல் இடமிருக்கிறது என்ற பொருளை மேற்கொள்ளவேண்டும்.

*பிற்பகல் 12-10*

குறிப்பாக, Drip and Sprinkler Irrigation System-ற்கு 25.10 கோடி ரூபாய் இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலிலே மைய அரசினுடைய தொகுப்பிலிருந்து இது கணக்கிலே கொண்டுவரப்பட்டது. பிறகு மாநில அரசின் தொகுப்பிலிருந்தும், இதற்கு நிதி ஒதுக்க வேண்டிய நிலை உருவானது. எனவே மைய-மாநில இரு தொகுப்புகளிலிருந்தும் இதை மாற்றியமைப்பதற்கு re-appropriation செய்ய வேண்டியிருந்த காரணத்தால், அந்த 25.10 கோடி ரூபாயை இந்த category-க்குக் கொண்டு வந்து, அதிலே 15 கோடி ரூபாயை தற்போது இத்தோடு நாம் சேர்த்து இருக்கிறோம். இதிலே, Contingency Fund -ல் எதுவுமே சேராத நிலை ஏற்படும்.

அதைப்போலவே விவசாயிகளுக்கு, small and marginal farmers-க்கு, அந்த வட்டியைத் தள்ளுபடி செய்கின்ற முகத்தான் 20 கோடி ரூபாய் தேவை என்று துறை கேட்டிருந்தது. 3 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. எனவே அந்த 3 கோடி ரூபாயும் சேர்த்து, மொத்தம் 20 கோடி ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் கணக்கிலே இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே Electricity Board-க்கு 200 கோடி ரூபாய், மின் வாரியத்திற்குப் பணம் தேவைப்பட்டது. அதற்காக 200 கோடி ரூபாய் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே Contingency Fund-க்கு recoup பண்ணுவதற்கு ஒன்றுமே ஒதுக்க வேண்டியதில்லை. இந்தப் பணம் முழுவதும் வருகின்ற நிதியாண்டிற்குள் செலவு செய்யப்பட வேண்டிய நிதி என்ற முறையிலே இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இலவச வேட்டி சேலையைப் பொறுத்தவரைக்கும், ஒட்டுமொத்தமாக 120 கோடி ரூபாய் அதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே Contingency Fund-க்கு 20 கோடி ரூபாய் சென்றுவிடும். மீதமுள்ள இந்த 100 கோடி ரூபாய், அந்தப் பணத்தை 2004, 31 மார்ச்சுக்குள் செலவு செய்ய வேண்டும். அதுதான் இந்தக் கணக்கிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே கும்பகோணத்திலே அந்த மகாமகத்தைப் பொறுத்தவரைக்கும், அப்போது ஆங்கேயுள்ள சாலைகள், குறிப்பாக அந்த by-pass road -ஐப் போடுவதற்கு 24.09 கோடி ரூபாய் என ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே மற்றும் அந்தப் பகுதியிலேயுள்ள சுற்றுப்புறச் சூழலைச் சரி செய்வதற்கு 1½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக 25.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரைக்கும், அந்த விழா தொடங்குவதற்கு முன்னாலே இதைச் செலவு செய்துவிடவேண்டும். Contingency Fund -க்கென இதில் எதுவுமே ஒதுக்கப்படவில்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே திருவண்ணாமலை மாவட்டத்தில் Rashtriya Sam Vikas Yojana திட்டத்தின்கீழ் 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட பணத்திலே advance-ஆக Contingency Fund-லிருந்து 3 கோடி ரூபாய் பணம் தரப்பட்டது. ஆனால் மைய அரசைப் பொறுத்தவரைக்கும், 7½ கோடி ரூபாய்தான் ஒதுக்கியது. மீதமுள்ள பணத்தை நாம், மாநில அரசே தரவேண்டிய நிலை இருந்தது. இதில் 3 கோடி ரூபாய் மட்டும் Contingency Fund-க்குச் செல்லும். மீதியிருக்கிற 4½ கோடி ரூபாயை அந்த காலகட்டத்திற்குள் செலவிற்கு உட்படுத்தப்பட்டுவிடும்.

அதைப்போலவே shutters and masonary works across Cauvery river and canals in the Cauvery delta, பகுதியில் 34 கோடி ரூபாய், இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே 5 கோடி ரூபாய் மட்டுமே Contingency



Fund-க்குச் செல்லும். மீதமிருக்கின்ற பணம், அதை அந்தக் காலத்தில் 7 ஆம் தேதிக்குள், அந்தப் பணம் செலவுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்த இலவச free rice per month to eligible families of small and marginal farmers and agricultural labourers என்ற முறையிலே, 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே Contingency Fund-க்கு, recoupment-க்கு எதுவுமே ஒதுக்க வேண்டிய நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இந்தத் துணை மானியத்தின்மீது எடுத்துக் கூறினார்கள். அதற்கெல்லாம் தக்க பதிலை அவ்வப்போது மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள். எனவே அவற்றையெல்லாம் ஏற்று, இந்த 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 3-ஐ நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்பு, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2003) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை



சட்டமுன்வடிவு எண் 36/2003). திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வி.கே. லட்சுமணன், ஜே. ஹேமச்சந்திரன், கு. பிச்சாண்டி ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களிலே ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழியலாம்:

"1-7-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது."

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1-7-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது."

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருவார். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2003). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2003) ¤ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

¤ 6—11—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் பேசக்கூடியவர்கள் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆற்காடு நா. வீராசாமி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் திருத்தச் சட்டமுன்வடிவு மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். முதலிலேயே, இந்தச் சட்டம் தேவையில்லையென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து.

1981-ல் மத்திய அரசு 'ESMA' என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது. 1985 ஆம் ஆண்டு மறுபடியும் அதை நீட்டித்தது. 1989 ஆம் ஆண்டு அந்தச் சட்டம் தேவையில்லை என்று அதோடு கைவிடப்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்தை மறுபடியும் இப்பொழுது தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டு கொண்டு வந்து பிறகு இப்பொழுது 2003 ஆம் ஆண்டு அந்தச் சட்டத்திற்கு ஒரு amendment கொண்டு வந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் பல ஆண்டுகளாகப் போராடிப் பெற்ற சில சலுகைகளை, அடிப்படை உரிமைகளை இப்படிப்பட்ட சட்டங்கள் மூலமாக இழப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட எதிர்க்கட்சியில் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் தொழிலாளர்களுக்காக என்று சில திட்டங்கள் அறிவிக்கின்றபோது, அதை எதிர்த்து அறிக்கை விட்டிருக்கிறார்கள்; கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆக எதிர்க்கட்சியாக இருக்கும்போது கோரிக்கை வைப்பதும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது சிலவற்றை நிறைவேற்றுவதும், பொதுவாக ஒவ்வொரு அரசாங்கத்தினுடைய கடமை. ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் புதியதாக எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை. 5 அரசு ஆணைகளை இந்த அரசாங்கம் பிறப்பித்தது. அந்த அரசு ஆணைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். பிறகு போராட்டங்கள் நடத்தினார்கள். இறுதியாக ஜூன் இறுதி வாரத்திலே முதலமைச்சரை சந்தித்து, அந்தக் கோரிக்கைப பட்டியலை வைத்தார்கள். முதலமைச்சர் அதைப் பார்த்து பரிசீலிக்கிறேன் என்று சொன்னார். ஆனால் அதற்குப் பிறகு, அவர்களை வெளியே அனுப்பியதற்குப் பிறகு, பத்திரிகைகளிலே ஒரே ஒரு கோரிக்கை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகச் செய்தி வந்தது.



அதைப் பார்த்தவுடன் அவர்கள் உள்ளபடியே வேதனைப்பட்டார்கள். ஏற்கெனவே ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்துவிட்டு, அதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததற்குப் பிறகும் இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையே என்ற ஆதங்கத்தில் அவர்கள அரசாங்கத்திற்கு, எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஜூலை மாதம் 2 ஆம் தேதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்வோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தம் என்றில்லாமல் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே இதில் என்ன பாதிப்பு, என்னவென்பதை, அதைப்பற்றி விளக்கத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதைத்தான் சொல்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் என்ன பாதிப்பு வருகிறது என்று சொன்னால், இந்தச் சட்டத்தின்படி அவர்கள் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தால்கூட, உடனடியாக dismiss செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இந்தச் சட்டத்தில் இருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டு வந்தவுடனேயே நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதியரசர் தினகர் ஒரு தீர்ப்பை வழங்கினார். உடனடியாக, அதாவது 30 ஆம் தேதி இரவே, 2 ஆம தேதி வேலைநிறுத்தம் என்றால், 30 ஆம் தேதி இரவே தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்த காரணத்தால், அந்தத் தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தம், அதாவது அரசாங்க ஊழியர்களுடைய வேலைநிறுத்தம் என்பது கொஞ்சம் வேகமானது. உடனடியாக கூப்பிட்டுப் பேசியிருந்தால்கூட அது தணிந்து இருக்கும். ஆனால் அதற்கு மாறாக மூன்றாம் தேதி நாங்கள் வேலைககு வருகிறோம் என்று சொன்னவர்களையும் வேலைக்கு அனுமதிக்கவில்லை. நான்காம் தேதி வேலைக்கு வருகிறோம் என்று சொன்னவர்களையும் வேலைக்கு அனுமதிக்கவில்லை.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி பேசுகிறபோது ஒரே ஒரு சலுகையை மட்டும்தான் அரசு அறிவித்தது என்று சொன்னார்கள். அது உண்மைக்கு மாறான ஒன்று. காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன், அவர்கள் 27-6-2003 அன்று பேச்சுவார்த்தை

மேற்கொண்டார்கள். அந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு Dearness Allowance 4% from *1-7-2003*, அது அறிவிக்கப்பட்டது. Payment in cash of 1% Dearness Allowance impounded from *1-10-2002* அதுவும் அறிவிக்கப்பட்டது. Payment of Death-cum-Retirement Gratuity fully in cash, அதுவும் அறிவிக்கப்பட்டது.

Payment of arrears of pay and allowances for noon meal workers, முழுவதுமாக *1-6-1996*-லிருந்து *31-8-1998* வரை அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொல்கிறார். அதை நான் மறுக்கவில்லை. நான் சொல்ல வந்தது, 5 அரசு ஆணைகள் பிறப்பித்ததைப் பொறுத்த அளவிலே ஒரே ஒரு ஆணையை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். நிதி அமைச்சர் சொன்னதைப்போல மற்ற ஆணைகளைக்கூட பிறப்பித்து இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு மிக முக்கியமானது அந்த ஐந்து அரசு ஆணைகள்தான். ஆனால் அதிலே அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள்; அதற்குப்பிறகு உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். பிறகு Bench-க்குப் போனார்கள். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதிலே இலட்சக்கணக்கானவர்கள் ஈடுபட்டார்கள் என்கிறார்கள். இல்லை, இங்கு அனைவருமே வேலை செய்கிறார்கள். *6072* பேர்கூட கிடையாது. *5,729* பேர்தான் என்று நீதிமன்றத்தின் முன்னாலே நிறுத்தப்பட்டு அவர்கள் கோரிக்கைகளெல்லாம் பரிசீலிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்த விவாதங்களுக்குள்ளே போகவில்லை. ஆனால் இது தேவை இல்லாத ஒன்று. நம்முடைய அரசாங்க ஊழியர்கள், அந்தச் சங்கத்தினுடைய தலைவர்கள் என்ன சொல்கிறார்கள், நாங்கள் நீதிமன்றத்திற்குப் போக மாட்டோம்; அம்மா எங்களுக்கு நல்லதையே செய்வார் என்றுதான் சொல்கிறார்களே தவிர, யாரும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை. இப்படியிருந்தும்கூட அரசாங்க ஊழியர்கள் ஒருமாத காலத்திற்குள்ளாக அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்து, மூன்று நீதிபதிகளை நியமிக்கச் சொல்லி, ஒரு மாதத்திலேயே அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட்டதா என்றால் இல்லை. நான்கு மாதமாகிறது.



அவர்களுடைய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அனேகமாக இந்த மாதத்திலே தீர்ப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், பொதுவாக, இந்தச் சட்டத்தின் மூலம் நாளைக்கு என்ன ஆகும் என்றால் தனியார் நிறுவனங்களிலே பணி செய்யக் கூடியவர்களைக்கூட, இந்த அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாது. அரசாங்க ஊழியர்களையே உள்ளே தள்ளக்கூடிய அளவுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்தபோது எப்படி தனியார் நிறுவனங்களிலே பணி செய்யக்கூடியவர்களுக்கு அது Industrial Dispute Act-ஆக இருந்தாலும், எந்த Act-ஆக இருந்தாலும் அவர்கள் நாளையதினம் அதைக் கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? ஆக இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து அரசு இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உச்ச நீதிமன்றத்திலேகூட நீதிபதி சொன்ன கருத்துக்கு சோலி சொராப்ஜி போன்றவர்களெல்லாம், அந்தக் கருத்து தவறானது என்று சொல்லியிருக்கிறார்கள். பிரதமர் அவர்களேகூட, Labour Ministers முன்னாலே ஒரு விவாதம் நடைபெற்றபோது பொதுவான ஒரு கருத்து உருவாக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த அரசு இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தச் சட்டத்தின் 5-வது பிரிவுபடி எதிர்க்கட்சித் தலைவர்கள். அது கலைஞராக இருந்தாலும் அல்லது C.P.I.-யினுடைய தலைவர் திரு. நல்லக்கண்ணுவாக இருந்தாலும், C.P.M.-தலைவர் திரு. வரதராஜனாக இருந்தாலும், காங்கிரஸ் செயல் தலைவர் திரு. ஈவிகேஎஸ். இளங்கோவனாக இருந்தாலும் இவர்கள் மீதெல்லாம்கூட வழக்கு போட்டு இருக்கிறார்கள். யாரும் சிரிப்பதற்காக நான் எதையும் சொல்லவில்லை. வழக்கு போட்டு இருக்கிறார்கள். வழக்கு போடுவதைப்பற்றி நான் இங்கே எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. இவர்களெல்லாம் சிறைச்சாலைகளைப் பார்க்காதவர்கள் அல்ல; அல்லது இப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம் சந்திக்காதவர்கள் அல்ல. அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்ற அடிப்படை உரிமை, ஒரு தொழிற்சங்கம் அல்லது தொழிலாளர்கள் போராடுகின்ற நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது என்பது அதைத் தூண்டுவதாக அர்த்தம் அல்ல. ஆனால் சட்டத்திலே 5-வது பிரிவில் என்ன சொல்கிறது என்றால், 'தூண்டினால் அல்லது பண உதவி

செய்தால் அவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை, 5 ஆயிரம் அபராதம்' என்றெல்லாம் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களை ஆதரித்து ஒரு கருத்து தெரிவிக்கிற ஒரே ஒரு காரணத்திற்காக இந்தச் சட்டம் அவர்கள்மீது பாயும் என்றால், நாளையதினம் அவர்களுக்காக வாதாடிய வக்கீல்மீதுகூட இந்தச் சட்டம் பாயுமோ என்ற ஒரு அச்சம் இந்த நாட்டிலே இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவையில்லாதது. இது உண்மையிலேயே வருந்தத்தக்கது. அரசியல் தலைவர்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகள் கண்டிக்கத்தக்கது என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அரசு ஊழியர்கள், நீதிமன்றம்கூட நாங்கள் போகமாட்டோம்; இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கூறியதாகக் கூறினார். ஆனால், இதில் பிரச்சினை—உண்மையான பிரச்சினை—என்னவென்றால், இதில் தி.மு.க.-வினுடைய கொள்கை எப்படி இருந்தது என்பதுதான் முக்கியம் இதிலே. பேசுகிறபோது அவர்கள் சொல்லவில்லை. ஆனால் திரு. கருணாநிதி அவர்கள், 22-6-2003 ஆம் நாளன்று ஒரு அறிக்கையை விட்டார். "அரசு ஊழியர்கள் குனியக்கூடாது; முட்டினால்தான் தப்ப முடியும்; ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரால், அரசாங்கம் குட்டும்போது, அரசு ஊழியர்கள் குனிந்து கொடுக்கக்கூடாது; திரும்ப முட்டினால்தான் தற்காப்பு கிடைக்கும்; தப்பவும் முடியும்" என்று அவர்கள் எழுதிய பிறகுதான், அறிக்கை விட்ட பிறகுதான், இப்படித் தூண்டிவிட்ட பிறகுதான், பிரச்சினையே விஸ்வரூபம் எடுத்தது. அரசு ஊழியர்கள் இதற்கு நீதிமன்றத்திற்குச் செல்ல விரும்பவில்லை.

அதைப்போலவே நீதிமன்றத்திற்குச் சென்றது--அவர்கள் செல்லவில்லை என்பதை நான் ஒப்புகொள்கிறேன். ஆனால் பாரதப் பிரதமருக்கு, திரு. வாஜ்பாய் அவர்களுக்கு, திரு. கருணாநிதி ஒரு அஞ்சல் எழுதுகிறார். உச்ச நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுதியதும் திரு. கருணாநிதிதான். சில அரசு ஊழியர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு நாங்கள் போகமாட்டோம்;



அரசியல் கட்சிகளே தலையிடாதீர்கள் என்று வேண்டிக் கேட்டபோதிலும்கூட இந்தப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கி, எங்கள் கட்சிக்கு, இந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு உச்ச நீதிமன்றத்தில், திமுக-வைச் சேர்ந்த திரு. குப்புசாமி அவர்கள்தான் வழக்கையே தொடர்ந்தார். உச்ச நீதிமன்றத்தில், திமுக வழக்குத் தொடர்ந்தது. நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் செல்லவில்லை. அரசு ஊழியர்களுக்கு, அரசாங்கத்தினுடைய நிதியாதாரம் சீரானவுடன், அரசு ஊழியர்களுடைய சலுகைகளெல்லாம் மீண்டும் தரப்படும் என்றுதான் அரசு ஊழியர்கள்மீது பரிவுடன் தாயுள்ளத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகி, மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியிருந்தார்கள். அரசு ஊழியர்களும் அதை அறிந்திருந்தார்கள். மைய அரசு, எந்த அளவிற்கு மாநில அரசுக்கு நிதியைத் தடுத்துவிட்டது என்பதையும் சொல்லி, நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது கஜானா காலியாக இருந்தது என்பதையும் எடுத்துச் சொல்லி, நிதியாதாரத்தைப் பெருக்கக்கூடிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம்; நிதியாதாரம் சீரான நிலைக்கு வந்தவுடன் கட்டாயம் உங்களது பிரச்சினைகளை நாங்கள் தீர்ப்போம், உங்கள் சலுகைகளைத் தருவோம் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். ஆதாரங்களைக்கூட அவர்களிடம் காட்டினோம். எங்களிடம் ஒப்புக்கொண்டுதான் சென்றார்கள். ஆனால் இடைத் தேர்தல்கள் வந்தபோது, Political polarisation வேறு முறையில் தமிழகத்தில் அமைந்தபோது, நீங்கள் இதை அரசியல் பிரச்சினை ஆக்க வேண்டுமென்று முயற்சி செய்தீர்கள். முட்டச் சொல்லி சொன்னீர்கள், அரசு ஊழியர்களை, அரசை நோக்கி. அது மட்டுமல்ல. உங்களோடு மற்ற சில இயக்கங்களையும் சேர்த்துக் கொண்டீர்கள். நீதிமன்றத்திற்கு நாங்கள் செல்லவே மாட்டோம் என்று அவர்கள்—ஊழியர்கள்—சொன்னார்கள். நாங்களும் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, இதிலே ஒரு பிரச்சினையை, சிக்கலை உருவாக்க என்றும் விரும்பியதில்லை. மாறாக, உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் சென்றதும் நீங்கள்தான். உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றதும் நீங்கள்தான். இப்படி உழைக்கும் வர்க்கத்திற்கு, ஊழியர்களுக்குப் பாதகமான, அரசு ஊழியர்களுக்கு பாதகமான ஒரு தீர்ப்பை. ஏதோ எங்கள் ஆட்சிக்கு, எங்கள் அம்மாவுக்குத் தொல்லை தருவதாக நினைத்துக்கொண்டு, நீங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்து அரசு ஊழியர்களுக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும், அவர்கள் தலையிலே குட்டிவிட்டீர்கள். பாதகத்தை உருவாக்கிவிட்டீர்கள். நீங்கள்தான் அதற்குக் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் எழுதியதைப் பற்றி சொன்னார்கள். கலைஞர் எந்த ஆட்சியிலேயும்—இப்போது எழுதவில்லை; அவர் ஆளுங்கட்சியாக இருந்தபோதுகூட, தொழிலாளர்கள், அந்தப் போராட்ட உணர்வை விட்டுவிடக் கூடாது; அது மங்கிவிடக் கூடாது என்ற அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். உச்ச நீதிமன்றத்திலே-(குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்கவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே-

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன்-(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 8th July 2003 அன்று, தி.மு.க.-வின் தலைவர் கருணாநிதி இதைபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார். உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை எடுத்துச் செல்லுவோமென்றும் தி.மு.க.-வினுடைய தலைவர் திரு. கருணாநிதி எடுத்துச் சொல்லியிருக்கிறார். திமுகவைச் சேர்ந்த திரு. குப்புசாமி அவர்கள்தான் உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கையும் தொடர்ந்திருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி மட்டும் உச்ச நீதிமன்றத்திற்குப் போகாமல் இருந்திருந்தால், இந்த நேரம் அரசு ஊழியர்களின் இல்லங்கள் இருளடைந்திருக்கும். அவர்கள் இல்லங்களிலே விளக்கு ஏற்றி வைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்றால், இதை ஆயிரம் முறை திருப்பித் திருப்பி அரசு ஊழியர்களுக்காக இதே குற்றத்தை தி.மு.க. செய்யத் தயாராக இருக்கிறது. உங்கள் தண்டனையை, எது வந்தாலும் ஏற்கத் தயாராக இருக்கிறது. காரணம், இது மக்கள் பிரச்சினை.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால், சட்டத்தை ஏன் எதிர்க்கிறீர்கள்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.-வின் கொள்கை என்ன என்பதை



மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே தெளிவாகத் தெரிவித்துவிட்டார். 12 இலட்சம் அரசு ஊழியர்கள்தான் மக்கள் என்று தி.மு.க. கருதுகிறது. இந்த 12 இலட்சம் அரசு ஊழியர்களை நம்பித்தான் அவர்கள் மக்களைப் புறக்கணித்தார்கள். அதனால்தான் மக்கள் தி.மு.க.-வினரை வீட்டுக்குச் செல்லுங்கள் என்று எதிர்க்கட்சி வரிசையில் உட்கார வைத்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உடலில் காயம் ஏற்பட்டு இருக்கிறது என்று கையைக் காட்டினால், பாவம், கை தானா இவருடைய உடல் என்று கேட்கிறார்கள். இந்த மக்களுடைய பிரிவிலே அரசு ஊழியர்களும் ஓர் அங்கம் என்பதுதான் நான் முதலமைச்சருக்குத் தெரிவிக்கிற கருத்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவல்ல காரணம். முக்கியமான காரணம், சென்ற தேர்தலிலே இந்த அரசு ஊழியர்களும் சேர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியை அரியணைக்குக் கொண்டுவந்த ஆத்திரத்தில், 'எப்படியும் இந்த அரசு ஊழியர்களை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினால் பழி வாங்க வேண்டுமென்று நீங்கள் மறைமுகமாக சதித் திட்டம் செய்து அவர்கள் வயிற்றிலே அடித்துவிட்டீர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. அடித்துவிட்டது; அதுதான் உண்மை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், கொஞ்சம் அவரைப் பேச விடுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஏதோ உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று திராவிட முன்னேற்றக் கழகம் அரசு ஊழியர்களுடைய வயிற்றிலே அடித்துவிட்டது, அடித்துவிட்டது என்கிறார் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். உண்மையைச் சொல்கிறேன். உச்ச நீதிமன்றத்திற்கு மட்டும் குப்புசாமி அவர்கள் செல்லாமல் இருந்திருப்பார்களேயானால், இலட்சக்கணக்கானவர்கள் இன்னும் நடுத் தெருவிலேதான் நின்று

இருப்பார்களே தவிர, அவர்களுக்கு வேலையே கிடைத்து இருக்காது. நிதி அமைச்சர் சொல்கிறார்; நாங்கள் எந்த நீதிமன்றத்திற்கும் செல்லவில்லை என்று. நீதி அரசர் தினகரன் அவர்கள் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்ற Bench-க்குப் போனது யார்? நாங்களா போனோம்? (குறுக்கீடு) அரசு போனது. (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன். அரசு போனது. உயர் நீதிமன்றத்தின் Bench—அங்கே என்ன சொன்னார்கள் என்றால், அவர்களை Tribunal-க்குப் போங்கள் என்று சொன்னார்கள். இலட்சக்கணக்கான ஊழியர்கள் Tribunal-க்குப் போனால்—அங்கே ஒரு Member இருக்கிறாரோ, 2 Members இருக்கிறார்களோ, அது வேறு விவகாரம்—எந்தக் காலத்திலே இந்தப் பிரச்சினை தீர்வது? உச்ச நீதிமன்றத்திற்குப் போய், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் நிவாரணம் கிடைத்து, இப்போது ஐயாயிரத்து எழுநூற்றுச் சில்லரை அரசு ஊழியர்களுக்கு நிவாரணம் கொடுங்கள் என்று சொன்னால், அதற்கே மூன்று நீதிபதிகள் உட்கார்ந்துகொண்டு விசாரித்து 4 மாதங்கள் ஆகிவிட்டன என்று சொன்னால், பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு தி.மு.க. உச்ச நீதிமன்றம் செல்லாமல் இருந்திருந்தால், அவர்களுடைய எதிர்காலம் என்னவாகி இருக்கும்? எத்தனை பேர் இறந்திருப்பார்கள்; எத்தனை பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள்? அவற்றையெல்லாம் மனிதாபிமானத்தோடு எண்ணிப்பார்த்து, நான் இந்த அரசுக்குச் சொல்வது ஒரு யோசனைதான். அவரே சொல்கிறார், அரசாங்க ஊழியர்கள் எல்லாம் உங்களுக்கு வாக்களித்தார்கள் என்று. அப்படியிருந்தால் நாங்கள் அவர்களுக்காக பரிந்து பேச வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு அரசு ஊழியர்கள் ஓட்டுப் போடுகிறார்களா, இல்லையா என்பதல்ல; அவர்கள் நிரந்தரமானவர்கள், நாமெல்லாம் தற்காலிகமானவர்கள். இன்று நீங்கள் ஆட்சியில் இருக்கலாம்; நாங்கள் நாளைக்கு வரலாம்; வேறு ஒருவர் ஆட்சிக்கு வரலாம். ஆனால் அரசு ஊழியர்கள் என்பவர்கள் நிரந்தரமானவர்கள். அப்படிப்பட்டவர்களை தவிக்கவிடுவது, கண்ணீர்விடச் செய்வது, அவர்களை அலைக்கழிப்பது நல்லதல்ல. எனவே இப்படிப்பட்ட சட்டம் தேவையில்லை; அழைத்துப் பேசுங்கள்; பிரச்சினை தீரும் என்பதுதான் என்னுடைய யோசனை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து இந்தச் சட்டமுன்வடிவின்மீது எனது கருத்துகளை பதிய வைக்க விரும்புகிறேன். அரசு ஊழியர்களின் strike-கினால் எந்த அளவிற்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், சகோதரிகள் எல்லாம் பிரசவ வேதனை என்று மருத்துவமனைக்குச் செல்கின்றபோது, அங்கே மருத்துவமனையிலே ஊழியர்கள் strike என்றால், அந்த பிரசவத்திற்காகச் சென்ற தாயின் நிலை என்ன? அந்தத் தாயின் வயிற்றிலே இருக்கின்ற சேயின் நிலை என்ன? அந்தத் தாய்க்கும் சேய்க்கும் உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய மருத்துவர்கள், மருத்துவமனையிலே போராட்டத்திலே ஈடுபட்டால், அவர் நிலை எப்படி இருக்கும்? அதன் பாதிப்பு எப்படி இருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.





பிற்பகல் 1-05

அதேபோல பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள் மாணவர்கள். இப்போது plus 2 படிக்கிற மாணவர்கள் எல்லாம் அந்தத் தேர்வு எழுத வேண்டிய கட்டத்தில், ஆசிரியர்கள் strike என்கின்ற காரணத்தாலே பல நாட்கள் பள்ளிகள் மூடிக் கிடந்தால் அவர்கள் படிப்பு பாதிக்கப்பட்டு குறைவான மதிப்பெண்களைப் பெறுகின்றபோது அவர்கள் Engineer-களாக, Doctor-களாக, I.A.S.-அதிகாரிகளாக வரவேண்டுமென்று கனவு கண்டு படித்துக் கொண்டிருந்த அந்த மாணவர்களுடைய எதிர்கால வாழ்க்கை எங்கே செல்லும் என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏற்றுமதித் தொழில் செய்கின்ற, உள்நாட்டிலே வணிகம் செய்கின்ற அந்தத் தொழில் அதிபர்கள் எல்லாம், தங்கள் சரக்குகளை எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அனுப்பி, தனது முதலீட்டிற்கு வட்டியும் சேர்த்து, அசலையும் சேர்த்து ஒரு இலாபத்தை அடைய வேண்டும் என்பதற்காக தொழில் முனைகின்றவர்கள் எல்லாம், strike என்று ஏற்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய இழப்பு யாருக்கு என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக strike-ஆல் இப்படி எண்ணற்ற பாதிப்புகள ஏற்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்துகளை இந்த மன்றத்திலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற, உழைத்துக் கொண்டிருக்கிற அரசு ஊழியர்களைக் காட்டிலும், இன்றைக்கு வாழ்க்கையிலே வசதி வாய்ப்புகளிலே குறைந்தவர்கள் பலகோடி பேர் இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரியிலே பேராசிரியர் ஒருவர் பணியாற்றுகிறார். அங்கே திடீரென்று leave vacancy-யாகவோ அல்லது பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் மூலமாகவோ தற்காலிகமாக அங்கே பேராசிரியராக ஒருவர் நியமிக்கப்படுகிறார். அங்கே ஏற்கெனவே பணியாற்றுகிற பேராசிரியருக்கு 15 ஆயிரம் ரூபாய் சம்பளம்; P.T.A. மூலமாக நியமிக்கப்படுகிற பேராசிரியருக்கு, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றுகிற பேராசிரியருக்கு 3,500 ரூபாய் சம்பளம். நான் எதற்கு பேராசிரியருக்கு 15 ஆயிரம் ரூபாய் என்று கேட்கவில்லை. 3,500 ரூபாய் பெற்றுக்கொண்டு அந்தக் கல்லூரியிலே பணியாற்றுகிறாரே அந்தப் பேராசிரியரை நினைத்துப் பார்க்கிறேன்.

இன்றைக்கு, M.A., M.Sc., M.B.A. படித்துவிட்டு எங்கள் ஊரிலே பனியன் கம்பெனியிலே ரூ.2,000 சம்பளத்திற்கும், ரூ.2,500 சம்பளத்திற்கும் வேலைக்காக தமிழகத்தினுடைய பல மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிந்து கொண்டிருக்கிறார்களே அந்தப் படித்த பட்டதாரிகளினுடைய நிலையை எண்ணிப்பார்க்கிறேன். இன்றைக்கு அரசு ஊழியர்களாக அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஒட்டுமொத்த ஜனத்தொகையில் 2 சதவிகித மக்களுக்கே அரசு ஊழியர்களாக பணியாற்றுகின்ற வாய்ப்பு கிடைக்கின்றது. மீதியிருக்கிற 98 சதவிகித மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை நினைத்துப் பார்க்க வேண்டுமென்று, இந்த மன்றத்திலே எதிர் அணியிலே அமர்ந்து கொண்டிருக்கிற உறுப்பினர்களை நெஞ்சைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது அரசு ஊழியர்களாக பணியாற்றுகிறவர்களை நான் குற்றம் சுமத்தவில்லை. வாரத்திலே 7 நாட்கள்; சனி, ஞாயிறு leave வருடத்திற்கு 52 வாரங்கள்; வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை. 101 நாட்கள் சனி, ஞாயிறிலே போச்சு. மீதி அரசு விடுமுறை. Medical leave, C.L. என்று ஒட்டுமொத்தமாக கணக்குப் போட்டுப் பார்க்கிறபோது இவர்கள் ஒரு மாதத்திற்கு 150 மணி நேரம் பணியாற்றுகிறார்கள். டீ



கடையிலே ஒருவர் காலையிலே 4 மணிக்கு எழுந்திருந்தால், இரவு 12 மணி வரைக்கும் பணியாற்றுகிறார். 16 மணி நேரம், மாதத்திலே 25 நாட்கள் என்றால், 300 மணி நேரம் வேலை செய்கிறார். 300 மணி நேரம் வேலை செய்கின்ற தொழிலாளிக்கு 1500 ரூபாய் சம்பளம். 150 மணிநேரம் வேலை செய்கின்றவருக்கு ரூ.10,000/-க்கும் மேற்பட்ட சம்பளம். அவர்கள் அதிக சம்பளம் வாங்குகிறார்கள் என்று நான் பொறாமைப்படவில்லை. குறைவான சம்பளத்திற்காக கஷ்டப்படுகிறார்களே என்று கீழே இருக்கிறவர்களுடைய கருத்தை இங்கே நான் நினைவுகூற விரும்புகிறேன்.

இப்போது இலட்சக்கணக்கானவர்கள் படித்துவிட்டு, பல்வேறு மேல்நிலைப் படிப்புகளையெல்லாம், பட்டப் படிப்புகளையெல்லாம் படித்துவிட்டு தனக்கு அரசு உத்தியோகம் கிடைக்குமா, கிடைக்காதா என்று எண்ணக் கனவுகளிலே ஏங்கிக் கொண்டிருக்கிறார்களே அந்தப் படித்த பட்டதாரிகளுடைய வேலையற்ற நிலையை எண்ணி, இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாங்கள்கூட போன வாரம் ஒரு function-க்குப் போய் இருந்தோம். ஒரு கல்யாண வீட்டிலே ஒரு பெரியவர் சொன்னார். என்னப்பா இது, நானும் திருப்பூரிலிருந்து கோயம்புத்தூருக்கு bus-ல் செல்கிறேன். எனக்கும் 15 ரூபாய் ticket, என்கூட வருகிறாரே ஓர் அரசு ஊழியர் அவருக்கும் 15 ரூபாய் ticket. நான் தோட்டத்து வேலைக்குப் போனால் 30 ரூபாய் கூலி. 30 ரூபாய் கூலி வாங்குகிற நான் Bus Conductor-இடம் சென்று 5 ரூபாய் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால், என்னைக் கொண்டுபோய் கோயம்புத்தூரில் விடுவாரா? அவர் கேட்கிறார்.

பிற்பகல் 1-10

பக்கத்திலே இருக்கிற டீ கடைக்குப் போகிறார்கள். ஒரு டீ வேண்டும் என்று கேட்கிறார்கள். அரசு ஊழியர் போய் டீ குடித்தால் ஐந்து ரூபாய்தான். பனியன் கம்பெனியிலே இருக்கிற தொழிலாளி போய் 50 காசு குறைத்துக்கொடுத்தால் டீ கொடுப்பார்களா? கொடுக்க மாட்டார்கள். அவர்களுக்கும் அந்த டீ ஐந்து ரூபாய்தான். ஏன் சினிமா கொட்டகையில் ஒரு ticket வாங்கப் போனால் பத்து ரூபாய் ஒரு ticket. அரசு ஊழியருக்கும் பத்து ரூபாய். ஏன் நம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் சென்றாலும்கூட பத்து ரூபாய். சாதாரணமாக காலனியில் இருக்கிற ஒருவர் 30 ரூபாய் சம்பளம்தான் என்று சொல்லி 3 ரூபாய்

கொடுத்தால் ticket கொடுப்பார்களா? கொடுக்கமாட்டார்கள். குடிக்கிற டீயிலிருந்து, போகிற Bus சட்டணத்திலிருந்து, அரிசி, துணிமணி என மனிதனுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எந்தப் பொருளைக் கொள்முதல் செய்வதாக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே rate தான். அதிலே ஏதாவது குறைத்துக் கொடுத்துவிடுகிறார்களா நாட்டிலே. ஆக ஓர் உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய, உயர்ந்த நிலையிலே இன்றைக்கு நல்ல வசதியாக இருக்கக்கூடியவர்களைவிட அந்த வசதி வாய்ப்பு இல்லாத 98 சதவிகித மக்களின் நிலையை கவனத்திலே கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம், அடுத்து வரக்கூடிய தேர்தலுக்காக ஆசிரியர்கள் ஓட்டுப் போடமாட்டார்களா, அரசு ஊழியர்கள் ஓட்டு போடமாட்டார்களா என்பதற்காக, இவர்கள் போராட்டத்திற்கு அவர்கள் support பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். ஐயோ பாவம், அரசு ஊழியர்கள் அல்லாமல் 6½ கோடி ஜனங்களில் 98 சதவிகிதம் கிட்டத்தட்ட 6 கோடிக்கு மேற்பட்ட ஜனங்கள் இருக்கிறார்களே, அவர்களைப் பற்றி சிந்திக்க இவர்களுக்கு நேரமே இல்லை.

இப்போது நாட்டிலே என்ன சொல்கிறார்கள் என்றால், எந்த ஊருக்குப் போனாலும் பொதுமக்கள் சொல்லுகின்ற கருத்துகள் எல்லாம், என்ன தெரியுமா? எதிர்க்கட்சிகள் எல்லாம் எங்களை எல்லாம் மறந்துவிட்டார்கள், அடுத்த தேர்தலில் அரசு ஊழியர்கள் ஓட்டுப் போடுவார்கள் என்று சொல்லி அவர்களுக்குத்தான் வக்காலத்து வாங்குகிறார்கள, எங்களையெல்லாம் விட்டுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அடுத்த தலைமுஜறயைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). ஆகவே தமிழகத்தை ஆளுகின்ற தகுதி மட்டுமல்ல, எதிர்காலத்திலே இந்தியாவை ஆளுகின்ற தகுதி படைத்தவர் புரட்சித் தலைவி என்று, நாங்கள் மட்டும் அல்ல, இந்த நாடு போற்றுகின்றது, நாட்டில் உள்ள மக்கள் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய உச்ச நீதிமன்றம், அரசு ஊழியர்களுடைய போராட்டத்தினுடைய நிலைப்பாடுகளைப் பற்றிப் பேசுகின்றபோது இந்த அரசாங்கத்தைப் பாராட்டியிருக்கிறது. இந்த அரசாங்கத்தின் செயல்பாட்டைப்



பாராட்டியிருக்கிறது. எனவே இந்தச் சட்டமுன்வடிவு என்பது, உண்மையிலேயே உரிய காலகட்டத்தில் கொண்டுவரப்படவேண்டிய ஒரு திருத்தம். எதிர்காலத்திலே தமிழகத்திற்கு மட்டுமல்ல, எதிர்கால இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாக இருக்கக்கூடிய ஓர் அருமையான சட்டமுன்வடிவை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டமுன்வடிவை, மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பேணி வருதல் சட்டத்திற்கு ஜூலை மாதம் 4 ஆம் தேதி திருத்தமாக ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தினுடைய Section 1 பிரிவு 2, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டு இருப்பதாக கொள்ளப்படுகிறது என்று சொல்கிறது. ஆக முன்தேதியிட்டு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்கி ஒரு குறிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது சட்டத் துறைச் செயலாளர் பெயரில். ஏனென்றால் ஆளுநர் ஒரு குறிப்பு கொடுக்க முடியாது. அந்தச் சட்டத்திலே சேராத ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் சட்டப் பிரிவு 3-ன்கீழ் ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்ட பிறகும், அதிலே பகிரங்கமாக மீறும் வகையில், செயல்படும் ஊழியர்களுக்கு எதிராக, உறுதியான நடவடிக்கை எடுப்பதற்குத் தெளிவாக எதுவும் 2002 ஆம் ஆண்டு சட்டத்தில் கோரப்படவில்லை என்றும், பிரிவு 4-ன்கீழ் வழக்கு போடுவதைத் தவிர இத்தகைய அத்துமீறிய நபர்களுக்கு defiant persons எதிராக அவருடைய பணி நிலை பாதிக்கும் வகையில் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை இல்லாததாலும், இந்தத் திருத்தச் சட்டம் தேவைப்படுகிறது என்று கோரப்பட்டு இருக்கிறது.

ஏற்கெனவே உள்ள சட்டத்தில் உள்ள ஏழாவது செக்ஷனை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஒழுங்குமுறை நடவடிக்கை என்கிற தலைப்பில் கீழ்க்காணும் பிரிவு கொண்டு வரப்படுகிறது:

Section 2 in the Ordinance-ஒழுங்கு நடவடிக்கை என்கிற தலைப்பில் பணி விதிகளில் எப்படி குறிப்பிடப்பட்டு இருந்தாலும், அதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அத்தியாவசியப் பணி என்று

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 நவம்பர் 7

அறிவிக்கப்பட்டு பணியில் இருப்பவர் எவரும் பணிக்கு வராமல் இருக்கக்கூடாது; எப்போதும்போல் பணிக்கு வந்து தன்னுடைய நியமன அதிகாரியிடம், அலுவலகத்திற்கு வந்திருப்பது பற்றித் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காவிட்டால் தவறான நடத்தையில், misconduct-ல், ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டுவிட்டார் என்றே எடுத்துக்கொள்ளப்படும். அதன்படி அவர் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டார் என்று முடிவு கட்டி, பணி நீக்கம் செய்ய, பணி நீக்கம், பணி முறிவு கொடுக்கவோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு என்றும் கூறுகிறது. அவ்வாறு பணி நீக்கம் செய்வதற்கு முன்னர் விசாரணை நடத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதும் தெளிவு செய்யப்பட்டிருக்கிறது. பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகள் குறித்தும் தனித்தனியாக கடிதங்களை அனுப்ப வேண்டிய அவசியமும் இல்லை. அதற்குப் பதிலாக, பணியாற்றும் அலுவலகத்தில், அறிவிபபுப் பலகையில் ஒட்டிவிட்டாலே போதுமானது என்றும் இந்த அவசரச் சட்டம் கூறுகிறது.

*பிற்பகல் 1-15*

அரசுப் பணியாளர் நடத்தை விதிகள் காலத்தில் முந்தியவை. ஆங்கிலேயர் ஆட்சியிலே கொண்டுவரப்பட்டவை. ஆனால் நாட்டு விடுதலைக்குப் பிறகு புதிய அரசமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26-ல் அமலுக்கு வந்து விடுகிறது. அதுதான் நமக்கு அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. அரசு ஊழியர் குறித்த பிரிவு 311. இந்த 311, இன்னும் பல Articles இதிலே வருகின்றன. உதாரணமாக Art. 20(1), 254, 255 and 11 போன்றவை அதிலே இடம் பெற்றிருக்கின்றன. இவை எதையுமே கருத்திலே கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. அரசமைப்புச் சட்டத்தோடு பொருந்தி வராத எந்தச் சட்டமும், விதிமுறைகளும் செல்லத்தக்கவையல்ல. திருத்தச் சட்டத்தில் நடத்தை விதிமுறைகளைப்பற்றித்தான் Notwithstanding anything contained in the Government Services Conduct Rules என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அரசமைப்புச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. எனவே இந்த அரசமைப்புச் சட்ட விதிகளின் பெரும்பாலான விதிகளுக்கு இந்த அவசரச் சட்டம் முரணாகவும், எதிர்மறையாகவும் இருக்கிறது.

உதாரணமாக Art. 311(2). 'ஆட்சேபனைக்குரிய முறையில் நடத்தை இருந்தாலும்கூட அவரைப் பணி நீக்கம் செய்ய முடியாது. செய்ய வேண்டுமென்று சொன்னால் அவருக்கு விசாரணை இருக்கவேண்டும், சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்' என்று Article 311(2) தெளிவாகச் சொல்கிறது. அதேபோல வழங்கப்படுகிற தண்டனையை நம் இஷ்டத்திற்குக் கொடுக்க முடியாது.



2003 நவம்பர் 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

It must be proportionate to the gravity of misconduct or offence. அவருடைய செயல் எந்த அளவுக்குத் தவறான நடத்தையோ அல்லது எந்த அளவுக்கு குற்றம் என்று கருதப்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் தண்டனை கொடுக்க முடியுமே தவிர, அதற்கு அதிகமாகக் கொடுக்க முடியாது. இதை எப்படிச செய்ய முடியும்? விசாரணை நடந்தால், விசாரணையில் கொடுக்கப்படுகிற சாட்சியங்களைக் கொண்டு அந்த Enquiry Committee, அதை முடிவு செய்ய முடியுமே தவிர, மற்றபடி முடிவு செய்ய முடியாது. ஆனால் விசாரணை இல்லாமல் பணி நீக்கமே செய்ய முடியாதா என்று கேட்கலாம். நியாயமான கேள்வி. அதற்கும் Art. 311-ல் இடம் இருக்கிறது. என்ன இடம் என்று சொன்னால், ஓர் அரசு ஊழியருடைய செய்கை, நடத்தை, அதன் மூலமாக அவருக்கு Court தண்டனை வழங்குமானால் அவரைப் பணி நீக்கம் செய்யலாம்; தவறில்லை. அதேபோல அவருடைய நியமன அதிகாரி இந்த வழக்கில் சாதாரணமாகப் பின்பற்றப்படுகிற நடைமுறைகளைப் பின்பற்றுவது சாத்தியமில்லை, எனவே அவரைப் பணி நீக்கம் செய்கிறேன் என்று அவர் சொன்னால் செய்யலாம். சொல்லவில்லை. ஆனால் எழுத்து வடிவில் அதற்கான காரணத்தை அவர் பதிவு செய்து, அப்புறம்தான் அவரைப் பணி நீக்கம் செய்ய முடியுமே தவிர, எழுத்து வடிவில் அல்லாமல் அவரைப் பணி நீக்கம் செய்ய முடியாது.

*(3)* When the security of the State is involved. நாட்டினுடைய, மாநிலத்தினுடைய பாதுகாப்புப் பிரச்சினை வருகின்ற நேரத்தில் நிச்சயமாக அவரைப் பணி நீக்கம் செய்யலாம். Then the concerned Govt. employee need not be given the benefit of Art. 311(2) என்று 311(2)-311-லேயே இருக்கிறது. Secret document ஏதாவது இருந்தால், அந்த மாதிரி விஷயங்கள் ஏதாவது இருந்தால் தவிர, மற்றபடி செய்ய முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பொறுத்தவரையில் இந்த மூன்றும் இங்கே பொருந்தாது. இது ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவாக இருக்கிறதே தவிர, இந்த முடிவிற்கு என்ன நியாயம் கற்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தவே இல்லை. தெளிவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சட்ட விரோத வேலைநிறுத்தம்

என்றால் பணி நீக்கம் செய்யலாம் என்று சொல்லிவிட்டீர்கள். ஆனால் அதற்காகவே பணி நீக்கம் செய்ய, அரசமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைகளுக்கு உட்பட்டுத்தான் செய்ய முடியுமே தவிர, நீங்களாகச் செய்ய முடியாது. Art.311(2)-க்கு நேரடியாக மாநில அரசு ஊழியராக இருந்தாலும் சரி, மத்திய அரசு ஊழியராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு Art.311-தான் பொருந்தும். அந்த Art.311-ன்படி நிச்சயமாக நீங்கள் விசாரணை நடத்தித்தான்—pre-decisional hearing, நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக விசாரணை நடத்த வேண்டும்—விசாரணையின்போது தரப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில்தான் தண்டனை வழங்கப்பட வேண்டுமே தவிர, நாமாகவே ஒரு தண்டனையை நிர்ணயம் செய்ய முடியாது. Right to pre-decisional hearing. செய்த தவறுக்குத் தகுந்த தண்டனை இவையெல்லாம் அதிலே தெளிவாக இருக்கிறது. இந்த உரிமைகளை மறுக்க முடியாது.

இன்னும் சொல்லப்போனால், இதிலே தண்டனையை திடீரென்று அதிகரிக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. அவர் ஒரு செயலில் ஈடுபட்டார் என்றால் அந்தச் செயல்புரிந்த நாள், அது தண்டனைக்குரியது இல்லை என்று சொன்னால், நாம் திடீரென்று தண்டிக்க முடியாது. உதாரணமாக Art.20 Clause (1)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விவரம் என்று மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒன்றும் இல்லை. ஒரே ஒரு விஷயம். Article-ஐ மட்டும்தான் படிக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை.

*பிற்பகல் 1-20*

"No person shall be convicted of any offence except for violation of the law in force at the time of the commission of the act charged as an offence, nor be subjected to a penalty greater than that which might have been inflicted under the law in force at the time of the commission of the offence." அவர் செயல் புரிந்த நாள் குற்றமாகக் கருதப்பட்டிருந்தால் ஒழிய, சட்டப்படி குற்றமாக இருந்தாலொழிய, புதிய சட்டத்தின் மூலமாக அதைக் குற்றம் என்று சொல்லி,—ஏனென்றால் ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதி பின்தேதியிட்டு அறிவிக்கிறீர்கள்.—இதைச் செய்யவே கூடாது என்று மிகத் தெளிவாக prohibition against retrospective criminal law என்று மிகத் தெளிவாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது.



A Sovereign Legislature has a power to enact prospective as well as retrospective laws. But the present Article sets two limitations for the law making power of every Legislative Authority in India as regards criminal legislation. It prohibits making of Ex-post-facto criminal law that is making an act a crime for the first time and then making the law retrospective. The infliction of a penalty greater than that which might have been inflicted under the law which was in force, when the act was committed. The Prohibition of the clause is not merely against the passing of such retrospective law, but also against conviction under such law. அதாவது அந்த காலகட்டத்தில் அதற்கு என்ன தண்டனை வழங்கப்படலாம் என்று சட்டத்தில் இருக்கிறதோ அந்தத் தண்டனைதான் வழங்க முடியுமே தவிர, புதிதாக எந்தத் தண்டனையும், அதிகமான தண்டனையும் வழங்க முடியாது என்று மிகத் தெளிவாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோல, Article-ஐக்கூட நான் படிக்கவில்லை. நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த அத்தியாவசியப் பணிகள் குறித்த சட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே மத்திய அரசு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. நீண்ட நாட்களுக்கு முன்பு அந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. அமலில் இருக்கிற சட்டத்திற்கு எதிராக நாம் சட்டம் கொண்டுவர முடியுமா என்றால், கொண்டுவரலாம். எப்போது கொண்டு வரலாம்? இதிலே எதிர்மறையாக ஒன்றும் இருக்க முடியாது. இதற்கு எதிர்மறையாக எதுவும் இல்லாமல் ஒரு சட்டம் கொண்டு வரலாம். அதுமட்டுமல்ல. அதுபோன்ற ஒரு Concurrent field-ல் இருக்கிற விஷயங்களில் ஒரு சட்டம் கொண்டு வந்தால் ஜனாதிபதியினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும். ஜனாதிபதியினுடைய ஒப்புதலைப் பெற்றால்தான் அது சட்டமாக மாறும். இல்லையென்றால் சட்டமாக ஆகாது. உதாரணமாக இங்கே இந்தச் சட்டம் தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பேணிவருதல் சட்டம் சென்ற ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதியன்று நிறைவேற்றினோம். அந்தச் சட்டத்திற்கு சென்ற ஆண்டு 24-9-2002 அன்று ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இப்போது கூறியது உண்மைதான். The Essential Services Maintenance Bill-க்கு ஜனாதிபதியினுடைய அனுமதி பெறப்பட்டது.

ஆனால் இந்த Ordinance-க்கு பெறப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று விளக்க விரும்புகிறேன். Tamil Nadu Essential Services Maintenance Bill என்பது, தமிழ்நாடு சட்டமன்றத்தில், 10-5-2002 அன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஜனாதிபதி 24 செப்டம்பர் 2002 அன்று அனுமதி வழங்கினார். இந்தச் சட்டம் Tamil Nadu Act 36 of 2002 என்று தமிழ்நாடு அரசு Gazette-ல் 1 அக்டோபர் 2002 அன்று வெளியிடப்பட்டது. இதற்கு ஜனாதிபதியின் அனுமதி ஏன் பெறப்பட்டது என்றால் இந்தச் சட்டத்தில் clause 8 என்பது Industrial Disputes Act, 1947 என்னும் சட்டத்திற்கு முரணானது; எதிரானது என்று ஒரு கருத்து நிலவியதால் ஜனாதிபதியின் அனுமதி தேவைப்பட்டது. ஆகவே ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்ற பிறகு இது தமிழக அரசு Gazette-ல் வெளியிடப்பட்டது. ஆனால் இந்த Ordinance-ஐப் பொறுத்தவரை 4-7-2003 அன்று Tamil Nadu Essential Services Maintenance Act 2002-ஐ amend செய்து, ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டம் என்னும் Ordinance வெறும் அரசு ஊழியர்களை மட்டுமே பொறுத்தது. இதர துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதால் சட்ட நிபுணர்களின் கருத்தைப் பெற்று, Advocate-General, Law Department இவர்களின் கருத்தையும் பெற்று இதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவையில்லை என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்ததால் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

*பிற்பகல் 1-25*

**திரு. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலச் சட்டத்திற்கு ஜனாதிபதியிடம் அனுமதி பெறப்பட்டது என்று முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எந்த மூலச் சட்டத்திற்கு ஜனாதிபதியின் அனுமதி பெற்றீர்களோ, அதே மூலச் சட்டத்தைத் திருத்துகின்ற நேரத்தில் ஜனாதிபதியினுடைய அங்கீகாரம் பெற வேண்டும் என்பதுதான் 254. அந்த 254 மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது:

"If any provision of a law made by the Legislature of a State is repugnant to any provision of a law made by Parliament which Parliament is competent to enact, or to any provision of an existing law with respect to one of the matters enumerated in the Concurrent List, then, subject to the provisions of clause (2) the law made by Parliament, whether passed before or after the law made by



the Legislature of such State, or as the case may be, the existing law, shall prevail and the law made by the Legislature of the State shall, to the extent of the repugnancy, be void.

Where a law made by the Legislature of a State with respect to one of the matters enumerated in the Concurrent List contains any provision repugnant to the provisions of an earlier law made by Parliament or an existing law with respect to that matter, then, the law so made by the Legislature of such State shall, if it has been reserved for the consideration of the President and has received his assent, prevail in that State.

Provided that nothing in this clause shall prevent Parliament from....

அது வேறு. அது சம்பந்தம் இல்லை. அப்படி வாங்கவில்லை என்றால்கூட, அதே அரசியல் சட்டத்திலே பிற்பகுதியிலே சொல்லியிருக்கிறது. 255-லே என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் Subsequent-ஆக நீங்கள் வாங்கலாம். No act of Parliament or of the Legislature of a State and no provision in any such Act, shall be invalid by reason only that some recommendation of previous sanction required by this Constitution was not given, if assent to that Act was given—

(a) where the recommendation required was that of the Governor, either by the Governor or by the President;

(b) where the recommendation required was that of the Rajpramukh, either by the Rajpramukh or by the President;

(c) where the recommendation of previous sanction required was that of the President, by the President; முன்பு வாங்கியிருந்தால்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேலும் விளக்கம் கூற விரும்புகிறேன். Original-ஆக 2002-ல் கொண்டு வந்த இந்தச் சட்டத்திற்கே strictly speaking சட்ட நிபுணர்களின் கருத்துப்படி ஜனாதிபதியின் அங்கீகாரம் அதற்கே தேவையில்லை என்பதுதான் சட்ட நிபுணர்களின் கருத்து. ஆனால் அன்றையதினம் ஒரு கருத்து நிலவியது.

This Act which has an over-riding effect over other laws may be considered repugnant to the provisions of the Industrial Disputes Act, 1947. ஆகவே ஒரு

சாரார் இது ஒருகால் Industrial Disputes Act, 1947 என்னும் Act-ன் ஷரத்துகளுக்கு முரணானதாக இருக்கலாம் என்று சிலர் கருதியதால், இது ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது. Strictly speaking ஜனாதிபதிக்கு அந்தச் சட்டத்தையே அனுப்பியிருக்க வேண்டியதில்லை. ஆனால் அனுப்பிவிட்டார்கள். ஜனாதிபதியும் அங்கீகாரத்தைக் கொடுத்துவிட்டார். ஆனால் இந்த Ordinance, அவசரச் சட்டத்தைப் பொறுத்தவரை, இதர பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை.

Industrial Disputes Act-க்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. இது வெறும் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட Ordinance ஆகும். ஆகவே Advocate-General, நம்முடைய Law Department இன்னும் வேறு சட்ட நிபுணர்களின், Experts-ன், Legal Experts-ன் கருத்துகளை அறிந்து, இதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்ததால்தான், அவர்கள் அறிவுறுத்தியதால்தான் ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்கிறேன்.

மேலும் சில தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் இந்த Tamil Nadu Essential Services Maintenance Act, 2002 என்ற சட்டத்தையும், 4-7-2003 அன்று வெளியிடப்பட்ட அந்த அவசரச் சட்டத்தையும்—Ordinance-ஐயும், challenge செய்து Court-க்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் The High Court and the Supreme Court have not questioned the validity of the Act and the Ordinance; on the contrary the Supreme Court has lauded the action of the State Government. உயர் நீதிமன்றமும் சரி, உச்ச நீதிமன்றமும் சரி, இந்தச் சட்டத்தையும் இந்த அவசரச் சட்டத்தையும் செல்லுபடியாகாது என்று சொல்லவில்லை. மாறாக, உச்ச நீதிமன்றம் தமிழக அரசு எடுத்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவருடைய மொழியிலே சொல்லப் போனால், சற்றுமுன் வந்த செய்தி.

"LAW

SUPREME COURT strikes—Apex Court agrees to reconsider its orders for banning strike. (Thumping of desks)—New Delhi, November 7, Supreme Court today agrees to reconsider its earlier decision banning strikes by Government employees."



Intervening in a petition filed by Trade Union Activist Potlur Nageswara Rao, Attorney-General Soli Sorabjee contended that there could not be a blanket ban on strikes. ஆகவே மத்திய அரசாங்கமும் அதை முடியாது என்று சொல்கிறது. உச்ச நீதிமன்றமும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் ஒன்றை வாசிக்கும்போது அதைச் சரியாக மொழிபெயர்த்துச் சொல்லவேண்டும். 'Supreme Court has only agreed to reconsider'. மறுபரிசீலனை செய்யத்தான் உச்ச நீதிமன்றம் ஒப்புக்கொண்டிருக்கிறதே தவிர, இன்னும் தீர்ப்பு வழங்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த வழக்கிலே கூட அவர்கள் இறுதியான தீர்ப்பு வழங்கவில்லை. It is just an expression of opinion; it is not even obiter dicta; it is not even obiter dicta.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த வழக்கிலே அவர்கள் வழங்கிய தீர்ப்பு obiter dicta கூட அல்ல. அது வெறும் expression of opinion. அது எந்த அளவிற்கு எடுபடும், எந்த அளவிற்கு நியாயம், எந்த அளவிற்கு முறை என்றால் சோலி சொராப்ஜியே சொல்கிறார். blanket ban இருக்க முடியாது என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்தச் சட்டத் துறை விளக்கத்தை ஒரு வரியிலே சொல்லிவிட்டு, உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டு, அமர்ந்தால் பரவாயில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் வேறு எதையும் சொல்லவில்லை. தனியார் அங்கே போனார், இங்கே போனார் என்றா சொன்னேன்? அதையே நான் பேசவில்லையே.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்களும்,

மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும் பேசுகிற போது திரும்பத் திரும்ப சோலி சொராப்ஜியே சொல்லி இருக்கிறார், சோலி சொராப்ஜியே சொல்லி இருக்கிறார் என்கிறார்கள். சோலி சொராப்ஜி என்னென்ன சொல்லி இருக்கிறார்? முதலில் வைகோ பேசியது POTA சட்டத்தின்படி குற்றமாகும் என்று Supreme Court-க்குத் தெரிவித்தார். அதன் பிறகு மத்திய அரசு அவருக்குக் கண்டனம் தெரிவித்த பிறகு இல்லை, இல்லை, அவர், வைகோ பேசியதில் எந்தக் குற்றமும் இல்லை என்று சொன்னவர்தான் இந்த சோலி சொராப்ஜி. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சோலி சொராப்ஜி அன்று சொன்னதை மட்டும் சொல்லவில்லை. இது இன்று சொன்னது. இன்று 7ஆம் தேதி சொன்னது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவர்தான் சோலி சொராப்ஜி என்பதை இந்த நாடே அறியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோலி சொராப்ஜி ஒரு வழக்குரைஞர்தான். அவர் நீதிபதி அல்ல. நீதிமன்றம் கூறவில்லை. யாரோ ஒரு வக்கீல் சொன்னார். உங்களுடைய வக்கீலாக உங்கள் குரலைச் சொல்லியிருக்கிறார். அவ்வளவு தானே ஒழிய நீதிமன்றம் ஒரு தீர்ப்பும் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்றைய பிரச்சினைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அவைக்கு முன்னால் இருக்கிற பிரச்சினை என்ன? ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தோம். ஓர் Ordinance-ஐக் கொண்டு வந்தோம். அதைச் சட்டமாக்க வேண்டும். அதுதான் இன்றைக்கு உள்ள பிரச்சினை. Supreme Court-ல் ஏதோ சொன்னார்கள். மறுபரிசீலனை செய்கிறோம் என்று சொன்னார்கள், என்றெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில், வருங்காலத்தில் Supreme Court என்ன சொல்லப் போகிறது என்பதுபற்றி நமக்கு இப்போது தெரியாது. அதைப்பற்றி நாம் இப்போது விவாதிக்கவும் முடியாது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிதர்சன உண்மை என்ன? தமிழக அரசு கொண்டு வந்த TESMA சட்டத்தையும், Ordinance-ஐயும் Supreme Court—தடைசெய்யவில்லை என்பதுதான் நிதர்சன உண்மை.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இருங்கள், இருங்கள்; இதோ முடித்துவிடுகிறேன். ஒன்றுபட்டு கோரிக்கை வைக்கும் உரிமையை நம்முடைய நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. Collective bargaining தொழில் தகராறு சட்டம், முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள அல்லவா, அதை அந்த அடிப்படையில்தான் நிறைவேற்றியிருக்கிறோம். சர்வதேச தொழிலாளர் அமைப்பு I.L.O.-வின் பரிந்துரைப்படி அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், International Labour Organisation- சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு நாம் பிரதிநிதிகளை அனுப்புகிறோம். அரசின் சார்பிலே அனுப்புகிறார்கள். தொழில் முனைவோர் சார்பிலே அனுப்புகிறார்கள். தொழிற் சங்கங்கள் சார்பிலேயும் அனுப்புகிறார்கள். அவர்கள் எல்லாம் கூடி ஒரு பரிந்துரையைச் செய்கிறார்கள். அந்தப் பரிந்துரையை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. அதை எதிர்த்துப் போக முடியாது. ஆகவே Collective bargaining fails என்று சொன்னால், பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமே தவிர உடனடியாக அது சட்டவிரோதமான வேலைநிறுத்தம், எனவே நான் உங்களை எல்லாம் வேலையை விட்டு நீக்குகிறேன் என்று சொல்வது எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கும் என்பதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் Article 311-க்கு எதிரானது; Article 311(2)-க்கு எதிரானது. அதற்கு எதிராக நாம் சட்டம் போட முடியாது. Article 311(2)-You must give an opportunity to every employee to explain his conduct. நீங்களாகவே முடிவு செய்துகொள்ள முடியாது. அது Article 311 (2). அதேபோல தண்டனை. எந்தத் தண்டனை வழங்குவதாக இருந்தாலும் விசாரணையில் எந்த அளவுக்கு அவர்மீது நிரூபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் குற்றத்தின் தன்மை அல்லது செயலின் தன்மை எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் தண்டனை வழங்க முடியுமே தவிர, அதற்கு மேலே வழங்க முடியாது.

அதேபோல முன்தேதியிட்டு பின் தேதியில் அவசரச் சட்டம் கொண்டு வந்து அன்று குற்றமில்லாத ஒன்றை இன்று குற்றம் எனச் சொல்கிறேன் என்று சொன்னால் அதுவும் எடுபடாது. Article 20, Clause (1).

அதேபோல Article 254, 255, Article 254-ன் கீழே நீங்கள் ஜனாதிபதி இடத்திலே இந்த மூலச் சட்டத்திற்கு அனுமதி பெற்றிருக்கிறீர்கள். எனவே அதுவும் concurrent list-தான். எனவே அதிலேயும் நீங்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும். பெறாவிட்டால் அது அவசரச் சட்டம், சட்டம்தான். ஆனால் அந்தச் சட்டம் செல்லுபடி ஆகக்கூடிய சட்டம் அல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அத்தனைக்கும் மேலாக இது equality before law; சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் விரைவாக முடித்துவிட்டால் பரவாயில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னங்க, நான் ஏதாவது தனிப்பட்ட முறையிலே போனேன், வந்தேன் என்று ஏதாவது பேசினேனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நேரம் என்பது மிகவும் முக்கியம். இன்னும் 10 சட்டமுன்வடிவுகளுக்கு மேலே எடுக்க வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, சரி, இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். உங்களுக்காக, பேரவைத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க உடனடியாக முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டம் Article 20(1), அதில் தண்டனையைப்பற்றித்தான் சொல்லப்படுகிறதே ஒழிய disciplinary action-ஐப்பற்றிச் சொல்லப்படவில்லை.

*பிற்பகல் 1-35*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Article 311(2)- It governs the conduct of Government... Article 20(1) என்ன சொல்கிறது? முன் தேதியிட்டு சில சட்டம் போட்டு conviction கொடுக்க முடியாது. (குறுக்கீடு) இல்லையே! disciplinary action-ஆக இருந்தாலும் நீங்கள் தண்டனைதான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை. தண்டனைதான் கொடுத்திருக்கிறீர்கள். It is nothing but a punishment; it is a punishment. அது கூடாது என்றுதான் சொல்கிறது. ஆனால் தண்டனை கொடுக்க முடியாது என்பதில் எந்தவிதமான சந்தேகமும்



இல்லை. Collective bargaining என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ESMA மத்திய அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது என்றால் அது concurrent list-ல் வருகிறது. அதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆக, இந்தச் சட்டத்தை, அரசியல் சட்டத்தின்படி செல்லுபடியாகாத ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பேன். அரசு ஊழியர்களை பணிநீக்கம் செய்வோம் என்று சொல்வதும், அந்த அரசு ஊழியர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கையை ஆதரித்த காரணத்தினால் மட்டும்—நான்கூட இங்கு ஆதரித்துப் பேசுகிறேன். அது தவறா என்ன? ஆதரிப்பது தவறு அல்ல. ஆதரித்த காரணத்தினாலேயே—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர், காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் ஆகிய இத்தனை பேர்மீது வழக்கு போட்டு, மற்றவர்கள் மீதும் வழக்கு போட்டிருக்கிறீர்கள். அந்த வழக்கு போட்டது நியாயமான வழக்கல்ல. அருள்கூர்ந்து வைக்கப்படுகின்ற கோரிக்கைக்கு யாராவது ஆதரவு தெரிவித்தால் அதன்மீது நடவடிக்கை எடுப்போம் என்கிற நிலையை எந்தக் காரணத்தைக் கொண்டும் உருவாக்காதீர்கள். இங்கே நேரடியாக வந்து நின்று தடுத்து நிறுத்தினால், அது வேண்டுமானால் சொல்லலாம், தூண்டுகிறார் என்று சொல்லலாம். இங்கே, உள்ளே பேசுகிறபோது, போகாதே என்று கையைப் பிடித்து இழுத்தால் தூண்டுகிறார் என்று சொல்லலாம். அவர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள்; அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். நானும் இந்த அவையிலே ஆதரவு தெரிவித்து முன்பும் பேசியிருக்கிறேன். இப்போதும் பேசுகிறேன். அவர்களுடைய கோரிக்கை என்னைப் பொறுத்தவரை நியாயமான கோரிக்கை என்று நான் இன்றும் நம்புகிறேன். ஏனென்றால் வெளியிலே என்ன பேச்சு, அதிகம் சம்பளம் கேட்கிறார்கள். அதிகம் சம்பளம் கேட்கவில்லை. ஒரு காசுகூட எங்களுக்கு அதிகம் தாருங்கள் என்று கேட்கவில்லை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சலுகைகள், ஏற்கெனவே அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த உரிமைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. இது ஏற்கெனவே பேசப்பட்டது. இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்துகளைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடித்துவிடுகிறேன். அதைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. அதேபோல, Pension-ல் fitment formula-வைக்கூட 33 சதவீதமாக உயர் நீதிமன்றம் குறைத்ததற்குக் காரணம் சரி என்பதால் அல்ல. முந்தைய அரசு 40 சதவீதமாக உயர்த்தினார்கள். Fitment formula-ஐ மத்திய சர்க்காரின் ஐந்தாவது சம்பளக் கமிஷன் பரிந்துரையின்படியும், அங்கே நடந்த ஊழியர்களுடைய பேச்சுவார்த்தையின்படியும் 40 சதவீதம் என்று நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அதைத் தமிழக அரசும் அன்றையதினம் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொண்டதில் செய்த ஒரே சிறிய தவறு விதிகளில் திருத்தம் கொண்டு வரவில்லை. அதனாலேயே அடிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் Pension வாங்குகிறவர்கள் எல்லாம் ரொம்ப சிரமமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையையும் பரிவுடன் பரிசீலித்து இந்தச் சட்டத்தை, இந்த அவசரச் சட்டத்தை அவை நிராகரிக்கிறது. கைவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எடுத்துச் சொன்னார். இதில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்த திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த அரசு ஊழியர்கள் போராட்டம் குறித்து என்ன கூறியிருக்கிறார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். போராடுபவர்களுக்கு ஆதரவாக நிற்கும் அரசியல் கட்சிகளைப் பார்த்துப் பேசும் கலாச்சாரம் தமிழகத்தில் உள்ளது. ஆனால், அரசியல் கட்சி நடத்துகிற அரசியல் கட்சிகளுக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அரசு ஊழியர் அலுவலர் ஒன்றியத் தலைவர் சூரியமூர்த்தி பேசுவது வேடிக்கையாக உள்ளது. சூரியமூர்த்தி அவர்கள், அரசு ஊழியர்கள் சங்க, என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் சொல்கிறார், அரசியல்வாதிகளே இதில் தலையிடாதீர்கள் என்று சொல்கிறார். அதற்கு திரு. அல்போன்ஸ் அவர்கள் பேசியிருக்கிறார். 'சலுகைகளைப் பறிப்பது என்பது அடிமடியில் கை வைக்கிற வழிப்பறிக் கொள்ளை. எதிரியோடு தோட்டாக்களைப் பரிமாறிக்கொள்கிற கட்டத்தை நெருங்கிவிட்டோம்' என்றுதான் கூற வேண்டும் என்று எத்தகைய வன்முறைக் கலாச்சாரத்தை உருவாக்க திரு. அல்போன்ஸ் அவர்கள் அரசு ஊழியர்கள் போராட்டத்தைத் தூண்டியிருக்கிறார். அப்பாவி அரசு ஊழியர்கள் பலிகடா ஆவதற்கு இவர் வழிவகுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தற்போது புரிந்து கொண்டால் ஏன் அரசியல் கட்சிகள் இதிலே கண்காணிக்கப்பட வேண்டும், அவர்கள் தூண்டுதல் தடுக்கப்பட வேண்டும் என்பது மக்களுக்குப் புரியும்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உரிமைகளை, சலுகைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைக்கக்கூடாது என்று பேசுவதிலே எந்தத் தவறும் கிடையாது. மீதி வாசகங்கள், அதிலேயிருந்த வாசகங்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுப்பிய இரண்டு பிரச்சினைகளுக்கு நான் பதில் கூற விரும்புகிறேன். ஒன்று பணி நீக்கத்தைப் பற்றிப் பேசினார். பணிநீக்கம், dismissal என்றாலே, ஏதோ அது இறுதியானது என்பதுபோல அவர் பேசினார். ஒன்றை மறந்துவிடுகிறார். இந்தச் சட்டத்திலேயே என்ன கூறப்பட்டிருக்கிறது, ஓர் அரசு ஊழியர் மீது dismissal order வழங்கப்பட்ட பிறகு, அவர் ஒரு வார காலத்திற்குள் appointing authority-ஐ அணுகி அவருடைய மனுவைக் கொடுக்கலாம். Appointing authority அதைப் பரிசீலித்து, அவர் உண்மையாக அந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை என்று திருப்தி அடைந்தால், அவர் கொடுத்த பணி நீக்க உத்தரவை வாபஸ் பெறலாம் அல்லது மாற்றி அமைக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. மேலும் இந்த Appointing authority கொடுக்கின்ற தீர்ப்பில் அரசு ஊழியர்களுக்கு அதிருப்தி இருந்தால் 2 வாரங்களுக்குள் Appellate Authority-க்குச் செல்லலாம். அங்கு மீண்டும் மனு செய்யலாம். Appellate Authority கொடுக்கின்ற தீர்ப்புதான் இறுதியானது என்று இந்தச் சட்டத்திலே இருக்கிறது. ஆகவே பணி நீக்க உத்தரவு வந்தவுடனேயே அது இறுதியானது அல்ல. முறையீடு செய்வதற்கு அரசு ஊழியர்களுக்கு போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

இன்னொன்றைச் சொன்னார். அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஆதரித்து எதிர்க்கட்சிகள் பேசினால் அது குற்றமா என்று எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டார். அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல. அப்படி இந்த அரசும் கருதவில்லை. ஆனால் அதோடு நிறுத்திக்கொண்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அரசு நிருவாகத்தை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக பல அரசியல் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், நீங்கள் போராட்டத்தில் உறுதியாக நில்லுங்கள். நீங்கள் போராட்டத்திலிருந்து வாபஸ் பெறாதீர்கள். நீங்கள் போராட்டத்திலிருந்து வாபஸ் பெறாமல் உறுதியாக அதிலேயே நின்றால் நாங்கள் உங்களுக்கு ஆதரவு தருவோம் என்றெல்லாம் பேசியிருக்கிறார்களே, அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தாலும், நீங்கள் என்ன சொன்னாலும் ஒப்புக்கொள்ளாதீர்கள், தொடர்ந்து போராடுங்கள், போராட்டத்தில் உறுதியாக இருங்கள், அப்படியிருந்தால்தான் நாங்கள் உங்களை ஆதரிப்போம் என்றெல்லாம் பேசினார்களே, இது அரசு ஊழியர்களைத் தூண்டும் செயல் இல்லையா? அரசு நிருவாகத்தை நடைபெறவிடாமல் ஸ்தம்பிக்கச் செய்வதற்காக அரசு ஊழியர்களைத் தூண்டுதல் ஆகாதா? அதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தின்படி அரசு ஊழியர்கள் பணிந்து போக வேண்டும் அல்லது ஒரு சமரசத்திற்கு வர வேண்டும் என்று விரும்பினால்கூட அப்படி அவர்களை அமைதி பெற, திருப்தி பெற விடாமல் தொடர்ந்து போராடுங்கள், போராடுங்கள் என்று அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்பதற்காகவே சில அரசியல் கட்சித் தலைவர்கள் இவர்களைத் தூண்டி இருக்கிறார்கள். அவர்கள் மீதுதான் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்குப் பதிவு செய்ததில் எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆக, பின்னாலே மேல் முறையீடு செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று சொன்னார்கள். பின்னாலே மேல் முறையீடு செய்வது அல்ல. 311(2) தெளிவாகச் சொல்கிறது.

"No such person as aforesaid shall be dismissed or removed or reduced in rank except after an inquiry in which he has been informed of the charges against



him and given a reasonable opportunity of being heard in respect of those charges." ஆக அவர்கள்மீது குற்றச்சாட்டுகள் என்ன என்பதைத் தெளிவாக அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்த குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதில் சொல்லி அதன்படி ஒரு விசாரணை நடைபெற்றால் ஒழிய யாரையும் பணி நீக்கம் செய்யவோ, பணியில் இருந்து குறைக்கவோ முடியாது என்பதை மிகத் தெளிவாக 311(2) தெரிவிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் திருத்தச் சட்டத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும்கூட அவர்கள் நடத்தையிலே அல்லது பணியிலே குந்தகம் இருக்கிறது என்று சொன்னால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நடத்தை விதிமுறைகள் தனியாக இருக்கின்றன. அரசாங்கச் சம்பளம் வாங்ககூடியவர்கள் யாராக இருந்தாலும்கூட அவர்களுடைய நடத்தையிலே அல்லது பணிகளிலே பொதுமக்களுக்கு இடையூறாக அல்லது பணிகள் சரியாகச் செய்வதில்லை என்று சொன்னால், அரசுக்கு எதிரான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதாக கருதுகிற பட்சத்திலே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் தனியாக விதிமுறைகள் இருக்கின்றன; சட்டங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும்கூட கடந்த காலங்களிலே நம்முடைய தமிழக அரசு ESMA சட்டத்தைக் கொண்டுவந்தது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கத் தொழிலாளர்கள் எல்லாம் எவ்வளவு பாதிக்கப்பட்டார்கள் என்ற செய்தியை இந்த நாடே அறிந்தது. அப்படிப் பேசுகின்ற நேரத்திலேகூட ஏதோ எதிர்க்கட்சிகள் எல்லாம் அரசு ஊழியர்களுக்காகப் பேசுகிறார்கள், இந்த அரசு மட்டும் பொதுமக்களுக்காகப் பேசுகிறது என்ற கருத்து ஆளும் கட்சி தரப்பிலே சொல்லப்பட்டது. ஆகவே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய நாங்களெல்லாம் அரசு ஊழியர்களைப் பாதுகாப்பதற்காகவும் பேசுகிறோம். அதேநேரத்திலே பொதுமக்களுடைய அனைத்துப் பிரச்சினையையும் பேசிக்கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல

வேண்டுமானால் மாணவர்களுடைய கல்விக் கட்டணம் உயர்ந்து இருக்கிறது. நெசவாளர் பிரச்சினை, விவசாயிகளுடைய இலவச மின்சாரம், மதுக் கடைகள் திறப்பதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு, போன்றவற்றிற்காக குரல் கொடுக்கிறோம். ஆடு, கோழி பலியிடத் தடை. அதற்காகப் பேசுகிறோம். இப்படிப் பல்வேறு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி நீங்கள் சட்டமுன்வடிவுக்கு வாருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பிரச்சினையைப் பற்றியும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை இந்த நாட்டு மக்களுக்காக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல் கடந்த ஆட்சிக் காலத்திலே அரசு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றக்கூடியவர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் எல்லாம் சொன்னோம். அதற்கு அன்றைய அரசாங்கம், ஆளும் கட்சியிலே இருந்தவர்கள் குரல் கொடுத்து, அதற்கு என்னென்ன காரியங்களை, நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லி அவற்றையெல்லாம் பரிசீலித்தார்கள். அப்படிப் பரிசீலனையில் இருந்த நேரத்திலேகூட இன்றைய ஆளும் கட்சியாக இருக்கிற அதிமுக. தமிழ்நாடு முழுவதும் குரல் கொடுத்தது. மிகப் பெரிய போராட்டங்களைச் செய்தது. அவற்றை, அந்தப் போராட்டங்களை அடக்குவதற்காக அன்றைய ஆட்சியாளர்கள் காரியங்களைச் செய்யவிலலை. ஆகவே அந்த வகையிலே தொழிலாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்களை அச்சுறுத்தக்கூடாது. பழி வாங்கக்கூடாது என்ற வகையிலே எதிர்க்கட்சி வரிசையிலே சொல்லப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

*பிற்பகல் 1-45*

இங்கேகூட 6072 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு தலைமைச் செயலக ஊழியர்கள் சில பேர் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவிற்கு ஏற்ப அவர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு, மீதம் உள்ளவர்கள் இன்றைய வரையிலே பணி நீக்கத்திலே இருக்கிறார்கள். அதிலும்கூட உச்ச நீதிமன்றம் என்ன சொன்னது? ஒரு மாத காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று



சொன்னது. இப்போது 3 மாதகாலம் ஆகிவிட்டது. ஆகவே 3 மாத காலம் ஆகியும்கூட.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் குறை கூறவேண்டும் என்ற அவசரத்தில், ஆதங்கத்தில் யாரை, எதற்கு குற்றம் சாட்டுவது என்றுகூட மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி மறந்துவிட்டுப் பேசுகிறார். உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி 3 ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் இந்த அரசு ஊழியர்களின் மனுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த விசாரணையை ஒரு மாதகாலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. ஆனால் அவர்கள் இன்னும் முடிக்கவில்லை. அதற்கு மாநில அரசு எப்படி பொறுப்பு ஏற்க முடியும்?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் அதைச் சொல்லியிருக்கிறது; நான் மறுக்கவில்லை. தனி நீதிபதிகளைக் கொண்டு விசாரித்து உடனடியாக முடிக்க வேண்டும்; ஒரு மாதத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அப்படிச் சொல்லியிருந்தும்கூட, நடைமுறையிலே 3 மாத காலமாகி, அந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்று சம்பளம் இல்லாமல், முழு பணிநீக்கம், ஒரு பைசாகூட கிடையாது. Suspension என்றாலாவது half pay-யாவது கிடைக்கும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. பணிநீக்கம் செய்யப்பட்ட காரணத்தினாலே அந்தக் குடும்பங்கள் எல்லாம் நடுத்தெருவிலே நின்றுகொண்டிருக்கின்றன. இப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏதோ எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம அவர்களுக்காகக் குரல் கொடுத்தார்கள்; தூண்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நீதிமன்றத்திற்கு வழக்குக்குச் சென்றதாகச் சொன்னார்கள். அப்படி நீதிமன்றத்திற்கு எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து செல்லவில்லை என்று சொன்னால், அவர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை என்று சொன்னால், அரசு ஊழியர்கள் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருப்பார்கள். நிச்சயமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் இதே கருத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை என்றால் இந்த அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்; அவர்களுக்கு வாழ்வே இருண்டு போயிருக்கும் என்று சொன்னார்கள். இப்போது ஜி.கே. மணி அவர்களும் அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர்களுக்காக

நாங்கள் குரல் கொடுத்ததால்தான், அதாவது எதிர்க்கட்சித் தலைவர்கள் குரல் கொடுத்ததால்தான் அவர்களுக்கு நீதி கிடைக்க வழி பிறந்திருக்கிறது என்கிறார்.

அதேநேரத்தில் விசாரணை தாமதமாகிக்கொண்டிருக்கிறது என்கிறார். இந்த 3 மாதகாலம் விசாரணை இன்னும் முடியவில்லை, அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லை என்கிறார். இந்த அரசு ஊழியர்கள்மீது இவ்வளவு அக்கறை உள்ள தி.மு.க. அவர்களுக்குச் செலவுக்குப் பணம் கொடுக்கலாமே! தொல்காப்பிய நிதி, தேர்தல் நிதி, விழுப்புரம் மாநாடு நிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஊரெங்கும் வசூல் செய்துகொண்டிருக்கிறார்களே, அந்த வசூல் செய்த நிதியிலிருந்து கொஞ்சம் இந்த 5,729 அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்குக் கொஞ்சம் நிதியை வழங்கலாமே! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே—

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொல்காப்பிய புத்தகம் விற்றதிலேயிருந்து வந்த நிதியை எங்கள் கட்சியினுடைய நலிந்தவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய அரசை வைத்துக்கொண்டு 6,000 பேர்களைக் காப்பாற்ற முடியவில்லை. திமுக-வே, நீங்கள் காப்பாற்றுங்கள் என்று எங்களை வேண்டி கோரினால், கட்சி கவனிக்கும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேண்டுகோள் விடுக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை; இந்த அரசு நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை. நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றது திமுக. ஆகவே எப்போது நீதிமன்றத்திற்கு வழக்கு சென்று விட்டதோ, நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள் அந்த நீதிமன்ற வழக்கைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்; அதனுடைய விளைவுகளைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் கடமையை ஆற்றுவதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஏற்கெனவே இந்த வேலைநிறுத்தத்திற்கு முன்பு அரசுப் பணியில் இருந்த அத்தனை அரசு ஊழியர்களும் இப்போதும் அரசுப் பணியில் இருக்கிறார்கள். இந்த 5,729 பேர்கள்தான் இப்போது அரசுப் பணியில் இல்லை. காரணம், அவர்களுடைய மனுக்கள் இந்த 3 நீதிபதிகள் முன்பு விசாரணையில உள்ளன. ஆகவே அந்த விசாரணையின் முடிவு என்ன



என்று தெரிந்த பிறகுதான் அரசு செயல்பட முடியும். அரசுக்கென்று சில விதிமுறைகள், வழிமுறைகள் இருக்கின்றன. அது எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆகவே நாங்கள் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கவில்லை. உங்களுக்கு அவ்வளவு அக்கறை இருக்குமானால் நீங்கள் அவர்களுக்கு உதவலாமே என்று ஒரு யோசனை சொன்னேன். அவ்வளவுதான்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே அரசியல் கட்சிகள், அல்லது எதிர்க்கட்சிகள் அரசு ஊழியர்களுக்கு உதவுவதைவிட அரசாங்கமே மனமுவந்து உதவிசெய்தால் அது பேருதவியாக இருக்கும் என்ற அந்த வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்கிறேன். அரசு ஊழியர்கள் பிரச்சினையிலே அதை அரசியல் ஆக்க விரும்பாமல்— நாங்கள் அதை எண்ணவில்லை. இந்த அரசு ஊழியர்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களிலே அவர்களும் ஒரு அங்கம். ஆகவே அந்த அங்கம் பாதிக்கப்படக்கூடாது என்ற வகையிலே—அரசு ஊழியர்களுடைய குடும்பங்கள் நடுத்தெருவிலே இருக்கின்ற காரணத்தாலே அவர்களை மீண்டும் பணியிலே சேர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்க வேண்டும். அந்த விசாரணை எந்த வகையிலே இருந்தாலும்கூட, 3 தனி நீதிபதிகளுடைய விசாரணை எந்த வகையில் இருந்தாலும்கூட, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதேநேரத்தில் அரசு ஊழியர்களுக்காக, பொதுமக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய நிலையிலே எதிர்க்கட்சித் தலைவர்கள்மீது, எதிர்க்கட்சிகள்மீது பழி போட்டு, அவர்களை பழிவாங்கக்கூடிய வகையிலே நடவடிக்கை, வழக்கு தொடர்வது கூடாது என்ற வகையிலேயும் சொல்லி இந்தத் திருத்தச் சட்டத்தால் அரசு ஊழியர்கள், அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக இருக்கிற கட்சிகள், கட்சித் தலைவர்கள் எல்லாம் கட்டாயம் பழிவாங்கப்படுவார்கள் என்ற காரணத்தால் இந்தத் திருத்தச் சட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையாக எதிர்த்து, ஆட்சேபித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையில் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிய ஒரு கருத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் இந்த சட்டப் பேரவையில் பேசுகின்றபோது, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுப்பிய இரண்டு சட்டப் பிரச்சினைகளுக்கு நான் இப்பொழுது பதில் அளிக்க விரும்புகிறேன். முதலில் எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 20, Sub-clause (1) என்பதைப்பற்றி இங்கே பேசினார். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்த சட்டப் பிரிவு பற்றி குறிப்பிட்டதே தவறான ஒன்றாகும். காரணம் இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 20, 21, 22 ஆகிய அனைத்துமே criminal matter-களுக்குத்தான் பொருந்தும். Part III-Fundamental Rights என்னும் பிரிவு இந்த மூன்று சட்டப் பிரிவுகளும் Right to Freedom என்னும் தலைப்பின்கீழ் வருகின்றன. குறிப்பாக Article 20(1) அதாவது சட்டப் பிரிவு 20, உட்பிரிவு (1) என்பது criminal procedures பற்றியது ஆகும். ஆகவே, ஒரு கிரிமினல் நீதிமன்றத்தில் ஒருவருக்கு தண்டனை வழங்கப்பட்டால், conviction வழங்கப்பட்டால், அப்பொழுது என்ன கிரிமினல் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றித்தான் இந்த சட்டப் பிரிவு. ஆகவே தற்போதுள்ள பிரச்சினைக்கும், இதற்கும் தொடர்பே இல்லை, சம்பந்தமே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இந்த அவசரச் சட்டத்திற்கு நாட்டின் ஜனாதிபதி அவர்களின் அனுமதியைப் பெறவேண்டும் என்பது குறித்து மேலும் சில விளக்கங்களை இங்கே கூற விரும்புகிறேன். இந்தப் பொருள் ஒரு விவாதமாக சென்னை உயர் நீதிமன்றத்தின் Division Bench முன்பு எழுப்பப்பட்டு நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் Division Bench, சென்னை உயர்நீதி மன்றத்தின் Division Bench இந்த விவாதங்களைத் தள்ளுபடி செய்து, நிராகரித்து விட்டது. சென்னை



உயர்நீதிமன்றத்தின் Division Bench, இது அரசு ஊழியர்களின் service matter என்பதால் இது முழுவதும் State List-ன்கீழ் வருவதாகத் தீர்ப்பு அளித்தது. Schedule VII, State List, List-II Entry 41 என்பது State Public Services; State Public Service Commission என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவும், அதற்கான இந்த சட்டத் திருத்தம்—amendment-கொண்டுவரவும் மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேலும் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது இந்திய அரசியல் சட்டப் பிரிவு 311-ஐப் பற்றி இங்கே நீண்ட நேரம் பேசினார். அவர் ஒரு அரசு ஊழியருக்கு விசாரணையில்லாமல் தண்டனை வழங்க முடியாது என்று குறிப்பிட்டார். இந்த Article 311-ஐப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒரு பகுதியை மட்டும் இங்கே தெரிவித்தார். அவர் தனக்கு வசதியாக இன்னொரு பகுதியை இங்கே மறைத்து விட்டார் குறிப்பிடாமல் விட்டு விட்டார், அதாவது Proviso (b) appended to the sub-clause (2) என்ன கூறுகிறது; சட்டப் பிரிவு 311-ல் clause (2) உட்பிரிவு (b) என்ன சொல்கிறது, என்றால்,

"where the authority empowered to dismiss or remove a person or to reduce him in rank is satisfied that for some reason, to be recorded by that authority in writing, it is not reasonably practicable to hold such inquiry;"

என்று கூறுகிறது. ஆகவே பிரிவு Proviso (b) appended to sub-clause (2) தெளிவாக என்ன கூறுகிறது என்றால அத்தகைய ஒரு விசாரணை நடத்துவது என்பது நடைமுறைக்கு ஒத்துவராது என்னும் ஒரு சூழ்நிலை இருந்தால் அந்த authority, அத்தகைய ஒரு விசாரணை இல்லாமலேயே ஆணை வழங்க முடியும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதைப் பற்றி ஏற்கெனவே பல வழக்குகள் நீதிமன்றங்களில் எழுந்து அதைப்பற்றிய பல தீர்ப்புகள் ஏற்கெனவே வந்துள்ளன. There are several decided case laws on the matter. 1972-ல் இரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, அப்பொழுது திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது ஆயிரக்கணக்கான இரயில்வே ஊழியர்கள் இந்த வகையில் dismiss செய்யப்பட்டனர்.

*பிற்பகல் 4.35*

பஞ்சாபில் காங்கிரஸ் கட்சியின் பிரதாப் சிங் கைரோன் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இதே விதத்தில் பல காவல் துறையினர் dismiss செய்யப்பட்டார்கள். அப்போது நடைபெற்ற அந்த நிகழ்வுகளை, அரசாங்கம் எடுத்த அந்த நடவடிக்கைகளை,

நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்டன. அவற்றுக்கு நீதிமன்றங்கள் தடை சொல்லவில்லை. சரியான நடவடிக்கைதான் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கின. ஆகவே தற்போது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளில் எந்தத் தவறும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சின்ன விளக்கம். நான் அதிகம் பேசவில்லை. விதிவிலக்குகளை நான் குறிப்பிடவில்லை என்று மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் சொன்னார்கள். விதிவிலக்குகளை எல்லாம் சொன்னேன். 3 விதிவிலக்குகளைச் சொன்னேன். ஒன்று, விசாரணை நடத்த முடியாத நேரத்தில், நியமிக்கும் அதிகாரம் படைத்த அந்த அதிகாரி யார் நியமன அதிகாரியோ அவர் இதில் விசாரணை நடத்த முடியாது என்று கருதி அவரைப் பணியிலிருந்து நீக்கலாம் என்பதை அவர் எழுத்து வடிவிலே அதைக்கொடுக்க வேண்டும். எழுத்து வடிவிலே ஆணையாக அதைப் பிறப்பித்தால் அது செல்லும், இல்லாவிட்டால் செல்லாது. அதேபோல மூன்றைச் சொன்னேன். ஒன்று Conviction. அவருடைய நடத்தையினாலேயே அவர் தண்டனைக்குள்ளாகி இருந்தால், நீதிமன்றத் தண்டனைக்குள்ளாகியிருந்தால், அவரையும் விலக்கலாம். இன்னொன்று, State Security. மாநிலத்தினுடைய அல்லது நாட்டினுடைய பாதுகாப்புப் பிரச்சினை இருந்தால் என்று அந்த 3 விதிவிலக்குகளை நான் அப்போதே, பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை என்பது சட்ட ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் பார்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்குள்ளே போவதற்கு முன்னாலே நான் ஒரு வேண்டுகோளை, தமிழக அரசுக்கு இந்த நேரத்திலே வைத்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, இந்தச் சட்டம் என்பது, தெளிவாகச் சொன்னால், இன்று ESMA என்ற சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது. இந்த TESMA என்ற ஒரு சட்டம் அதாவது இதனுடைய பீடிகையிலே என்ன சொல்லப்படுகிறது என்றால் i.e. "Effective steps to deal with the Government servants who openly defy the notification issued under Section 3". அதாவது, effective-ஆக அந்த ஆட்கள் மேலே



நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த Ordinance கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குப் பிரச்சினை இருக்கிறதா? இன்று. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, தமிழக அரசு பழிவாங்கும் நோக்கத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டாம் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள். ஆகவே பேசி முடிப்பதற்குள்ள வாய்ப்பு இழந்துவிட்டது போன்றதொரு கருத்தை உருவாக்கக்கூடிய முறையிலே இங்கே பேசினார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள் என்பதனாலேயே அரசுக்கு இருக்கிற hereditary rights, அவர்களை, சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதற்கான rights போகவில்லை. அந்த right as such இருக்கிறது. ஆகவே அந்த முறையில் இந்த விஷயங்களை அணுக வேண்டும். இப்போது வெளியே நிறுத்தப்பட்டிருக்கின்ற ஆறாயிரமோ, ஐந்தாயிரமோ அதைப்பற்றிக் காலையிலே முதலமைச்சர் அவர்கள் 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் என்று சொன்னார்கள். ஐந்தாயிரமோ, ஆறாயிரமோ நான் அந்த நம்பருக்கு வரவில்லை. வெளியிலே நிற்கக்கூடியவர்களுக்கு, வேலை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலிலே நான் ஒரு வேண்டுகோளை வைத்துக்கொள்கின்றேன்.

ஒன்று, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து deal பண்ண வேண்டிய அளவிற்கு விஷயங்கள் இல்லை என்பது என்னுடைய கருத்து. அதற்கு நான் சில விஷயங்களைச் சொல்கிறேன். அதாவது இன்று மனிதனுக்கு வாழ்வதற்கான உரிமையை ஓர் அடிப்படை உரிமையாக இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்று வாழ்வதற்கான உரிமை என்பதை ஏற்றுக் கொண்டிருந்தால், இன்றைக்கிருக்கிற முதலாளித்துவச் சமுதாயத்திலே வாழவேண்டுமென்றால், அவனுக்கு ஒரு Association இல்லாமல் அல்லது ஒரு சங்கம் இல்லாமல் முடியாது என்ற காரணத்தினாலேதான் 1947-லே இந்தியா சுதந்திரம் அடைந்த உடனேயே உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு சபையே, Article 19-ன்படி எல்லா Citizens-க்கும் Association வைப்பதற்கான அல்லது சங்கம் வைப்பதற்கான உரிமை கொடுக்கப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி எனக்கு வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே காவல் துறையினர் நினைத்தால்

என்னைச் சுட்டுவிட முடியாது. அல்லது வேறு ஒருவன் என்னைச் சுட்டுவிட முடியாது. என்னைச் சுடவேண்டுமேயானால் இன்றைக்கு சட்டம் இருக்கிறது. தூக்கு தண்டனை கொடுப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதற்கான Process என்பது பின்பற்றப்பட வேண்டுமென்றுதான் சட்டம் சொல்லுகிறது. அந்த முறையில் Article 19-ஆவது ஷரத்துப்படி எனக்கு சங்கம் வைப்பதற்கான உரிமை உண்டு. சங்கம் எதற்காக வைக்கிறோம்? என்னுடைய அடிப்படையான தேவைகளை, உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு, bargain பண்ணுவதற்காகத்தான் நாங்கள் சங்கம் வைப்பது. 'Collective Bargaining' என்பது என்றைக்கோ இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு கொள்கை. ஆகவே இந்த 'Collective Bargaining' என்ற முறையிலே அரசு ஊழியர்களாக இருந்தாலும்கூட அவர்களுக்கு, அவர்களுடைய எஜமானரிடம் அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைப்பதற்குள்ள உரிமை இன்றைக்கு இந்த நாட்டில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. Supreme Court-லே சொல்லப்பட்டிருக்கிறது. நீதியரசர் திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் 'ஹிந்து' பத்திரிகையிலே எழுதிய அந்தக் கட்டுரையிலேயிருந்து ஒரு Passage-ஐ இங்கே நான் படிக்கிறேன். அதாவது, 1989/710, Supreme Court என்ற அந்த வழக்கிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்....

பிற்பகல் 4-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், விவரங்களை மட்டும் சொல்லுங்கள். போதும். எல்லாவற்றையும் படிக்கவேண்டுமென்பது அல்ல. என்ன கருத்து என்பதை மட்டும் சொன்னால் போதும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளே போகவில்லை. கருத்தை மட்டும்தான் சொல்லுகிறேன். அதாவது, The right to form Association or Unions is the fundamental right under Article 19 (1) of the Constitution. Section 8 of the Trade Unions Act provides for the registration of the trade unions. அந்த முறையிலே வந்துவிட்டு என்ன சொல்கிறார்கள் என்றால், இன்று இதை நாடு ஏற்றுக்கொள்கிற நேரத்தில், அவர்களுக்கு அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்காக தேவைப்பட்டால் வேலைநிறுத்தத்தைக் கடைபிடிப்பதற்கு உள்ள உரிமையும் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேற்றையதினம்கூட நான் இங்கே பேசினேன். அதாவது நம்முடைய Indian Trade Union Act



என்பது வெள்ளை ஏகாதிபத்தியம் இந்த நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே உருவாக்கபபட்ட சட்டம். அந்தச் சட்டத்தில் தொழிலாளர்கள் சங்கம் வைபபதறகான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு British நாட்டிலேயும், France நாட்டிலேயும் இந்த உரிமை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், சட்டமுன்வடிவிற்கு வாருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமுன்வடிவிற்குத்தான் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவிலே சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள். ஏனென்றால், 13 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமுன்வடிவிற்குத்தான் வருகிறேன். ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால நேற்றைக்கு இங்கே ஒரு கேள்வியைப் போட்டார்கள். Strike செய்வதற்கான உரிமை என்பது இன்றைக்கு அடிப்படை உரிமை அல்ல என்று Supreme Court-லே சொல்லப்பட்டிருக்கிறது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், Supreme Court அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொன்னால், இன்று எனக்கு வாழ்வதற்கான அடிப்படை உரிமை உண்டு என்று இந்தியாவினுடைய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு இருக்கிற நேரத்திலே அதைப் பெறுவதற்கு, என்னுடைய எஜமானன் அந்த உரிமையை மறுக்கிற நேரத்திலே அதைப் பெறுவதற்கு போராட்டம் நடத்துவதற்கான உரிமையும் எனக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. போராட்ட த்தினுடைய ஒரு அடிப்படைதான் இன்றைக்கு வேலைநிறுத்தம். ஆகவே Supreme Court சொல்லிவிட்டதனால் மட்டும் இன்றைக்கு அதை ஒரு கருத்தாகவோ, Judgement-ஆகவோ சொல்லவில்லை. அதை நான் சுட்டிககாட்ட விரும்புகிறேன். அந்தப் பிரச்சினையிலே Supreme Court-னுடைய நீதியரசர் ஒரு தீர்வு என்ற முறையிலே சொல்லவில்லை. It is only a passing reference.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அறிவுக்கு எட்டியவரை உச்ச நீதிமன்றத்தில் அரசு ஊழியர்களுக்குப் போராட உரிமையில்லை; வேலைநிறுத்தம்

செய்ய உரிமையில்லை என்று கூறியதாகத்தான் நாங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் வேறுவிதமாகக் கருதுவாரேயானால், அதை உச்ச நீதிமன்றத்தில்தான் போய் வாதாட வேண்டுமே தவிர, இந்தச் சட்டப்பேரவையில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அறியாதது ஒன்றும் அல்ல. இந்திய நாட்டிலுள்ள பிரதமர்கூட இன்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிற அந்தக் கருத்து, It is unfortunate என்று சொல்லியிருக்கிறார். அதேபோன்று Solicitor-General கூட அது . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமர் அவர்களும், Solicitor-General அவர்களும், fortunate என்று சொன்னாலும் சரி, அதை unfortunate என்று சொன்னாலும் சரி, எப்படிச் சொன்னாலும் Supreme Court இந்தக் கருத்தைச் சொல்லிவிட்டது. ஆகவே அதை எதிர்த்துப் பேசுவதானால் உச்ச நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதை உச்ச நீதிமன்றத்திலே பேசுவதற்கான சூழ்நிலைகளை நாங்கள் உருவாக்குகிறோம். அது இன்னொரு பக்கம். அது இருக்கட்டும். நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், உச்ச நீதிமன்றம் அது சம்பந்தமாக கருத்து சொல்லவில்லை என்று சொல்லக்கூடியவர்களுக்கு நான் ஒரு பதிலை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது உச்ச நீதிமன்றம் Article 311-ன்படி அவர்களுக்கு, அதாவது வெளியேற்றப்பட்டவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்ற காரணத்தினாலேதான் அவர்கள் 3 ஓய்வு பெற்ற நீதிபதிகளை வைத்து விசாரிப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே ஒன்றை Supreme Court சுட்டிக்காட்டியிருக்கிறது. அதாவது TESMA என்ற ஒரு சட்டம் அமலிலே இருக்கிறதாக நீங்கள் கவனிக்க வேண்டியதல்ல. Apart from TESMA, you conduct an enquiry. TESMA-வைப் பொறுத்தளவிலே நீங்கள் இதை ஒரு பிரச்சினையாக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றுதான் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தி. (குறுக்கீடு) என்னது?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றை ஒத்துக்கொள்கிறேன். நான் ஒன்றைத் தெளிவாக ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால் TESMA என்பது சம்பந்தமாக ஒரு தீர்ப்பு கொடுக்கவில்லை. அவர்கள் அது செல்லாது என்றும் சொல்லவில்லை; செல்லும் என்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலையிலே தெளிவுபடுத்தினார்கள். உச்ச நீதிமன்றத்திலும் சரி, உயர் நீதிமன்றத்திலும் சரி, TESMA குறித்து, எந்த அளவிற்கு ஒரு Validity-யை அவர்கள் endorse செய்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே நம்முடைய உறுப்பினருக்குத் தெரிந்தே அதை மீண்டும் கிளப்புகின்றார். (குறுக்கீடு) இன்னொன்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சொல்லிக் கொள்ள விரும்புவது, Article 19 பற்றி அவர்கள் குறிப்பிடும்போது Freedom of Association பற்றிச் சொன்னார்கள் எதற்கு அந்த freedom கொடுத்திருக்கிறார்கள் என்றால் The right to freedom of association covers a variety of rights so long as the association is for a lawful purpose not for illegal purpose.

**THIRU J. HEMACHANDRAN:** I would like to tell the Honourable Law Minister that strike is not an illegal thing. It is not ......

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றமே அரசு ஊழியர்கள் செய்த வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. சட்ட விரோதம் என்றால் என்ன?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது பத்திரிகையிலே நாங்கள் படித்தது, அவர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதற்கான அடிப்படை உரிமை இன்றைக்கு Constitution-லே கொடுக்கப்படவில்லை என்ற கருத்தைத்தான் சொன்னார்களே தவிர, வேலைநிறுத்தம் சட்ட விரோதம் என்ற முறையிலே ஒரு தீர்ப்பு கொடுக்கப்படவில்லை.

[2003 நவம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடியுங்கள். இன்னும் நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இன்று அதற்குப் பிறகு உயர் நீதிமன்றம் இந்த அரசு கொடுத்திருக்கிற அந்த ஆணைகளிலே 2 ஷரத்துகளை இன்றைக்கு அவர்கள் struck down பண்ணியிருக்கிறார்கள் என்பது அரசு அறியாதது அல்ல. அதனுடைய அர்த்தம் என்ன? 5 Proviso-விலே இரண்டை அரசே வாபஸ் பெற்றுவிட்டார்கள். இரண்டை இன்று உயர் நீதிமன்றம் struck down பண்ணியிருக்கிறது. ஆகவே அரசு ஊழியர்கள் வைத்த கோரிக்கை என்பது நியாயம்தான் என்று மறைமுகமாக உயர் நீதிமன்றம் ஒத்துக்கொள்கிறது என்பது என்னுடைய கருத்து. Opinions may differ. நான் என்ன சொல்கிறேன் என்றால் basic point என்ன? அரசு ஊழியர்கள் இந்த 5 உத்தரவுகளை வாபஸ் பண்ண வேண்டும் என்று கேட்டுத்தான் அவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு notice கொடுத்தார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையோ, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையோ ஆய்வு செய்வதற்காக இன்று இந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. நாங்கள் கொண்டு வந்திருக்கிற அவசரச் சட்டத்தை சட்டம் ஆக்க வேண்டும். அதைப்பற்றி இப்போது பேசினால், சுருக்கமாக இந்த விவாதத்தை முடித்துக்கொள்ளலாம்.

பிற்பகல் 4-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது என்னுடைய கருத்து இந்தச் சட்டம் தேவையற்றது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்தச் சட்டம் தேவையற்றது. அதற்குச் சில காரணங்களைக் கூறுகிறேன். அதாவது இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அடிப்படையாக இருந்த உத்தரவுகள் அனேகமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றன என்பது என்னுடைய கருத்து. ஒரு



2003 நவம்பர் 7] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

உத்தரவை அரசே வாபஸ் செய்திருக்கின்றது. இரண்டை Court செய்திருக்கிறது. மீதி இரண்டுதான், இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தப் போராட்டத்திற்கு பிரதானமாக இருந்த பிரச்சினைகளிலே இன்று காலையிலே ஒரு பிரதானமான பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டது. அதாவது இந்தப் போராட்டத்தைப் பொறுத்த அளவிலே நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு எங்களுடைய ஸ்தாபனம் அதாவது Centre for Indian Trade Unions என்ற ஸ்தாபனத்தினுடைய தலைவராக நான் இருந்துகொண்டிருக்கிறேன். எங்களுடைய கமிட்டியினுடைய செயலாளர் திரு. டி.கே. ரங்கராஜன் அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே வழக்கைத் தொடர்ந்தார்கள். வழக்குத் தொடர்கிற நேரத்திலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஒன்றைச் சொல்கிறேன். அதாவது வழக்குத் தொடர்கிற நேரத்திலே நாங்கள் ஒன்றைத் தெளிவாகச் சொன்னோம். அரசு ஊழியர்களை வேலைக்குப் போக வேண்டாம்; நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் வேலைக்குப் போக வேண்டுமென்று சொன்னோம். அவர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று அரசிடம் கேட்டுக்கொண்டோம். அரசு அவர்களை வேலைக்கு எடுக்காத பின்னணியிலேதான் அவர்களுக்கு வேலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கவலையோடுதான் நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றோம். உச்ச நீதிமன்றம் அதை ஏற்றுக்கொண்டு, அனேகமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வேலை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள் (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உச்ச நீதிமன்றத்தினுடைய intervention-க்குப் பிறகுதான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அப்போது அரசு சில நிபந்தனைகளை விதித்தது. அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால்தான் உங்களுக்கு வேலை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இது மிக முக்கியமான விஷயம். இதிலே பேசுவதற்கு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 13 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. இதிலே உங்களுடைய கருத்தை நீங்கள் தெளிவாகச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்றைக்கு ordinary laws-ஐ வைத்து நடத்துகிற விஷயம். இதற்காக என்று TESMA என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை. இது ஊழியர்களைப் பழி வாங்குகிற அளவுக்குக் கொண்டு செல்லும் என்பது மட்டுமல்ல. இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு தனியார் முதலாளிகள் இன்று தொழிலாளர்கள் மேலே மிகப் பெரிய நெருக்கத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு ஆபத்தான நிலையை தமிழகத்திலே உருவாக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே இன்று, இப்படிப்பட்ட ஓர் அடக்குமுறைச் சட்டம் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**THIRU J. HEMACHANDRAN:** This is a right of collective bargaining.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சட்டம் குறித்து மாண்புமிகு மூத்த உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு முழு உடன்பாடு இருக்கிறது. குறிப்பாக.. (மணியடிக்கப்பெற்றது) இதோடு முடித்துக்கொள்ளலாம் என்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், வழிமொழிந்தால் போதும். அவ்வளவுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் ஹேமச்சந்திரன் சொன்ன கருத்துகளில் முழு உடன்பாடு என்று எப்போது சிவபுண்ணியம் அவர்கள்



சொல்லிவிட்டார்களோ மேலே பேச வேண்டிய அவசியமே இல்லை. அவர் உட்காரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிந்துவிட்டார். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்திலே இருக்கக்கூடிய அடித்தட்டில் நிற்கும் சமூக, அரசியல், பொருளாதாரப் பகுதியைப் போராடி உயர்த்துவதுதான் தொழிற்சங்கத்தினுடைய கடமை. அதற்காக இருக்கின்ற இயக்கங்கள் இவை. ஆகவே தொழிற்சங்க இயக்கம் வைத்துப் போராடுவது என்பது இப்போது சர்ச்சைக்குரியதாக மாற்றப்படுவதைப் பற்றித்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லி வருகிறார். இதுகுறித்து நாம் இங்கே விவாதிக்கிறபோது சட்டரீதியான பாதிப்பின்மீது விவாதிக்கிறபோதும், அதுபோல நீதிமன்றத்தின் ரீதியாக அதைப் பற்றிக் கருத்துகள் வருகின்றபோதும், இரண்டையும் இணைத்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆட்பட்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலே சொல்கிறபோதும், நேற்றையதினம் இந்த அவையிலே பேசுகிறபோதும்கூட, காவிரி நீர் பிரச்சினை பற்றிப் பேசுகிறபோது, கருத்துச் சொன்னபோது, உச்ச நீதிமன்றமே சில வார்த்தைகளை நமது முதலமைச்சர் மீது சொன்னதாகவும், அதை இந்த நாட்டு மக்களுக்காக ஏற்றுக்கொண்டு, அந்தக் கடினமான செய்தியை நான் சொல்ல வேண்டிய அவசியம் இருந்தது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி, நேற்றையதினம் சொன்னார்கள். அப்படி உச்ச நீதிமன்றம் சொல்கிறபோதுகூட, அது மக்களைப் பாதிப்பதாக இருந்தால், நம்முடைய கருத்தை வலுவாகச் சொல்ல வேண்டும் என்பதிலே உறுதியாக முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நான் ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. தந்தை பெரியார் அவர்கள் சொன்னது. அவர் சொல்கிறபோது, இந்த நாட்டினுடைய தலைமகன், அதாவது குடியரசுத் தலைவரையே விமர்சனம் செய்வதற்கு உரிமை இருக்கிறபோது, அந்தக் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிற நீதிபதிகளைப் பற்றி விமர்சனம் செய்யக்கூடாதா என்று தந்தை பெரியார் அவர்கள் கேட்டார். அதேபோல இந்த strike கூடாது என்று சொல்கிறபோது, அவர் ஒரு கருத்தைச் சொல்கிறபோது...

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சிவபுண்ணியம், பெரியார் தேர்தலில் நிற்கவில்லை. பெரியாருக்கு அரசாங்கத்திற்குள்ளே வர வேண்டும் என்ற விருப்பம் இல்லை. ஆட்சியிலே அவர் உட்கார்ந்ததில்லை. ஆகவே அதற்கும் இதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் அவர்களுக்கு தேர்தலைப் பற்றிய அக்கறை இல்லை என்றாலும்கூட, இந்த சமூகத்தைப் பற்றிய அக்கறை வலுவாக இருந்ததன் காரணத்தினாலே, அந்த சமூகத்திலே இருக்கிற இந்த இடர்ப்பாடுகளைப் போக்குவதற்குரிய ஒரு கருத்தாக அவர் இதைச் சொன்னார். ஆகவே strike கூடாது என்று சொல்கிறபோது, அதைப்பற்றிக்கூட அவர் கருத்துச் சொல்கிறபோது, strike கூடாது என்றால் மாற்று வழி என்ன என்று சொல்லுங்கள். மாற்று வழியும் இல்லை, strike-ம் கூடாது என்று சொன்னால், அது ஆண்டவனே சொன்னாலகூட அதை அடித்து திருத்தி எழுத வேண்டாமா என்றுதான் தந்தை பெரியார் கேட்டார்.

அதேபோல நமது மாநிலத்திலே இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது என்பது உண்மை. இதிலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளுக்குள்ளே நான் போகவில்லை. ஒரு மாநில அரசு அதன் மீது நிர்வாக ரீதியாக எடுத்திருக்கிற பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதில் பலவித ஏற்ற இறக்கங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தச் சட்டத்தின்மூலமாக இதை நிறைவேற்றுகிறபோது 3 ஆம் தேதிதான் கடிதம் போடப்பட்டிருக்கிறது. 3 ஆம் தேதி போட்ட கடிதம் கிடைக்காதபோது, 4 ஆம் தேதி பணிக்குச் செல்கிறபோது, அலுவலகத்தின் உள்ளே அனுமதிக்கப்படாதபோது அவர்கள் வேலைக்கு வரவில்லை என்று காரணம் காட்டி அவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி இடையூறான நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது, 4-வது பிரிவு, 5-வது பிரிவு, 6-வது பிரிவு, 7-வது பிரிவு எல்லாமே கடுமையானதாக இருக்கிறபோது, போராடுகிற உரிமையே மறுக்கப்படுவதான ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் போராட்டத்தின்பால் நம்முடைய தமிழ்நாடு அரசு, இதுவரையிலும் எடுத்திருக்கிற அந்த நடவடிக்கைகளைப் பற்றிய பிரச்சினைகள் விமர்சனங்களுக்கு உட்படுவதாகவோ அல்லது அவர்களுக்குச் சரியானதாகவோ பட்டால்கூட இங்கே மாண்புமிகு



உறுப்பினர்கள் கூறியதைப்போல அந்த 5,729 பணியாளர்களையும் மீண்டும் பணியில் அமர்த்துவதற்கான ஒரு நல்ல முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அரசு ஊழியர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெறவேண்டும். அதேபோல இதைப்பற்றிச் சொன்ன காரணத்தினாலேயே தலைவர்கள்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகள் இருக்கின்றன. அது வருத்தம் அளிக்கிறது. தமிழகத்திலே உள்ள அரசியல் சூழ்நிலையில் தேவையில்லாத ஒரு கருத்தை அது உருவாக்கி இருக்கிற காரணத்தினாலே அதை சரி என்று வாதிக்காமல் அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதோடு, இந்தச் சட்டம் தேவையற்றது; இதை அடக்குமுறைச் சட்டமாக பாவிப்பதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனுடைய விளைவுகள், இதனுடைய பாதிப்பு, இதனுடைய தாக்கம் என்பது வேறுவிதமாக இருக்கிற காரணத்தினாலே, இந்த அரசு இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவிலே பேசுங்கள். நிதியமைச்சர் முடிக்கட்டும் (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) இல்லை, அடுத்த சட்டமுன்வடிவிலே பேசுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு ஆதாரமுள்ள, ஆணித்தரமான, அறிவுசார் பதிலை நிரம்பக் கூறியிருக்கிறார்கள். அவற்றை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்று, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "4-7-2003 ஆம் நாள் அன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2003) இப்பேரவை நிராகரிக்கிறது" என்கிற திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க.(இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். தீர்மானம் தோல்வியுற்றது.

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டுமென்னும்" மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.



பிற்பகல் 5-00

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரானது; ஜனநாயகத்திற்கு முரணானது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் முதலிலேயே எதிர்த்தோம். இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்தையும் எதிர்த்திருக்கிறோம். அதையும்மீறி இந்தச் சட்டம் இன்றையதினம் இங்கே நிறைவேற்றப்படுமேயானால் நிச்சயமாக அது ஜனநாயகத்திற்கு முரணானது. இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் என்பது மனித அடிப்படை உரிமையையே பறிக்கக்கூடிய சட்டம்; ஜனநாயக விரோதச் சட்டம்; இது தேவையில்லாத சட்டம என்பதை வற்புறுத்தியும் இதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலே, இதைக் கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 4. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2003) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) —தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2003).

திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வி.கே. லட்சுமணன் மற்றும் கு. பிச்சாண்டி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:

"26-10-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2003) இப்பேரவை நிராகரிக்கின்றது"

அவர்கள் இருக்கையில் இல்லை.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2003). மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."
எனக்கோருகிறேன்.

---

@4-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2003).

திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் மற்றும் வி.கே. லட்சுமணன் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:

"9-6-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடைசெய்தல் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2003) இப்பேரவை நிராகரிக்கிறது." திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"9-6-2003 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடைசெய்தல் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2003) இப்பேரவை நிராகரிக்கிறது."*

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2003) ஆய்வுக்கு@ எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்று நாட்டிலே வசதியில்லாதவர்கள் மத்தியிலே, அவர்களுடைய நெருக்கடியான சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, சிலர் வட்டிக்குப் பணத்தைக் கொடுத்து, நாள் கணக்கிலே வட்டி, மணிக் கணக்கிலே வட்டி, மீட்டர் வட்டி என்றெல்லாம் சுரண்டிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

---

@6-11-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது





இப்படிப்பட்ட கந்து வட்டி கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டிய சூழ்நிலை நாட்டிலே நிலவிக் கொண்டிருக்கிறது; அதிலே மாறுபட்ட கருத்தே இல்லை. அதேநேரத்திலே, நட்பின் அடிப்படையிலே அல்லது உறவுமுறையிலேகூட சிலருக்கு நெருக்கடி ஏற்படுகிறது என்று சொன்னால், அந்த நெருக்கடியான நேரத்திலே எனக்கு உதவி செய்யுங்கள் என்று ஒருவர் கேட்க, மற்றொருவர் கையிலே இருந்தோ அல்லது தன்னுடைய சொத்தை, நிலத்தை, வீட்டை, நகைகளை வைத்துக்கூட மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய, கடன் பெற்று உதவி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. அப்படிப்பட்டவர்களும் இந்த கந்து வட்டி என்ற கணக்கிலே, காவல் துறையிடத்திலே புகார் கொடுத்து, இப்போது கொடுத்த பணத்தைக் கேட்கிறார்கள் என்ற காரணத்தினாலே இதைத் தவிர்க்க வேண்டும் என்று மிரட்டக்கூடிய சூழ்நிலையும் கிராமப்புறங்களிலே பல்வேறு இடங்களிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே கந்து வட்டி ஒழிக்கப்பட வேண்டியது. அதேநேரத்திலே, தார்மீக அடிப்படையிலே உதவி செய்ய வேண்டுமென்று கொடுத்தவர்கள், அந்தப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகை செய்யக்கூடிய வகையிலே அது அமைய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கந்து வட்டிக்கான ஒழிப்பு சட்டத்தைப் பொதுவான நிலையில் வரவேற்கிறேன். அதிலே சில அம்சங்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அதிலே குறிப்பாக வெளிநாட்டு வங்கிகள், சென்னை போன்ற பெரு நகரங்களிலே credit card வாங்குவதற்காக அனுமதிக்கிறார்கள். இந்த credit card வர்த்தக நிறுவனங்களிலே அளிக்கிறபோது, அதற்காக அந்த நிறுவனங்கள் 2½ சதவிகிதம் வட்டி போடுகிறார்கள். அதேபோல திரும்பச் செலுத்துவதற்கான வட்டி என்ற முறையிலே கிட்டத்தட்ட 30 சதவிகிதம் வரையிலும் அது வந்துவிடுகிறது ஒரு ஆண்டுக்கு. அதுபோக, திரும்பச் செலுத்துவதற்காகப் போடுகிற வட்டி கிட்டத்தட்ட 30 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக வந்துவிடுகிறது. ஆக, 60 சதவிகிதத்திலிருந்து 72 சதவிகிதம் வரையிலும் வட்டியாகப் போடப்படுகிற பணம் என்பது, அது வெளியிலே வரக்கூடிய பணமாக, வெளியிலே எடுத்துச் சென்று விடுகிறார்கள். அது எங்கே செல்கிறது, எப்படிச் செல்கிறது என்ற நிலை தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறது வெளிநாட்டு வங்கிகளாலே. ஆகவே பணப்புழக்கம் குறைவதற்கான ஒரு காரணமாகக்கூட இது இருக்குமோ என்ற அச்சம்,

கருத்து நிலவுகிறது. இதைப் பற்றி அரசு ஆராய்ந்து, அதையும் இணைத்து தடுப்பதற்கான முயற்சியை இதிலே மேற்கொள்ள வேண்டும்; மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புவதோடு, இதற்கான முயற்சிகளையும் அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்து வட்டி தாதாக்கள் இன்றைக்கு தமிழகத்திலே ஒரு சவாலாக செயல்பட்டு வருகிறார்கள் என்பதுதான் உண்மை. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி போன்ற பெரிய நகரங்களிலே இப்போது ஒரு Reserve வங்கியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய பின்னணி என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். சாதாரண மக்கள் வறுமையின் காரணமாக, அவசர சூழ்நிலையின் காரணமாக கஷ்டத்திற்கு பணம் வாங்குகிறார்கள். அப்படி வாங்குகிறபோது, அந்தக் குடும்பமே மூழ்கிப் போய்க் கொண்டிருக்கிற ஒரு நிலை இப்போது நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. சென்னையிலே பல பகுதியிலே பல குடும்பங்கள் எரித்துக் கொல்லப்பட்டிருக்கின்றன. பலர் அவமானம் தாங்க முடியாமல் இறந்திருக்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் பார்க்கும்போது, திருச்செங்கோட்டிலே ஒரு லாரி உரிமையாளர், குடும்பத்தோடு, 'Poison' குடித்துச் செத்தார். வட்டிக்குப் பணம் வாங்கி Lorry வாங்குகிறார். நம்முடைய நிதி அமைச்சருக்கு நிச்சயம் நன்றாகத் தெரியும். ஏனென்றால், அது அவருடைய பகுதி. அந்தக் குடும்பத்தினுடைய நிலை என்ன? அந்த கந்துவட்டிக்காரர்கள் செய்கின்ற செயல்; 15 நாட்களுக்கு முன்புகூட புதுக்கோட்டையிலே, அறந்தாங்கியிலே Bus stand-க்கு முன்னாலே இருக்கிற Lodge-லே சந்திரசேகரும், அவருடைய மனைவி, இரண்டு மகள்கள் விஷம் குடித்து செத்திருக்கிறார்கள். தன்னுடைய சாவிற்குக் காரணம் யார் என்று அவர் எழுதி வைத்து இருக்கிறார். காவல் துறை இதைக் கைப்பற்றியிருக்கிறது. F.I.R. போட்டிருக்கிறார்கள். ஏன் அந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லையென்ற பின்னணியைப் பார்க்கும்போது அந்த கந்து வட்டி கும்பல் அரசை மிரட்டுவது மட்டுமல்ல, பணம் வாங்கியவனை மிரட்டுவது மட்டுமல்ல, காவல் துறையையே இன்றைக்கு மிரட்டிக் கொண்டிருக்கிறது. அந்த மிரட்டலின் பின்னணியில் இருப்பது யார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.



பிற்பகல் 5-10

இன்றைக்குக்கூட, காலையிலே ஒரு பெரியவர் எனக்குச் சொன்னார். தியாகராய நகரிலே இருக்கக்கூடிய பெரிய பெரிய வியாபார நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு கறுப்புப்பணம் வைத்திருப்பவர்களிடம் பணத்தை வாங்கி, ஒரு பெரிய நிறுவனம் ஒன்று இன்னொரு நிறுவனத்திற்கு Cheque கொடுக்கிறார்கள். அந்தச் Cheque-ஐ காலையிலே honour பண்ணும்போது கம்பெனியிலே பணம் இல்லை. ஒரு மணி நேரத்திற்கு, ஒரு இலட்சம் ரூபாய்க்கு 10 ஆயிரம் ரூபாய். 5 இலட்சம் ரூபாய் வேண்டுமென்றால், 50 ஆயிரம் ரூபாயைக் கொண்டு போய் கட்டி விடுகிறார்கள். ஒரு மணி நேரத்திற்குள்ளே 5,50,000 ரூபாயை அந்தக் கம்பெனி வாங்கி வைத்துக்கொள்கிறது. இப்படி நிறுவனங்களை வைத்துக்கொண்டு, சென்னையிலே, தியாகராய நகரிலே சர்வ சாதாரணமாக இது நடக்கிறது இன்றைக்கும். இதை எல்லாம் கட்டுப்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல. Airport-க்குப் போனால், International Airport-லே இன்றைக்கு என்ன நடக்கிறது. Customs Duty கட்டவேண்டுமென்று சொன்னால், Dollar வைத்திருக்கிறார்கள். பெட்டிப்பெட்டியாகப் பணம் வைத்திருக்கிறார்கள் தாதாக்கள். வருகிறவர்கள் பணத்தைக் கட்டி, அந்தப் பொருளை எடுத்துக்கொள்கிறார்கள். Meter வட்டி. 2 மணி நேரத்திற்குள்ளே கட்டுகிற பணத்திற்கு 30% வட்டி. இப்படி பணம் கொழிக்கின்ற ஒரு துறையாக, பணத்தை எப்படி வேண்டுமானாலும் எடுக்கலாம் என்ற நிலைக்கு இன்றைக்கு தமிழகத்திலே ஒரு கூட்டம், தாதாக்கள் கூட்டம் நடமாடிக் கொண்டிருக்கிறது. அதை நான் நம்புகிறேன். நிச்சயம் நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், இதற்கு ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டு, தமிழகத்திலே இருக்கின்ற சாதாரண மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

அது மட்டுமல்ல. இராயபுரத்திலே என்ன நடந்தது? சட்ட அமைச்சருக்கு நன்றாகத் தெரியும், என்னைக் காட்டிலும். காலையிலே Boat-க்குப் போக வேண்டும் என்று சொல்லும்போது, தண்டல் வாங்குகிறார்கள். எதற்கு? குடும்பத்திற்கு அரிசி, உப்பு, மிளகாய் வாங்குவதற்கு காசு கொடுத்து, மேலும், அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு diesel வாங்க வேண்டும். கூட வருகிறவர்களுக்கு சாப்பாடு வாங்கிக் கொண்டு போக வேண்டும். திரும்பி வருகின்றபோது, அந்த மீனை விற்றுப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்னும்போது, மீனை விற்க விடுவதில்லை. எவன் பணம் கொடுத்தானோ, குத்து மதிப்பாக, ஒரு rate கொடுத்து, எடுத்துக்

கொண்டு போய்விடுகின்றான். மாலை திரும்பி அந்தத் தொழிலாளி போகும்போது வெறும் வயிற்றோடுதான் போகிறான். ஈரத்துணியோடுதான் இன்றைக்கு போய்க் கொண்டிருக்கிறான். இங்கேயும் இந்த நிலை.

இன்றைக்கு Market-களிலே என்ன நடக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். காலையிலே ஆயிரம் ரூபாய் வாங்கினால், 900 ரூபாய் கொடுக்கிறார்கள். மாலை 5 மணிக்கு ஆயிரம் ரூபாய் கொண்டு போய்க் கொடுத்துவிட வேண்டும். கொடுக்கவில்லையென்றால், அவன் தரவில்லை என்று தள்ளிக் கொண்டு போய் விடுகிறான். அப்படியில்லை என்றால், பிடித்து உதைக்கிறார்கள். அடிப்பதற்கு ஒரு கூட்டம்; பிடித்து வருவதற்கு ஒரு கூட்டம்; கட்டப் பஞ்சாயத்திற்கு ஒரு கூட்டம். அதற்குமேலே முடியவில்லை என்று சொன்னால் கொலையும் பண்ணுகிறார்கள். இந்த நிலைக்குப் பின்னணியாக இருப்பது யார் என்று எண்ணிப் பார்க்கும்போது, இன்றைக்கு எல்லா அரசியல் கட்சிகளிலேயும் கறுப்புப்பணம் வைத்திருக்கக்கூடிய சில அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய தயவு இந்த தாதாக்களுக்கு இருக்கிறது. இந்த தாதாக்கள் இப்படி இருப்பதால் காவல் துறை என்ன பண்ணும்? அதிலேயும் சில குற்றவாளிகள் இருக்கிறார்கள். மொத்தப் பேரையும் நான் குற்றவாளிகள் என்று சொல்ல முடியாது. அதிலேயும் பணத்திற்கு ஆசைப்பட்ட சில அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களையும் கண்டறிந்து தமிழகத்திலே ஒரு நல்ல சுபிட்சமான நிலை ஏற்பட சாதாரண மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதற்கு, முதலமைச்சர் அம்மா அவர்கள் முயலுவார்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் S.B.C.I.D. Branch வைத்திருக்கிறீர்கள். அந்த S.B.C.I.D.-இலே ஒரு Special Cell இதற்கு போடுங்கள்; ஒரு I.G. தலைமையிலே போட்டு, இப்படிபபட்ட குற்றவாளிகளை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

இன்றைக்கு சினிமாத் துறையைப் பார்க்கும்போது, ஜி.வி. போன்றவர் மிகப்பெரிய நிலையிலே இருந்தார். சினிமாத் துறையிலே அவர் பெரிய ஜாம்பவான். (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு கட்டப் பஞ்சாயத்திலே அவர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. (மணியடிக்கப்பெற்றது) இப்படிப்பட்டவர்களுடைய நலனைக் காத்து அரசு சாதாரண மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வட்டித் தொழிலை நெறிமுறைப்படுத்துவதற்காக, 1957 ஆம் ஆண்டு பண வட்டித் தொழிலர் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் ஒரு பண வட்டித் தொழிலர் எவ்வளவு வட்டி விதிக்கலாம், என்னென்ன பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும், யார் எவ்வாறு உரிமம் வழங்க வேண்டும் என்பது போன்றவை நெறிமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்போது உள்ள விதிகளின்படி, வட்டித் தொழிலர் வருவாய்த் துறையின் மூலம் உரிமம் பெற்று, அதிகபட்சமாக பிணையம் இல்லாத கடனுக்கு 12% வட்டி வசூலிக்கலாம். ஒரு வட்டித் தொழிலர் தவறிழைத்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றத்தின் முன்னனுமதியைப் பெற்று அதன் பின்னரே குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு வட்டித் தொழிலர் அலுவலகத்தை, ஆய்வு செய்து பதிவேடுகளைப் பறிமுதல் செய்வதற்கும் நீதிமன்றத்தின் முன்னனுமதி தேவை. நீதிமன்றம்கூட, அதிகபட்சமாக ஆறு மாத சிறைத் தண்டனையோ மற்றவையோ விதிக்க முடியும். இன்றைய நிலையில், கந்து வட்டி, நாள் வட்டி, மணிக்கணக்கான வட்டி, meter வட்டி, தண்டல் போன்ற பல்வேறு பெயர்களில் பொதுமக்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுப்பதும், கடன் வாங்கியவர்கள், பணத்தைத் திரும்பச் செலுத்தத் தவறும்போது, சொல்லொணாத் தொல்லைகளைத் தந்து, சிலரைத் தற்கொலைக்கே தள்ளுமளவுக்குக் கந்து வட்டிப் பிரச்சினை, தலைவிரித்தாடியதை அறிந்ததும், இந்தக் கொடுமையை ஒழித்து, தமிழ்நாட்டு மக்களுக்கு நிரந்தரமாக நிவாரணம் வழங்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இவ்வாண்டு—ஜூன், 2003-ல்—தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த அவசரச் சட்டத்தின்மூலம், கந்து வட்டித் தொழிலில் ஈடுபடுவது, கிரிமினல் குற்றமாக்கப்பட்டு, இக்குற்றத்தில் ஈடுபடுவோர்களைக் காவல் துறை கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகுக்கப்பட்டது. குற்றவாளிக்கு நீதிமன்றத்தின் மூலம் 3 ஆண்டு வரை சிறைத் தண்டனையும், 30 ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்குமளவுக்கு வழிவகை செய்யப்பட்டது.

*பிற்பகல் 5-15*

அதுமட்டுமல்ல. கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கி, அல்லலுறும் கடன்காரர், நீதிமன்றத்தை அணுகி, நியாயமான வட்டியையும், அசலையும் நீதிமன்றத்தில் செலுத்தி, கடன் தொல்லையிலிருந்து விடுபடவும் வகைசெய்யப்பட்டது. நீதிமன்றத்தின் மூலம் கந்து வட்டிக்காரர், கட்டாயப்படுத்தி கையகப்படுத்திய சொத்துக்களையும் திரும்பப்பெற வழிவகை செய்யப்பட்டது. கந்து வட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவர், தாமாகவே முன்வந்து, தனது தவறை ஒப்புக்கொண்டு, நியாயமான வட்டியை மட்டும் வசூலிக்க ஒப்புக்கொண்டால், நீதிமன்ற ஒப்புதலுடன் குற்றவியல் நடவடிக்கையிலிருந்து விடுபடவும், இச்சட்டத்தில் இடமுள்ளது. அதுமட்டுமல்ல. கெடுபிடி வசூலில் இறங்கி, கடன் வாங்கியவருக்குத் தொல்லைகள் தந்து, கடன்தாரரையோ அல்லது அவரது குடும்பத்தாரையோ தற்கொலைக்குத் தள்ளும் கந்து வட்டிக்காரர்களைத் தற்கொலைக்கு உடந்தையாக இருந்த கிரிமினல் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் கடுமையான தண்டனை வழங்கவும், அவசரச் சட்டத்தின்மூலம் வழிவகை செய்யப்பட்டது. இந்த அவசரச் சட்டம் வந்த பின்னர், அரசு எடுத்த முனைப்பான நடவடிக்கையின் காரணமாக, அனேகர் கந்து வட்டித் தொல்லையிலேயிருந்து மீட்கப்பட்டதனை உறுப்பினர்கள் நன்றாகவே அறிவார்கள்.

இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவின் மூலம், அவசரச் சட்டத்தை நிரந்தரச் சட்டமாக்க முனைந்துள்ளோம். நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்காகவும், நல்ல நோக்கத்திற்காகவும், வறிய நிலையிலுள்ள ஏழை பொது மக்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தனது தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.





"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2003) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரம்பிகந்த அளவில் வட்டி விதிக்கப்படுவதைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) ஒரு முக்கிய பிரச்சினையை எடுத்துக்கொள்வது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது ஒரு முக்கிய பிரச்சினை பற்றி எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பத்திரிகையாளர்கள் அல்லது வேறு எவரும் அவை வளாகத்திற்குள்ளே நுழைவதோ, அல்லது அவை வளாகத்திற்கு உள்ளேயிருந்து வெளியே போவதோ கூடாது என்பதை பேரவை அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதை அவைக் காவலர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

[உறுப்பினர்கள் அனைவருக்கும் அவை உரிமைக் குழுவின் அறிக்கை (புத்தகம்) வழங்கப்பட்டது.]



முற்பகல் 5-20

## 8. அறிக்கைகள் அளித்தல்

### (அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவை உரிமை மீறல் குறித்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான அவை உரிமை மீறல் குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் குறித்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**திரு. ஜெ. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நான் Notice கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம் வந்து விடட்டும். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்,...(குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட தீர்மானங்களின்மீது நாங்கள் amendments கொடுக்க வேண்டும். எங்களுக்கு இப்போதுதான் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு, உடனே அதை ஆய்விற்கு எடுக்கிறீர்கள். இதற்கு amendments கொடுக்க time உண்டு. எனவே, எங்களுடைய திருத்தத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே இந்த இரண்டு தீர்மானங்களை மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்பி மீண்டும் யோசிப்பதற்கு அல்லது தீவிர முடிவுகளை எடுப்பதற்கு, அளிப்பதற்கு, இப்போதே இந்தத் தீர்மானத்தை மீண்டும் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான...(குறுக்கீடுகள்).

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு புத்தகங்களை இப்போதுதான் அறிக்கையாகக் கொடுத்து இருக்கிறார்கள். கொஞ்ச நேரம் படித்துப் பார்க்க வேண்டும். பொதுவாக, இதுபோன்ற முக்கியப் பிரச்சினைகள் வருகிறபோது, மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கு இதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, எல்லாம் படித்து முடித்து, அவர்களும் ஒரு திருத்தம் கொண்டுவருவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அளிப்பீர்கள் என்று சொன்னால், இதைப் படித்துவிட்டு கருத்தைச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கும். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எங்களுடைய இந்தத் திருத்தம் முன்மொழிவதை ஏற்று, இதை மீண்டும் ஒருமுறை உரிமைக் குழு பரிசீலிக்க ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக காங்கிரஸ் பேரியக்கம் கேட்டுக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான உரிமை



மீறல் பிரச்சினை குறித்து முழு அறிக்கை; அதைப்போலவே இந்து மற்றும் முரசொலி நாளிதழ் சம்பந்தமாக உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிக்கையை தற்போதுதான் அளித்து இருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் முழுவதும் படித்து கருத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாத சூழ்நிலையிலேயும் இதற்கு அவகாசம் கொடுக்கக்கூடிய வகையிலேயும், அதேநேரத்திலே இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்த இந்த முடிவினை மீண்டும் ஆய்விற்கு அனுப்ப வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி அமர்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir, அதாவது மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி சம்பந்தமாக ஏற்கெனவே இந்த அவையிலே கொடுக்கப்பட்ட தண்டனைக்கு மேலே தண்டனை கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஆகவே அத்துடன் அந்த விஷயத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி நான் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து இருக்கிறேன். அந்தத் திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பரிதி இளம்வழுதி மீது ஏற்கெனவே விதிக்கப்பட்ட தண்டனை போதுமானது என்ற அடிப்படையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மீண்டும் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, துரைமுருகன் சொல்லி விட்டார். (குறுக்கீடு) அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) தீர்ப்பு அல்ல.

அரசினர் தீர்மானம். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை. அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன, allow பண்ணுகிறீர்களா அவர்களை? (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் சொல்லிவிட்டார் உங்கள் கட்சி சார்பாக.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Speaker asked me to speak. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 5-25*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை விதி 30(2): Except as provided in these rules, no business not included in the list of business for the day shall be transacted at any sitting except business of a formal or ceremonial nature என்று இருக்கிறது. எனவே இது அவை உரிமை மீறல் பிரச்சினை என்று நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அவை உரிமை மீறல் பிரச்சினையிலே அவை உரிமைக் குழு எடுத்த முடிவுக்கு மேலே நிச்சயமாக இங்கே விவாதத்திற்கு இடம் இருக்காது. அதுமட்டுமல்ல. அதிலே திருத்தம் கொடுக்க வேண்டுமென்றால் திருத்தம் கொடுப்பதற்கு உரிய நேரத்தை நீங்கள் தரவேண்டும். எதுவுமே இல்லாமல் காலையிலே வந்த நிகழ்ச்சி நிரலிலே கிடையாது. பிறகும் நீங்கள் சொல்லவில்லை. இப்போது திடீரென்று வைத்துவிட்டு இதில் அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் முன்மொழிய வேண்டும் என்று சொல்வது சரியல்ல. எனவே தள்ளி வைக்க வேண்டும். ஒருவேளை எங்களுடைய கோரிக்கையை ஏற்று நீங்கள் மீண்டும் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக இருந்தால் சரி. இல்லாவிட்டால் இந்த உரிமை மீறல் பிரச்சினையை அடுத்த கூட்டத்தொடரில்தான் எடுக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சொல்லிவிடுகிறேன். Select Committee-யுடையது இத்றகுப் பொருந்தும். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

Provided that any member of the House may object to its being so taken into consideration if a copy of the report of the Select Committee and of the Bill, in case where it has been amended, has not been made available to the members for five days and such objection shall prevail என்று இருக்கிறது. ஆக விதி 30(2)-ன்படியும் இல்லை. இந்த நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெறவில்லை. மாலை நேரத்திலே அவை கூடுதவதாகக்கூட நாம் முடிவு செய்யவில்லை. நீங்களே மாலையில் அவை கூடும் என்று சொன்னீர்கள். அதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் வந்து இருக்கிறோம். இங்கே என்னுடைய கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொண்டு, இந்த உரிமை மீறல் பிரச்சினையை ஒன்று, உரிமைக் குழுவிற்கு மீண்டும் அனுப்புங்கள். இல்லாவிட்டால் பரிசீலனைக்கு அடுதத கூட்டத் தொடரில எடுத்துக்கொள்ளலாம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இந்த அவைக் கூட்டத்தினுடைய இறுதி நாளில் அவசரம் கருதி நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைக்கக்கூடிய அதிகாரம் பேரவைத் தலைவருக்கு உண்டு. அந்தவகையிலேதான் பேரவையின் அனுமதியுடன் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்; அரசினர் தீர்மானம்.

**THIRU S.R. BALASUBRAMONIYAN:** Ceremonial ஆக இருந்தால் சரி. It is not ceremonial.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) திரு. பரிதி இளம்வழுதி மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தாங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229(அ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

(திமுக. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்றனர்.)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பு இன்னும் வரவில்லை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"மேற்படி அறிக்கையில் உரிமைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்கண்ட பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229(ஏ)-ன்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது:

"திரு. பரிதி இளம்வழுதி அவர்களது செயல் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு நடைமுறை என்பதை இக்குழு கருத்தில்கொண்டு உறுப்பினர்கள் எந்தவிதமான அச்சுறுத்தலும் இன்றி, தங்களது கருத்துகளை அவையில் எடுத்து வைப்பதற்கு ஏதுவாகவும், இதுபோன்ற சக உறுப்பினர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நோக்கோடு அச்சுறுத்தும் வகையில் பேசுவதைத் தடுக்கும் வகையிலும், இதுபோன்ற செயல்கள் இனி வருங்காலங்களில் நடைபெறக்கூடாது என்ற எண்ணத்துடனும், மற்ற உறுப்பினர்களுக்கும் இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடனும் திரு. பரிதி இளம்வழுதி மீதான இந்த உரிமை மீறல் பிரச்சினைக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென்று பெரும்பான்மையான குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதற்கேற்ப அதிகப்படியான தண்டனை வழங்க வேண்டிய அளவிற்கு திரு. பரிதி இளம்வழுதியின் கொலைவெறி உணர்வுகள் நிறைந்த அவரது பேச்சும் செயலும் அமைந்திருந்தபோதிலும், பேரவை மாண்பினைக் கருதி திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனையாக 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை மட்டும் வழங்கலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 5-30

திரு. பரிதி இளம்வழுதி பற்றிய உரிமை மீறல் பிரச்சினையை இப்போது எடுத்துக்கொண்டிருப்பதால், தீர்ப்பு படித்து முடிக்கும் வரை அனைவரும் அவரவர்கள் இடத்திலே இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் இன்று முன்மொழியப்பட்டு, பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற

இந்தப் பிரச்சினை பற்றிய இந்தத் தீர்மானத்தின்படி, அவையில் இருக்கும் திரு. பரிதி இளம்வழுதியை, அவைக் காவலர்கள் சென்னை மாநகரக் காவல் துறையிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு ஆணையிடுகிறேன். மேற்கூறிய தீர்மானத்தின்படி, திரு. பரிதி இளம்வழுதியை சென்னை மாநகரக் காவல் துறை உடனடியாகக் கைது செய்து 30 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாக இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் கூச்சலிட்டுக்கொண்டு இருந்தனர். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)

## (ஆ) இந்து மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினை குறித்து உரிமைக் குழுவின் அறிக்கை. அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற இந்து மற்றும் முரசொலி நாளிதழ்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229(ஆ)-ன்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



**(i) இந்து நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 1–ஐ ஏற்று ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை அளித்தலும் முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று அதனை இரத்து செய்தலும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், பரிந்துரை ... கூச்சல்-குழப்பம்) பேரவை முன்னவர் அவர்கள், பரிந்துரை .... (கூச்சல்-குழப்பம்). இந்து மற்றும் முரசொலி நாளிதழ்களின் மீதான பரிந்துரை-1. (கூச்சல்-குழப்பம்) வாசியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அறிக்கையில், உரிமைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட, கீழ்க்கண்ட பரிந்துரை 1-ஐ சட்டமன்றப் பேரவை விதி 229(ஈ)-ன்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது:

இந்து நாளிதழ், சட்டமன்றப் பேரவையின் பிரதான உறுப்பினரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அவை நடவடிக்கைகளுக்கு பெரும் களங்கமும், உள்நோக்கமும் கற்பிக்கும் வகையில் கடும் உரிமை மீறல் செய்திகளை வெளியிட்டதினால், இந்து நாளிதழின் பதிப்பாசிரியர், நிர்வாகப் பதிப்பாசிரியர், பதிப்பாளர் மற்றும் வெளியீட்டாளர், கட்டுரை ஆசிரியர் மற்றும் சிறப்பு நிருபர் ஆகியோர் அவை உரிமை மீறல் செயலுக்கு உள்ளாகி உள்ளனர்.

எனவே இவ்வுரிமை மீறல் செயலுக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கலாம்:

"இந்து நாளிதழ் பதிப்பாசிரியருக்கு (Editor) ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை; நிர்வாகப் பதிப்பாசிரியருக்கு (Executive Editor) ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை; வெளியீட்டாளருக்கு (Publisher)-க்கு ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை; கட்டுரை ஆசிரியர் திரு. ஜெயந்திற்கு (Article Writer) ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை; சிறப்பு நிருபர் ராதா வெங்கடேசனுக்கு (Special Correspondent)-க்கு ஒரு வார கால சாதாரண சிறைத் தண்டனை; பத்திரிகை நிருபர்களுக்கு பேரவை நடவடிக்கைகளைக் குறிப்பெடுக்க வழங்கப்பட்டுள்ள அனுமதியை 10 அலுவல் நாட்களுக்கு ரத்து செய்தல்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்து பத்திரிகை மீதும், இந்து பத்திரிகையின் ஆசிரியர், Executive Editor, Publisher, இன்னும் சிலர் மீதும் ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்பட்டு, அதனை உரிமைக் குழு ஆய்வு செய்து, என்ன தண்டனை வழங்கலாம் என்று இப்போது தெரிவிக்கப்பட்டது. இது என் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஆதலால் என்னைப் பற்றித்தான் அவர்கள் தவறாக எழுதி இருக்கிறார்கள் என்பதால், இநதத் தண்டனையை வலியுறுத்த நான் விரும்பவில்லை. ஆகவே இநத உரிமை மீறல் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்து பத்திரிகையாளர்களுக்கும், Editor, Executive Editor, இன்னும் சிலர் மீது இப்போது அறிவிக்கப்பட்டுள்ள தண்டனையை மட்டும் வாபஸ் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முடிவு பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், பரிந்துரை-2.

(திமுக. உறுப்பினர்கள் எழுந்துநின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சற்று அமைதியாக இருந்தால் இங்கே என்ன சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். இப்போது இரண்டாவதாக எடுத்துக்கொண்ட உரிமை மீறல் பிரச்சினை என் சம்பந்தமாக, இந்து பத்திரிகை மற்றும் முரசொலி பத்திரிகை எழுதியது பற்றியதாகும். அதில் தண்டனையை மட்டும் நான் வலியுறுத்த வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். ஆகவே அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)





**(ii) இந்து நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 2-ஐ ஏற்று 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முனைவர் அவர்கள், பரிந்துரை 2. (கூச்சல்--குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அறிக்கையில் உரிமைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்கண்ட பரிந்துரை 2-ஐ சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது. "இந்து நாளிதழ்" 25-4-2003 தேதியிட்ட தலையங்கம் பேரவையின் உரிமையின் பிரதான பாதுகாவலரான பேரவைத் தலைவரின் நடவடிக்கைக்கும் பேரவையின் உரிமைக் குழுவின் நடவடிக்கைக்கும்..... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதன் மூலமாக ஒட்டுமொத்தப் பேரவைக்கும் House as a whole பெரும் களங்கமும், உள்நோக்கமும் கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேரவை நடவடிக்கைகளுக்கு களங்கமும், உள்நோக்கமும் கற்பிக்கும் வகையிலும் அவை உரிமையை முழுவதும் மீறும் வகையிலும், ராதா வெங்கடேசன் மற்றும் ஜெயந்த் ஆகியோர் ஏற்கெனவே எழுதியுள்ள செய்தி மற்றும் கட்டுரை ஆகியவற்றை நியாயப்படுத்தி தலையங்கத்தின் ஒரு பகுதியாக எழுதப்பட்டுள்ளது அவையின் ஒட்டுமொத்த உரிமையை மீறுகிற வகையில் அமைந்துள்ளது. இவை அனைத்தும் அவையை ஒட்டுமொத்தமாக அவமதிப்புக்கு உள்ளாக்கி (gross act of contempt of the House as a whole) அவையின் உரிமையை முழுவதுமாக மீறுகிற gross act of breach of privilege of the House as a whole என்னும் வகையில் செய்திகள் இருக்கின்ற காரணத்தால், இந்து நாளிதழின் பதிப்பாசிரியர் (Editor), நிர்வாகப் பதிப்பாசிரியர் (Executive Editor), வெளியீட்டாளர் (Publisher), கட்டுரை ஆசிரியர் (Article writer) வி. ஜெயந்த் மற்றும் சிறப்பு நிருபர் (Special Correspondent) ராதா வெங்கடேசன் ஆகியோர் தண்டனைக்குரிய அவை உரிமை மீறல் குற்றத்தைப் புரிந்துள்ளனர். எனவே இந்த உரிமை மீறிய செயலுக்கு கீழ்க்கண்ட தண்டனையை வழங்கலாம்:

*1. இந்து நாளிதழின் பதிப்பாசிரியர், Editor-க்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை.*

[திரு. சி. பொன்னையன்] [2003 நவம்பர் 7

2. நிர்வாகப் பதிப்பாசிரியருக்கு-Executive Editor-க்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை.

3. வெளியீட்டாளர், Printer and Publisher-க்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை.

4. ராதா வெங்கடேசன், சிறப்பு நிருபருக்கு Special Correspondent-க்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை.

5. கட்டுரை ஆசிரியர் திரு. வி. ஜெயந்திற்கு Article Writer-க்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை.

6. பத்திரிகை நிருபர்களுக்கு பேரவை நடவடிக்கைகளைக் குறிப்பெடுக்க வழங்கப்பட்டுள்ள அனுமதியை 15 அலுவல் நாட்களுக்கு இரத்து செய்தல்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**(iii) முரசொலி நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் பரிந்துரை எண் 3–ஐ ஏற்று 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், பரிந்துரை 3.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அறிக்கையில் உரிமைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்கண்ட பரிந்துரை 3-ஐ சட்டமன்றப் பேரவை விதி 229(ஈ)-ன்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது:

"முரசொலி நாளிதழ் பேரவை உரிமையின் பாதுகாவலரான பேரவைத் தலைவரின் நடவடிக்கைக்கும் பேரவையின் உரிமைக் குழுவின் நடவடிக்கைக்கும், அதன் மூலமாக ஒட்டுமொத்தப் பேரவைக்கும் (House as a whole) பெரும்களங்கமும், உள்நோக்கமும்



2003 நவம்பர் 7] [திரு. சி. பொன்னையன்]

கற்பித்து, அவையை ஒட்டுமொத்தமாக அவமதிப்பிற்கு உள்ளாக்கி gross act of contempt of the House as a whole அவையின் உரிமையை ஒட்டுமொத்தமாக Gross act of breach of privilege மீறுகிற வகையில் செய்திகள் வெளியிட்டுள்ளதால் முரசொலி நாளிதழ் ஆசிரியர்-வெளியிடுபவர் தண்டனைக்குரிய அவை உரிமை மீறிய குற்றத்தைப் புரிந்துள்ளார். இந்த அவை உரிமை மீறிய செயலுக்கு முரசொலி நாளிதழ் ஆசிரியர்-வெளியீட்டாளர், திரு. எஸ். செல்வம் அவர்களுக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கலாம்:

"முரசொலி நாளிதழ் ஆசிரியர்-(எடிட்டருக்கு) வெளியீட்டாளர் திரு. எஸ். செல்வம் அவர்களுக்கு, 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனையும், முரசொலி நிருபருக்கு பேரவை நடவடிக்கைகளை குறிப்பு எடுக்க வழங்கப்பட்ட அனுமதியை 10 அலுவல் நாட்களுக்கு இரத்து செய்வது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 5-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் இன்று முன்மொழியப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இந்து மற்றும் முரசொலி மீதான உரிமைப் பிரச்சினை பற்றிய தீர்மானத்தின்படி, இந்து பத்திரிகை பதிப்பாசிரியர், நிர்வாகப் பதிப்பாசிரியர், சிறப்புச் செய்தியாளர், கட்டுரை ஆசிரியர் மற்றும் முரசொலி ஆசிரியர் ஆகியோரை சென்னை மாநகரக் காவல் துறை உடனடியாகக் கைது செய்து 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாக இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் நின்று கொண்டிருந்தனர். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் இரண்டாவது தீர்மானம் குறித்து, முரசொலி, இதிலிருந்து விடுவிக்கப்படுகிறதா அல்லது House as a whole தலையங்கத்தின் மூலமாக அவைக்கு ஒட்டுமொத்தக் களங்கமும், அவைத் தலைவருக்குக் களங்கமும், அவை உரிமைக் குழுவிற்கு களங்கமும் கற்பித்த இந்து நாளிதழ் தலையங்கத்தை மறு வெளியீடு செய்த முரசொலிக்கு உரிய தண்டனை எந்நிலை என்ற விளக்கத்தைக் கேட்கிறார் என்று கருதுகிறேன். அந்த 15 நாட்கள் தண்டனை எப்படி இந்து பத்திரிகைக்குப் பொருந்துமோ அதுவே முரசொலிக்கும் பொருந்தும் என்றுதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2003), மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2003) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@6-11-2003 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்* வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காமல் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தனர்)

மாண்புமிகு முன்வரிசைத் தலைவர்கள், திரு. துரைமுருகன், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தயவுசெய்து அமருங்கள். தயவுசெய்து அமருங்கள். இல்லாவிட்டால் வெளியேற்ற வேண்டிய நிலை வரும். அவைக் காவலர்களை விட்டு வெளியேற்ற வேண்டிய நிலை வரும். தயவுசெய்து அமருங்கள்.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் - தீர்வை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2003), மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2003) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 5-45

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@6—11—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2003) நிறைவேற்றப் பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (கூச்சல்-குழப்பம்)

### (ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2003). திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வி.கே. லட்சுமணன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் இந்த அவசரச் சட்ட முன்வடிவை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். அவர்களிலே ஒருவர் தீர்மானத்தை முன்மொழியலாம்.



(தீர்மானம் முன்மொழியப்படவில்லை)

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2003) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@5—11—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (ஏ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2003) மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2003) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@06-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (கூச்சல் குழப்பம்)



## (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2003). திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், வி.கே. லட்சுமணன் ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள். அவர்களிலே ஒருவர் இந்தத் தீர்மானத்தை முன்மொழியலாம். (கூச்சல்-குழப்பம்)

(தீர்மானம் முன்மொழியப்படவில்லை.)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், தீர்மானத்தை முன்மொழியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2003) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 5-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (கூச்சல் - குழப்பம்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

---

@05-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2003) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



(தி.மு.க.-வைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

**(ஏ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2003). திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் இந்த அவசரச் சட்டத்தினை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள், தீர்மானத்தை முன்மொழியலாம்.

(தீர்மானம் முன்மொழியப்படவில்லை).

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2003) ஆய்வுக்கு @ எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 06-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு [சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2003] நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (கூச்சல்-குழப்பம்)

## (ங) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு [சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2003], மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு [சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2003] @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (கூச்சல்-குழப்பம்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 06-11-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2003 நவம்பர் 7

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2003) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2003 நவம்பர் 7]

## 10. தனிநபர் தீர்மானமும் வாக்கெடுப்பும்

**நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரையின் (c) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளித்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தனியார் அலுவல். திரு. சந்தானம் அவர்கள் தனித் தீர்மானத்தை முன் மொழியலாம்.

பிற்பகல் 5-55

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் தனிநபர் தீர்மானத்தை பேரவை விதி 170 (1)-ன்கீழ் இவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ள முன் அறிவிப்புக்கு விளக்கம் அளித்து அவையில் முன்மொழியவும், நிறைவேற்றவும் அனுமதி கோர விரும்புகிறேன்.

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஐந்தாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின், காப்புரையின் (c) பகுதியின் வரம்பிற்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல் - குழப்பம்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-56 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடபபெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.



## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*32.* மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் தொழிற்சாலை மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி - மேம்பாட்டு அமைப்பு, மத்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின் காவல் துறை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை காவல் துறைத் தலைமை இயக்குநர் மூலம் பாதுகாப்பு தொடர்புடைய பொருட்களை வாங்குவதற்காக அவசரச் சட்டத்தை அறிவிக்கையிடுவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 28-05-2003 ஆம் நாளிட்ட 166 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*33.* 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நிதிச் (சம்பளங்கள்) துறையின் 09-10-2003 ஆம் நாளிட்ட 412 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவு மறைவற்ற தன்மை குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*34.* 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர் தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1963) அட்டவணை-II-ல் குறிப்பிட்டப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும், இச்சட்டமானது 01-07-2003 முதல் பொருந்தும் என ஆணையிடுவது குறித்து வருவாய்த் துறையின் 30-06-2003 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரிவிதிப்பு மற்றும் கூடுதல் தண்ணீர்-தீர்வைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1963) 16 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*35.* தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] . (தமிழ், ஆங்கிலம்)

[2003 நவம்பர் 7

36. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை, ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

37. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

38. தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

39. தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள், [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

40. 29-08-2002 ஆம் நாளன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் மோதல் சம்பவங்கள் குறித்தும் அவற்றுக்கு வழிவகுத்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட திரு. எஸ். நடராஜன் (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. மதுரை மாவட்டம், மேலூர், அரசினர் கலைக் கல்லூரி அருகே 03-09-2002 ஆம் நாளன்று சில மாணவர்கள், பொது மக்கள் மற்றும் காவல் துறையினர் காயமுற்ற மோதல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட திரு. கே. சுப்பிரமணியன் (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2003 நவம்பர் 7]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

58. மழை நீர் சேகரிப்பு குறித்த 'சிறு நூல்'. (ஆங்கிலம்)

59. 2001-2002 ஆம் ஆண்டிற்கான மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

60. 2003-2004 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினை ஒட்டிய வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

61. 2003 ஆம் ஆண்டு அரசமைப்புச் (தொண்ணூற்று ஐந்தாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான செய்தி குறித்து மாநிலங்களவை செயலாளர்-பொது அவர்களிடமிருந்து வரப்பெற்ற 17-06-2003 ஆம் நாளிட்ட RSI/8/2003-B எண்ணுள்ள கடிதத்தின் நகல்.

62. 2003 ஆம் ஆண்டு அரசமைப்புச் (தொண்ணூற்று ஐந்தாவது திருத்த) சட்டமுன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு).

63. 2003 ஆம் ஆண்டு அரசமைப்புச் (தொண்ணூற்று ஐந்தாவது திருத்த) சட்டமுன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

64. 07-03-2003 மற்றும் 06-05-2003 ஆகிய நாட்களில் அரசமைப்புச் (தொண்ணூற்று ஐந்தாவது திருத்த) சட்டமுன்வடிவின்மீது மக்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

65. 08-05-2003 ஆம் நாளன்று அரசமைப்புச் (தொண்ணூற்று ஐந்தாவது திருத்த) சட்டமுன்வடிவின்மீது மக்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

66. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) வரிசை எண்கள் 1 முதல் 50 வரை

67. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட விவர அறிக்கைகள் (மூன்று)

# இணைப்பு

(81 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்றவை * (1 முதல் 3 வரை)**

**1. வேலூர் நகராட்சி மீன் மார்க்கெட் கழிவுகளினால் துர்நாற்றம் அதிகமாகி சுகாதாரக் கேடு விளைவிப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு எம்.சி. சம்பத் (உள்ளாட்சித் துறை)**

**அறிக்கை**

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான மீன் மார்க்கெட்டில் உற்பத்தியாகும் கழிவுகள் "எக்ஸ்னோரா" என்ற தொண்டு நிறுவனம் மூலம் அகற்றப்பட்டு பைபாஸ் ரோடில் உள்ள கழிவு நீரேற்றும் நிலைய வளாகத்தில் தரம் பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் உரமானது தற்காலிகமாக அங்கேயே சேமித்து வைக்கப்படுவதால் துர்நாற்றம் ஏற்படுகிறது. நகராட்சியால் அவ்வப்போது, சேமித்து வைக்கப்படும் உரத்தினை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துர்நாற்றத்தைத் தவிர்க்கும் வகையில் பினாயில், பிளீச்சிங் பவுடர் மற்றும் கிருமிநாசினிகள் தெளித்து துர்நாற்றம் கட்டுப்படுத்தப் பட்டு வருகிறது. தொண்டு நிறுவனம் கேட்டுக்கொண்டதன் பேரில் சுற்றித்திரியும் பிராணிகளால் உரம் தயாரிப்பில் ஏற்படும் தொல்லைகளைத் தடுக்கச் சுற்றுச்சுவர் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர சதுப்பேரியில் ஒரு நிரந்தர உரக் கொட்டகை கட்ட நகராட்சி உத்தேசித்துள்ளது.

---

*இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவரஅறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



**2. தமிழக விவசாயிகளுக்குச் சேரவேண்டிய கரும்புப் பணத்தை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வழங்காமல் காலம் கடத்துவதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.**

**உறுப்பினர் : திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர் : மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் (தொழில் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

2001-2002 ஆம் அரவைப் பருவத்திற்கான கரும்பு நிலுவைத் தொகை முழுவதையும் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்கிவிட்டன.

2. 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில் 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் மற்றும் 19 தனியார் சர்க்கரை ஆலைகளும் அரவை மேற்கொண்டன.

3. அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் சர்க்கரை உற்பத்திச் செலவு அதிகரித்தபோதிலும் வெளிச் சந்தையில் சர்க்கரை விற்பனை விலை உற்பத்திச் செலவைவிடக் குறைவாக இருந்ததால் சர்க்கரை ஆலைகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. இதனால் காசுக் கடன் கணக்கில் கடன் பெறும் வாய்ப்பில்லாமல் விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய கரும்பு விலையை வழங்க இயலவில்லை. எனவே சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து ரூ. 115.59 கோடி கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு நிதியுதவி கோரி சர்க்கரைத் துறை இயக்குநர் சமர்ப்பித்த கருத்துருவை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிசீலித்து, மேற்கண்ட தொகைக்கான நிதியுதவி கேட்டு மத்திய அரசுக்கு, 28-07-2003 தேதியில் கடிதம் அனுப்பியுள்ளார்.

4. 30-09-2003 வரை தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் 166.38 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்து 9.87 சதவிகிதம் சராசரி கட்டுமானத்துடன், 16.43 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்தன. 2002-2003 ஆம் அரவைப் பருவத்திற்கு 8.5 இலட்சம் சதவிகித கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 695 என சட்டப்பூர்வ குறைந்தபட்சக் கரும்பு விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்தது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில் 30-09-2003 முடிய 52.81 மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டது. இதற்கென ரூ. 414.21 கோடி கரும்பு விலை

[2003 நவம்பர் 7

வழங்க வேண்டியுள்ளது. சர்க்கரை விற்பனை மூலமும், மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து ஆலைகள் பெற்றிருந்த காசுக் கடனிலிருந்தும் கரும்பு கிரயத் தொகை வழங்கப்பட்டு நிலுவைத் தொகை குறைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு விலையில், ரூ. 346.66 கோடி வழங்கியதுபோக, 31-10-2003-ல் ரூ. 66.29 கோடி நிலுவை உள்ளது.

5. 06-10-2003-ல் மத்திய அரசு ஒரு செய்திக் குறிப்பு (Press Release) வெளியிட்டது. அந்த செய்திக் குறிப்பில் 2002-2003 ஆம் ஆண்டு அரவைப் பருவ கரும்பு நிலுவைத் தொகையை வழங்குவதற்கு ஏதுவாக கூடுதல் வர்த்தகக் கடன் (additional market borrowing) பெற்று அதனை 4% வட்டி விகிதத்தில் சர்க்கரை ஆலைகளுக்குக் கடன் வழங்க மாநில அரசுக்கு அனுமதி வழங்கப்படும். இதனை நடைமுறைப்படுத்த மைய அரசின் பின்பற்றத் தக்க வழி முறைகள் (Guidelines) எதிர்பார்க்கப்படுகின்றன.

**3. குமரி மாவட்ட மீனவர்கள் கேரள மாநில மீனவர்களால் தாக்கப்படும் நிலை மற்றும் தேங்காய்ப்பட்டினம் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்**

**உறுப்பினர்கள் :** **திரு. சி. ஞானசேகரன்**

**டாக்டர் தே. குமாரதாஸ்**

**அமைச்சர் :** **மாண்புமிகு திரு எம். ராதாகிருஷ்ணன் (மீன்வளத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1400-1500 விசைப் படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரையில் வங்காள விரிகுடாவில் கன்னியாகுமரி நகருக்கு அருகில் சின்னமுட்டம் என்ற ஒரு மீன்பிடித் துறைமுகம் மட்டுமே உள்ளது. இத்துறைமுகம் 200 முதல் 250 விசைப் படகுகளை நிறுத்துவதற்கு ஏற்றவகையில் உள்ளது. கன்னியாகுமரி நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள மீனவர்கள் இத்துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றனர். இம்மாவட்டம் 68 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையையும் 1.5 இலட்சம் மீனவ மக்கட் தொகையையும் கொண்டதாகும்.



2003 நவம்பர் 7]

இம்மாவட்டத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள முட்டம், குளச்சல், தேங்காய்ப்பட்டினம், தூத்தூர் ஆகிய பகுதிகளுக்காக அரபிக் கடலில் மீன்பிடித் துறைமுகம், இறங்குதளம் ஆகிய வசதிகள் இல்லை. ஆகையால் இக்கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களின் சுமார் 1200 விசைப்படகுகள், பிடித்த மீன்களை இறக்குவதற்கும், டீசல், பனிக்கட்டி மற்றும் இதர பொருட்களைப் பெறுவதற்கும் வசதியின்றி உள்ளன. இறங்குதள வசதி இன்மையால், முட்டம், குளச்சல், தேங்காய்ப்பட்டினம் மீனவர்களின் விசைப் படகுகள், ஆழ்கடல் மீன்பிடிப்பிற்குப் பிறகு கேரளாவில் உள்ள கொல்லம், நீண்டகரை, கொச்சி பகுதிகளுக்கு மீன்களை இறக்கச் செல்லுகின்றன. 40 ஆண்டுகளுக்கு மேலாக இத்தகைய செயல்பாடு நடைமுறையில் உள்ளது.

சமீபகாலத்தில் கொல்லம், கொச்சி பகுதியைச் சேர்ந்த கேரள மீனவர்கள், அங்கு நிலவும் பலதரப்பட்ட சூழ்நிலைகளாலும், எதிர்ப்புகளாலும் தங்கள் பகுதியில் தமிழக மீனவர்கள் கரை இறங்க தடை செய்கின்றனர். நம் மீனவர்களை அவர்கள் தாக்கியும் காயப்படுத்தியும், விசைப்படகினை இவ்வாண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சேதப்படுத்தியும் உள்ளனர்.

சென்ற ஆண்டு ஜுலை 2002-லும் இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றன. இதனால் கன்னியாகுமரி மீனவர்களுக்குச் சொந்தமான சுமார் 80 படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் கொல்லத்தில் கேரள மீனவர்களால் தீயிட்டு அழிக்கப்பட்டன. நட்ட மதிப்பீடு ரூ. 49.80 இலட்சமாகும்.

இது தொடர்பாக மாண்புமிகு தமிழக மீன் துறை அமைச்சர் கேரள அரசின் மாண்புமிகு மீன் துறை மற்றும் சுற்றுலா அமைச்சருக்கு பாதிக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் நட்டஈடு பற்றி தெரிவிக்கக்கோரி கடிதம் எழுதியுள்ளார். கொல்லம் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண துணைக் குழு நிர்மாணிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரும் இக்குழுவில் ஓர் உறுப்பினர் ஆவார். ஆனால் இச்செயல்பாடு சரிவர இயங்கவில்லை. தற்சமயம், கன்னியாகுமரி மாவட்ட மீனவருக்குச் சொந்தமான விசைப் படகுகளை கேரள மீனவர்கள் கடலில் வைத்து மீண்டும் சேதப்படுத்தியும் தீ வைத்தும் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு உயிர் மற்றும் பொருட்களுக்கான பாதுகாப்பு இல்லை. 2003ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இத்தகைய

[2003 நவம்பர் 7

நிகழ்வுகளால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு 15 விசைப்படகுகளும் எரித்து சேதமாக்கப்பட்டு சுமார் ரூபாய் 1 கோடி அளவில் நட்டம் ஏறபடுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு கேரள முதல்வரை உடனடியாக கடிதம் வாயிலாகத் தொடர்பு கொண்டு மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாடு மீனவர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புக் கொடுக்க கோரியுள்ளார். மேலும், மீன்பிடித் துறைமுகம் மற்றும் இறங்குதள வசதிகளை கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு ஏற்படுத்தித் தரும் வரை மீன்பிடித் தொழில் பாதிக்கப்படாத வண்ணம் அவர்களுக்கு உதவக் கோரியுள்ளார்.

தமிழக அரசு அலுவலர்கள் கேரள அரசின் மீன் துறை இயக்குநர் மற்றும் மீன் துறைச் செயலர், கொல்லம் மற்றும் கொச்சி மாவட்ட ஆட்சியர்களை இந்த மாதத்தில் பலமுறை தொடர்பு கொண்டு அவர்களது ஒத்துழைப்பைக் கோரி தமிழக மீனவர்கள் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புக் கொடுத்து பிரச்சினைகளைத் தீர்க்கும்படிக் கேட்டுக்கொண்டனர்.

26-10-2003 அன்று தமிழக அரசின் மாண்புமிகு சுகாதார அமைச்சர், தமிழக அரசின் மீன் துறைச் செயலர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் உட்பட இதர அலுவலர்களுடன் கன்னியாகுமரி சென்றார். மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து சங்கப் பிரதிநிதிகளை தூத்தூர், தேங்காய்ப்பட்டினம், குளச்சல், முட்டம், பகுதிகளுக்குச் சென்று சந்தித்து பிரச்சினைகளைக் குறித்து விவாதித்தார். முட்டம், குளச்சல், தேங்காய்ப்பட்டினம், பகுதியைச் சார்ந்த சுமார் 1200 படகுகள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லவில்லை. எனவே கன்னியாகுமரி முதல் நீரோடி வரையிலான 43 கிராமங்களில் இதனால் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கான இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க தமிழக அரசு தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு ஏற்கனவே தீர்மானித்துள்ளது. தமிழக அரசின் மாண்புமிகு மீன் துறை அமைச்சரும் மே 2003-ல் சட்டமன்றத்தில் இதனை அறிவித்தார்.



2003 நவம்பர் 7]

இதுதொடர்பாக மாதிரி ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி மண் அளவை தற்போது நடைபெற்று வருகிறது. திட்டம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மண் அளவை பணி முடிந்தவுடன் மைய அரசுக்கு ஒப்புதல் மற்றும் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பி வைக்கப்படும். மொத்த திட்ட மதிப்பீடு சுமார் ரூ. 35 கோடி ஆகும்.

மேலும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் 02-11-2003 அன்று தூத்தூர் மற்றும் தேங்காய்ப்பட்டினத்திற்குச் சென்று தேங்காய்ப் பட்டினத்தில் அமையவுள்ள மீன்பிடித் துறைமுக மண் ஆய்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டனர். மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள், ஆகியோரிடமிருந்து இப்பிரச்சினை குறித்து கேட்டறியப்பட்டது.

185086